www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

Jude

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර් ஆக.30–செப்.05,1998

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 272

## காய் நகர்த்திய பிரபா

## சந்திரிக்காவின் தடுமாற்றம்



## கொக்காவில் தாக்குதல்



## இமேஜில் வீழ்ந்த குண்டு





## மோனிகா குண்டு

## ப்ரீதா பீடா



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## செயற்கை நெருக்கடிகள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

யாழ் குடாநாட்டுக்கு
பொருட்களைக் கொண்டுசென்ற
தமிழ் வர்த்தகர்கள்
பாரிய நஷ்டத்துக்கு
உள்ளாகியிருப்பது உண்மை!

கடலில் மூழ்கியது
கப்பல் மட்டுமல்ல;
தங்கள் வாழ்க்கையும்தான்!
என்று சிறு வர்த்தகர்கள்
பலர் இடிந்துபோயுள்ளனர்!

'பிரின்ஸெஸ் கேஷ்' கப்பல்
பொறுப்பற்ற வேகத்தில்
எடுக்கப்பட்ட முடிவால்
அழிக்கப்பட்டுவிட்டது!

கப்பலையோ, அதிலிருந்த
மாலுமிகளையோ பற்றி
அக்கறையின்றி
முடிவு செய்த அரசு,
வர்த்தகர்களின் நஷ்டத்தை
நிவர்த்தி செய்வதில்
உண்மையான அக்கறை
காட்டுமா? என்பது சந்தேகம்!

தமிழ் வர்த்தகர்களின்
இழப்பும், கவலையும்
புரிந்துகொள்ளக்கூடியதே!

அதேசமயம்
சில தமிழ் வர்த்தகர்கள்
நடந்துகொள்ளும் முறையும்
கவலை தருகிறது!

பிரின்ஸெஸ் கேஷ்
அழிக்கப்பட்ட சூட்டோடு
யாழில் பொருட்களின்
விலையும் சூடாகியது!

செயற்கையான தட்டுப்பாடு
ஒன்றை உருவாக்கி
விலையை உயர்த்த
முற்பட்ட செயல்
'எரிகிற வீட்டில்
பிடுங்குவது இலாபம்!'
என்பதற்கு ஒப்பானதே!

தமது இழப்புக்கு
நஷ்டஈடு கோரி
வர்த்தகர்கள் போராடியது
நியாயமானதே!

அந்த நியாயத்தையும்
சேதப்படுத்துவதுபோல
வர்த்தகர்கள் சிலர்
செயற்பட்டமை
கண்டிக்கத்தக்கதேயாகும்!

அத்தியாவசியப் பொருட்கள்
போதியளவு கையிருப்பில்
இருப்பதாக யாழ் அரச அதிபர்
கூறியபோதும்,
ஏறிய விலைகள் இறங்கவில்லை!

வர்த்தகர்கள் வேறு-
மக்கள் வேறல்ல!

'போதும் பட்டதுயர்!'
'வேண்டாம் தன்மானம்!'
'தேவையில்லை தீர்வு!'
என்று தமிழ்மக்கள்
தலைகுனிந்து நிற்பர்
என்றுதான் பேரினவாத
சக்திகள் கருதுகின்றன!

எந்தளவுக்கு துன்பமும்
நெருக்கடிகளும்
அதிகரிக்கின்றனவோ, அந்தளவுக்கு
தமிழ் மக்கள் அடிபணிவர்
என்பது அவர்கள் நினைப்பு!

அதனால்தான் போரை
தீவிரப்படுத்துமாறு,
பேரினவாத முகாமில் இருந்து
உரத்த குரல் எழுகிறது!

'மூச்சு விடக்கூட
அனுமதிக்காதீர்கள்!
மூழ்க வையுங்கள்!'
என்பதுதான் அந்தக்
குரலுக்கு அர்த்தம்!

இந்நிலையில்,
நெருக்கடிகளை எப்படி
வெற்றிகொள்ளலாம்
இணைந்து நின்று
சமாளிக்கலாம் என்பதே
தமிழ் பேசும் மக்களின்
ஒத்த சிந்தனையாக
இருக்க வேண்டும்!

அதனைவிடுத்து
நெருக்கடிகளை
செயற்கையாக உண்டாக்கி,
மக்களை விரக்தி நிலைக்குத்
தள்ளுவதற்கு
எத் தரப்பும் முயலக்கூடாது!

இலாபம் இன்றி
வியாபாரம் செய்யுமாறு
நாம் கூறவில்லை!
"கொள்ளை இலாப ஆசையில்
செயற்கை நெருக்கடிகளை
ஏற்படுத்தி விலைவாசியை
விண்ணுக்கு உயர்த்தவேண்டாம்!"
என்பதையே கூறுகிறோம்!

-★-

பிரின்ஸெஸ் கேஷ் கப்பலில்
இருந்து மீட்கப்பட்ட
இலங்கை மாலுமிகள்
புலிகளிடம் இருக்கின்றனர்!

இந்திய மாலுமிகளை
விடுவித்த புலிகள்
அவர்களை விடுவிக்கவில்லை!

புலிகளிடம் உள்ள
இலங்கை மாலுமிகள்
உளவாளிகளோ, அவர்களது
எதிரிகளோ அல்ல!

அவர்களை விடுதலை
செய்வதே முறையானது!
இல்லையெனில்
இந்திய மாலுமிகளுக்கு
அரசு புலிச்சாயம் பூசியதற்கும்
இதற்கும் வித்தியாசமிருக்காது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## மனித வாழ்க்கைக்கு உறுதுணை

உலகில் பிறவி என்னும் மாயையில் உழன்று கொண்டிருக்கும் நமக்கு இன்பம் வேண்டும்; நிம்மதி வேண்டும். ஆனால் துன்பங்கள் வேண்டாம். நோயற்ற வாழ்வு வேண்டும். ஞான ஒளி நம் வாழ்க்கையில் வழி காட்ட வேண்டும் என்று எண்ணுகிறோம்.

நமது இந்த எண்ணங்கள் தவறானவை ஆகாது. ஆனால் இந்த எண்ணங்கள் ஈடேறுவதற்கு இந்து மத சாஸ்திர-சம்பிரதாயங்களையும், கர்மானுஷ்டானங்களையும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். ஆண்டவனின் ஆராதனைகள் எந்த அளவிற்கு முக்கியமோ, அந்த அளவிற்கு ஆசாரத்தையும் கடைப்பிடிக்கவேண்டும். ஆசார அனுஷ்டானங்களைக் கடைப்பிடிப்போருக்கு நல்ல தேஜஸ் உண்டாகும்.

புராணங்களில், இதிகாசங்களில் சொல்லப்பட்டுள்ள ஆசார அனுஷ்டானங்களும், அரிய வழிபாடுகளும் நமக்கு நிலையான பேரின்பத்தைத் தரும் ஆன்மீக போதனைகளாகும்.

அந்த ஆன்மீக போதனைகளுக்காகத்தான் ஆலயங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஆலயத்தில் அனுதினமும் ஐந்து வகையான வழிபாடுகள் நடைபெறும். அதேபோல நாமும் ஐம்புலன் அடக்கத்துடன் ஒழுகுதல் வேண்டும்.

இந்த நிலையில் மனித வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைவது ஆலயமும், வழிபாடுமே.

தொகுப்பு: அ. அரசரெத்தினம், சேனையூர்-06.



## பிரார்த்தனைகள் ஏன் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை!

"என்னிடத்தில் கேளுங்கள். தவறாமல் கொடுக்கிறேன். உங்கள் பிரார்த்தனையை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று அல்லாஹ் கூறியிருந்தும் நாங்கள் கேட்கும் துஆக்கள் ஏன் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை?" என்று இப்றாகிம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களிடம் மக்கள் கேட்டபோது 'பத்து விடயங்களை விட்டும் உங்களுடைய இதயங்கள் இறந்துவிட்டன.' என்று பதிலுரைத்தார்கள். அவையாவன...

1. நீங்கள் அல்லாஹ்வை அறிந்திருக்கிறீர்கள்; ஆனால் அவன் கூறிய கடமைகளை நிறைவேற்றுவதில்லை.
2. அல்லாஹ்வின் வேதத்தை ஓதுகிறீர்கள்; ஆனால் அதன்படி நீங்கள் செயலாற்றுவதில்லை.
3. ஷைத்தானை எதிரி என்று கூறுகிறீர்கள்; ஆனால் அவனையே நண்பனாக்கிக் கொண்டீர்கள்.
4. நபி (ஸல்) அவர்கள் மீது அன்பிருக்கிறதாய் பேசுகிறீர்கள்; ஆனால் அவர்களுடைய போதனைகளையும் நடைமுறைகளையும் பேணுவதில்லை.
5. சொர்க்கத்தின் மீது ஆசைப்படுகிறீர்கள்; ஆனால் அதை அடைய நன்மைகள் செய்வதில்லை.
6. நரகத்திற்குப் பயப்படுகிறீர்கள்; ஆனால் பாவங்களையே செய்கிறீர்கள்.
7. மரணம் உண்மை என்று நம்புகிறீர்கள். ஆனால் அதற்காகக் காத்திருப்பதில்லை.
8. அடுத்தவரைக் குறை கூறுகிறீர்கள். ஆனால் உங்கள் குறையை எப்போதும் மறந்துவிடுகிறீர்கள்.
9. அல்லாஹ்வின் உணவைச் சாப்பிடுகிறீர்கள்; ஆனால் அவனுக்கு நன்றி நவில்வதில்லை.
10. இறந்தவர்களை அடக்கம் செய்கிறீர்கள். ஆனால் நீங்கள் படிப்பினை பெறுவதேயில்லை.

மு.ஃப்லீஹா இசார்தீன், அட்டாளைச்சேனை-10.

## கவிதைப் போட்டி இல.269

### பரிசுக்குரிய கவிதை

### குற்றங்கள்!

வழி மாறி...
விழிக்கும் பிள்ளை
சுற்றமுடன்; அன்னை
சுற்றிவளைப்பில் !

க. நாகராசா-துணாவில்,
சாவகச்சேரி.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

**வழியிது!**

அப்பா போன வழியிது-
அன்புக் குழந்தை காட்டுது;
அப்பா எப்போ வருவாராம்?
ஆசை முத்தம் தருவாரா??
என்றே பிள்ளை கேட்குது!
ஏங்கியே நின்று தவிக்குது!!

காரைதீவூர் சிவம்- குருக்கள்மடம



**பொறுத்திரு!**

ஓடி ஒளிந்து விடு பாப்பா!
ஓயாத ஷெல் விழும் பாப்பா!
கூடி விளையாடலாம் பாப்பா-
ஜயசிக்குறு முடிந்தவுடன் பாப்பா!

பூண்டுலோயா வில்லியம்

**அஞ்சலி**

முகம் காட்ட விரும்பாத
முத்தமிழ்ச் சிறுமி நான்; போரில்
முகம் இழந்தவருக்காய்
அஞ்சலி செலுத்த வந்தேன்!

கவிஞன் 'திக்கவயல்'-மன்னார்.

**ஏங்கும் எதிர்காலம்**

காலமே!
கை நீட்டும் இப் பிஞ்சிடம்
எதைத் திணிக்கப் போகிறாய்?
பூவையும் புத்தகங்களையுமா?
அல்லது
புகையும் துப்பாக்கியையுமா?

பாலகுமார்-மொரட்டுவை.

**அடி-மிதிவெடி**

ஓர் அடி வைத்தால்
வெடிக்குமாம் மிதிவெடி!
நானெப்படி
நடை பழகுவது?

சஹானா பிறேமாங்கதன்-
மட்/தாண்டவன்வெளி.

**புறாவே... வா....!**

இதயமதைக் கழட்டி வைத்து,
இலங்கைக்குள் நுளைவோர்தான்-
இந்தியத் தலைவர்களோ?
யானைகொண்டு வந்தவர்கள்,
புறாவைக் கொண்டு வந்திருந்தால்,
புண்ணியமாய் இருந்திருக்கும்!

பி.பிரபாஷினி- கொட்டாஞ்சேனை.

**உன்னையுமா?**

ஏன்
முகம் காட்ட
மறுக்கிறாய்?
உன்னையும்
புதைத்து விடுவார்களா?

கா.சுஜந்தன்- கிளிநொச்சி.

## கவிதைப் போட்டி இல.272



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 05.09.1998
படப்பிடிப்பு: சி.என். ஆர்.யோகச்சந்திரன்-கோபாலபுரம்.

முகவரி: கவிதைப் போட்டி இல.272
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

**உலகம் உருண்டை**

ஐந்து நாளில்
பாதை திறப்பு!
அடுத்த நாளே
தேர்தல்-சின்ன
அம்மணி சொல்கிறாள்!
செம்மணி பற்றி
அம்மணி?
மூச்...!

சுபா வரன்-கொழும்பு-15.

**கை கொடுங்களேன்....!**

சமாதானக் கப்பலேற
சிறுமி நான் ஆயத்தம்....!
பெரியோர் கை கொடுத்தால்...!

அ.சந்தியாகோ-
அசோகா வித்தியாலயம், கண்டி.



# வாசக(ர்)சாலை

அன்பின் முரசே!
சுஜாதாவின் 'மேற்கே ஒரு குற்றம்' ராஜேஸின் 'முள் நிலவு' எனும் இரு தொடர்கதைகளும் தரும் சஸ்பென்ஸ்சால் மனது தவிக்கின்றது

கே.பாஸ்கரன், தண்ணீரூற்று, முல்லை

### இனியுமா நம்புவர்?

செம்மணிப் புதை குழிகள் விடயத்தில் திட்டமிட்டே அரசு அலட்சியம் காட்டியது என்பதை சாதாரண மக்களும் அறிவர். அப்படியிருக்க தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தங்களைத் தாங்களே கருதிக் கொள்ளும் தமிழ்க் கட்சிகளுக்கு மட்டும் புரியாதது ஏன்? புரிந்தும் புரியாதது போல நடிக்கிறார்கள். இந்த அரசை மட்டுமல்ல எந்த அரசையும் சார்ந்துதான் இவர்கள் தொழில் நடத்த முடியும். அதுதான் உண்மை.

கே.சிவபாக்கியம்,
யாழ்ப்பாணம்.

### இவர்கள் என்ன தரகர்களா?

எங்கு போராட்டம் நடந்தாலும் அதில் போய் அரசுடன் பேசித் தீர்வு பெற்றுத் தருவதாக வாக்குறுதி கொடுப்பதுதான் தமிழ்க் கட்சிகளின் அரசியலாகிவிட்டது. இவர்கள் என்ன தரகர்களா? அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே தரகு வேலை செய்து பதவிகளைப் பெறுவதுதான் இவர்கள் நோக்கமா?

பூ.சுந்தரலிங்கம், மட்டுவில்.

வயாக்ரா பற்றி விதம் விதமான செய்தி தரும் உம்மை வயாக்ரா இல்லாத காட்டுக்கு மாற்ற வேண்டும். அல்லது வயாக்ராவை உமது வாயில் திணித்து நயகராவில்தான் தள்ள வேண்டும்!

குர்சியாம் ரஜனி, உக்குவளை.

### இவர்கள் காவி கட்டினால்?

நக்கீரனே? உமது கருத்து உண்மையிலேயே சூடானதுதான். சூரிய கந்தையைத் தோண்டி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று செம்மணியைத் தோண்ட சிறிதேனும் அக்கறைக் காட்டாது, அப்படியொரு விடயம் இங்கு இருப்பதாகவே காட்டிக் கொள்ளாது-சார்க் கொண்டாட்டங்களில் மூழ்கியிருந்தனர். தமக்கும் சார்க் மீநாட்டில் பங்குபெற ஒரு வாய்ப்புக் கிடைக்காதாவென ஏங்கித் தவித்தன தமிழ்க் கட்சிகள். இவர்கள் உண்மையிலேயே கருவிகளைத் தொட்டிருக்கத் தேவையில்லைதான்.

காவியுடை உடுத்தால் பென்ஸ் காராவது கிடைக்குமே? அது சரி, இவர்கள் ஆசிரமம் அமைக்கப்போய் அதற்கும் எப்பாவமும் அறியா எம் மக்களையல்லவா துரத்தித் துன்புறுத்தப் போகிறார்கள். யாது நடப்பினும் நக்கீரரே பொறுப்பு?

சண்முகம் மனோகரன்,
கல்கந்தை எஸ்டேட், அப்புத்தளை.

### பெருமை அறிந்து....

'அன்னபூரணி அம்மா' தொடர் மூலம் 'வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்கா வரை' கப்பலோடிய தமிழர்களின் உண்மையான நிகழ்வுகளின் பெருமைகளை பலரும் அறியத்தக்க விதத்தில் எழுதிய திரு.ஈ.கே. ராஜகோபலுக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

திருமதி. அருமைத்துரை,
ஓமான்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.

அன்பு முரசே,
பல்லாயிரம் வாசகர்களில் நானும் ஒருவன். நீ சுமந்து வரும் அனைத்தும் வெரி சூப்பர். அதிலும் 'இடியமீனின்' தொடர் கதை இடித்து செல்கின்றது.

எஸ்.எம்.அஹமட், ஏறாவூர்-01.

அன்பின் முரசே,
'அன்ன பூரணி' அம்மாவின் பயணத்தை அழகிய ஒரு புன்சிரிப்புடன் ஆரம்பித்து, ஆனந்தக் கண்ணீரில் முடிந்திருக்கும் விதம் பாராட்டுக்குரியது.

தமிழர் பெருமை கூறும் இந்தப் பயணத்தின் நிறைவுப் பகுதியில் பேர்மியுடாவில் வசிக்கும் இஸ்மாலியர் தம் தாய் நாட்டு மண்ணை கைகளினால் அள்ளி முத்தமிட்டு ஆனந்தக் கூத்தாடியதாக கூறப்பட்டுள்ளது. உண்மையில் பெற்ற தாயையும் பிறந்த பொன்நாட்டையும் எவருமே மறப்பதில்லை. மறக்கவும் கூடாது. இது தமிழர்களாகிய எமக்கும் விதி விலக்கல்ல.

ம.பிரேம்குமார், லிங்கநகர், திருமலை.

இடி அமீன் பலே ஆளப்பா. கொலை அமீன், ஜொள்ளு அமீன், பேய் அமீன் என்று பட்டங்களை வாரி வழங்கலாம். அட்டகாசமாசப் போகிறது தொடர்.

செல்வி.சி.டிலக்ஷினி, பதுளை.

அன்பின் முரசுக்கு!
உன்னில் அன்பு கொண்ட பல கோடி வாசகர்களில் நானும் ஒருவன். ராஜேஸ்குமாரின் 'முள் நிலவு' என் இதயத்தில் பதிந்துவிட்டது. மற்றும் நாரதரின் 'எக்ஸ்ரே ரிப்போட்' மிகவும் நன்று .

எஸ்.சிவகுமார் மேரிறஜனி, லெபனான்.

'கண்ணீரில் கரைந்த இரவுகள்' எம்மையும் கண்ணீரில் கரைக்கின்றன. புகைப்படங்களும் நன்று.
புவனா கலக்கலாக கொண்டு போகிறார்.

பா.கஸ்தூரி, வவுனியா.

### பயனுள்ள பணி

முரசில் வெளியாகும் 'திருமறை தரும் பொது நெறி' பயனுள்ள ஒரு பணியாகும். விவிலியம்-அதாவது வேதாகமம் ஓர் ஆழ்கடல். அதனடியில் கிடக்கும் தத்துவ முத்துக்களை இராஜகுமாரன் அழகாக ஆராய்ந்து வெளிக்கொணர்ந்துள்ளார்.

கிறிஸ்தவர்கள் அல்லாத ஆர்வலர்களும் அறிந்து கொள்ளத்தக்க வகையில் எழுதப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும்

கதை வடிவில் கூறப்படும் சம்பவங்கள் சுவையாகச் சித்தரிக்கப்பட்டிருப்பது மாணவர்களுக்குப் படிக்கும் ஆவலைத் தூண்டுகிறது. சமய பாடப் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்களுக்கு இது ஒரு கை நூலாகவிருக்கிறது. எளிய நடையில் அழகுற எழுதிவரும் இராஜகுமாரனின் 'திருமறை தரும் பொது நெறி'யைப் படிப்பதற்காகக் காத்திருக்கும் மாணவர்கள் அதிகம்.

படித்த மாத்திரத்தில் பசு மரத்தாணியாக மனதில் பதியவைக்கும் கதைப் போக்கும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். இராஜகுமாரனுக்கு எமது பாராட்டுக்கள்.

ரூபராணி ஜோசப் (ஆசிரியை), கண்டி.

### நிலாவுக்கு இடம்

முரசே;
இனிய கருத்துக்களுடன் இன்பமாய் வரும் முரசே, உன் தொடர்கள் அனைத்தும் அருமை. 'இடி அமீன்' நம்மை வியக்க வைக்கிறான். ராஜேஸ்குமாரின் 'முள்நிலவு' எம் மனதை முள்ளாகத் தைக்கும் போல் உள்ளது. நிலாவிற்கு என் மனதில் அன்றே இடம் கொடுத்து விட்டேன்.

இ.வக்சலா, பூநகரி.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சப் பிழையோ. அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கூட்டுப்படை தலைமையகத்தின் கரங்களில் 'ஜயசிக்குறுய்'

பிரின்செஷ் கேஷ் கப்பல் விவகாரம் குறித்து கடந்த வாரம் தகவல்கள் வெளியிட்டிருந்தோம். மேலும் சில புதிய தகவல்கள்.

வன்னியில் புதிய மோட்டார் சைக்கிள்களில் புலிகள் ஓடித்திரிகின்றனர். இறக்கக் கூடிய பொருட்களையெல்லாம் புலிகள் இறக்கி முடித்துவிட்டனர்.

புலிகளிடம் பொருட்கள் போய்ச் சேராமல் தடுத்துவிட்டதாக கப்பல் தகர்ப்புக்கு அரசு கூறும் காரணமும் வெறும் தோரணம் தான். சீமெந்து பக்கற்றுக்கள் புலிகளிடம் கிடைக்காமல் செய்துவிட்டோம் என்று வேண்டுமானால் அரசாங்கம் கூறலாம்.

ஆனால் புலிகள் உள்ளூரிலேயே சீமெந்துக்கு மாற்றுக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனால் சீமெந்து கிடைக்காமல் போனதைவிட மோட்டார் சைக்கிள்களும் ஏனைய பொருட்களும் கிடைத்தது அவர்களுக்கு உபயோகமாகிவிட்டது.

கப்பல் தகர்ப்புக்கு பின்னர் அப்பகுதியில் கடற்புலிகள் சுழியோடி சில பொருட்களை மீட்டுள்ளனர் என்றும் தகவல்.

கப்பலை தகர்ப்பதா, அல்லது தாக்குதலை தவிர்ப்பதா என்று ஆராய்ந்து முடிக்க 10 மணி நேரம் தேவைப்பட்டிருக்கிறது. ஜனாதிபதியின் அனுமதி பெறத்தான் அத்தனை தாமதமாம்.

கப்பலில் இந்திய மாலுமிகள் இருந்ததால்தான் நீண்ட யோசனை செய்யவேண்டி இருந்ததாம். இந்தியாவுக்கு எப்படி பதில் சொல்வது என்பதை தீர்மானித்து, அறிக்கையும் தயார் செய்யப்பட்டகையோடுதான் தாக்குதல் நடத்த விமானங்கள் மாலை 3.30 மணியளவில் புறப்பட்டனவாம்.

கப்பலில் மாலுமிகள் இருப்பதாக தெரிந்தால் தாக்கமாட்டார்கள் என்று கருதித்தான் கப்பலிலேயே மாலுமிகளை வைத்துக்கொண்டு பொருட்களை இறக்கி முடிக்க புலிகள் முடிவு செய்தனர். இல்லையெனில் அனைவரையும் உடனடியாகவே இறக்கிக் கொண்டுபோய் இருப்பர்.

கப்பலில் இருந்த தகவல் தொடர்பு சாதனம் ஊடாக கடற்படையினருடன் மாலுமிகளை உரையாட வைத்ததும் அதனால்தான். 'தாக்கவேண்டாம்' என்று மாலுமிகள் கூறிக்கொண்டே இருந்திருக்கின்றனர். கப்பலை காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறை புலிகளுக்கு கிடையாது. இறக்கக்கூடிய பொருட்களை இறக்கி முடிப்பதுதான் நோக்கம்.

கப்பலுடன் தொடர்பு கொண்டதாகவும் அங்கிருந்து பதில் வரவில்லை என்பதால் சந்தேகம் அதிகரித்ததாகவும் ஜனாதிபதி செயலகம் மற்றும் பாதுகாப்புத் தரப்பு கூறியிருந்தது. ஆனால் தாம் கடற்படையினருடன் தொடர்புகொண்டபடியே இருந்ததாக கப்பல் கப்டன் தெளிவாக கூறியிருக்கிறார். அதனை பாதுகாப்புத் தரப்போ, அரசோ மறுக்கவில்லை. கப்பல் தாக்குதலுக்காக ஜோடிக்கப்பட்ட கதைகளை புலிகள் விடுவித்த மாலுமிகள் உடைத்துப் போட்டுவிட்டனர்.

கப்பலில் இருந்து பொருட்கள் இறக்கப்படவில்லை என்று மாலுமிகள் தம்மிடம் கூறியதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி பி.பி.சி.க்கு கூறியிருந்தார். புலிகளின் பராமரிப்பில் இருந்தவரை அவர்களுக்கு ஏற்றவிதத்தில் மாலுமிகள் கூறியிருந்தனர்.

ஆனால் கப்பல் கப்டன் தன்வாயால் பொய் சொல்லாமல், புலிகளையும் மாட்டிவிடாமல் "சில பொருட்களை இறக்கியிருக்கலாம். எங்கள் கண்ணால் காணவில்லை" என்று கொழும்பில் கூறியிருந்தார்.

இன்னொரு விஷயம்; கப்பலில் இருந்து பொருட்கள் எதுவும் தம்மால் இறக்கப்படவில்லை என்று புலிகள் கூறவும் இல்லை.

அரசால் துச்சமாக மதிக்கப்பட்ட தம் உயிர்களை பாதுகாத்த புலிகளுக்கு அத்தனை மாலுமிகளும் நன்றியுடையவர்களாகத்தான் இருப்பர்.

சென்னை விமான நிலையத்திலும் பத்திரிகையாளர்கள் மாலுமிகளைச் சந்திக்க அனுமதி கொடுக்கப்படவில்லை. மாலுமிகள் கண்டபடி இலங்கை அரசை சாடி, புலிகளை புகழ்ந்து தள்ளிவிட்டால் இராஜதந்திர சிக்கல்கள் ஏற்படலாம் என்று இந்திய அரசு கருதியதுதான் அதற்கு காரணம்.

பத்திரிகையாளர்கள் ஏமாற்றத்துடன் குழுமி நின்றனர். வேன் ஒன்றில் மாலுமிகள் ஏறிக்கொண்டிருந்தனர். பத்திரிகையாளர்களைக் கண்ட மாலுமிகளுக்கு குஷியாகி விட்டது.

தங்கள் கட்டை விரலை உயர்த்திக் காட்டி, 'எல்.ரி.ரி.ஈ. ஆர் வெரி நைஸ் பீப்பிள்' என்று சத்தமாக கூறினார்களாம். அதிகாரிகள் பதறியடித்து ஒருவிதமாக மாலுமிகளை அழைத்துப் போய்விட்டனர்.

இன்னொரு விடயம், தொலைக்காட்சியில் கப்பல் நின்ற பகுதியை எடுத்த படத்தை காண்பித்தனர். அதனைப் பார்த்தவர்கள் ஒன்றை கவனித்திருக்கலாம். கரையை மிக நெருங்கி நிற்கிறது கப்பல். தரை தட்டிய நிலை. அவ்வாறான நிலையில் இருந்து கப்பலை பொருட்களின் பாரத்துடன் மீள எடுக்க முடியாது. வெறும் கப்பல் என்றால் கட்டி இழுத்துக் கிழுத்து நகர்த்தலாம்.

பொருட்களை இறக்க வசதியாகவே கரையை நெருங்கியதாக நிறுத்தியுள்ளனர். படகுகளின் உதவியின்றியும் கரைக்கு பொருட்களை கொண்டு செல்லக்கூடிய தொலைவு அது.

கப்பலை கடற்படையினர் நெருங்கினால் தாக்கத் தயாராக கரும்புலிப் படகுகள் கப்பலைச் சுற்றித் திரிந்தனவாம்.

புலிகளிடம் பொருட்கள் போய்ச் சேருகிறதா இல்லையா? என்பதைவிட, புலிகளிடம் பொருட்களை சேரவிடவில்லை என்று தென்னிலங்கையில் காட்டிக்கொண்டால் போதும் என்பதுதான் அரசின் நோக்கம். அதனால் வெறும் கப்பல் என்று தெரிந்தாலும் அடித்து முடித்திருப்பர்.

ஆனால், கப்பல் விவகாரத்தில் அரசு எதிர்பார்த்ததுக்கு மாறாக எல்லாம் நடந்து முடிந்திருக்கின்றது. இனிமேல் இலங்கை ஜனாதிபதி செயலகம் விடுக்கும் அறிக்கைகள் என்றாலே, வெளியுலகின் விழிப்புருவங்கள் சந்தேகத்தில் உயரப்போகின்றன.

கப்பலைத் தகர்க்காமல் விட்டுவிட்டு, 'தமிழ் மக்களுக்கு சென்ற சரக்குக் கப்பலை புலிகள் கடத்திவிட்டதாக' பெரும் பிரசாரம் செய்திருந்தால் இப்போதுள்ளதைவிட கூடுதல் இலாபம் அரசுக்கு கிட்டியிருக்கும். ஜனாதிபதியின் இமேஜும் இப்படி சேதமாகியிருக்காது.

பிரின்செஷ் கேஷ் கப்பல்மீது போடப்பட்ட குண்டு ஜனாதிபதியின் இமேஜ்மீதும் போடப்பட்ட குண்டாக மாறியதுதான் எதிர்பாராத திருப்பம்.

இவ்விவகாரத்தில் ஜனாதிபதிக்கே அதிர்ச்சிதானாம். அதனால்தான் ஜனாதிபதிக்கு சுருக்கமாக மட்டும் கப்பல் விவகாரத்தை கூறிவிட்டு, தாக்குதல் முடிவு செய்யப்பட்டது என்று ஓர் விளக்கம் பின்னர் தரப்பட்டது.

ஜனாதிபதி விரிவாக விவகாரத்தை அறிந்திருந்தால் இப்படி ஒருமுடிவுக்கு அனுமதி கொடுத்திருக்க மாட்டார் என்பதுபோன்ற விளக்கம் அது. ஆனால் அந்த விளக்கத்தால் பயனில்லை. ஏனெனில் கப்பல் தகர்ப்பு பற்றி ஜனாதிபதி செயலகமே நேரடியாக அறிக்கை விட்டிருந்தது. அதனால் முழுப் பொறுப்பையும் அவர்களே ஏற்றாக வேண்டும்.

பிரபாகரன் கப்பல் விவகாரத்தில் நகர்த்திய காயால், ராணிக்காய் தர்மசங்கடத்தில் சிக்கிக் கொண்டது. ஆனால் இது பிரபாகரன் முன் கூட்டியே திட்டமிட்டு நகர்த்திய காயல்ல. அவர் காய் நகர்த்த வசதி செய்து கொடுத்ததும் அரசாங்கம்தான்.

இந்திய மாலுமிகளின் உயிர்களை காத்தது மூலம் இந்திய மக்களின் அனுதாபத்தை புலிகள் பெற்றுக்கொள்ள, அதே மாலுமிகள்மீது அபாண்டமான பழி சுமத்திய அரசு என்ற அவப் பெயரை அரசு சம்பாதித்துக் கொண்டது.


புலிகள் தொடர்பான, புலிகளுடன் முடிச்சுப் போடப்படும் விடயங்கள் தொடர்பான இலங்கை அரசின் கூற்றுக்களை வெளியுலகம் இனிமேல் உரசிப்பார்க்கும்.

காகம் இருக்க பனம் பழம் விழுந்த கதை என்பது இதுதான். புலிகள் கப்பலை கடத்தியதின் பிரதான நோக்கம், அதில் உள்ள பொருட்களை தமது உபயோகத்துக்கு பெறுவதற்கே. வன்னிப் பகுதிக்கு அத்தியாவசியப் பொருட்களை தடுத்து நிறுத்தியபடி, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு சுலபமான போக்குவரத்தை நடத்த முடியாது என்பதை அரசுக்கு உணர்த்துவதும் இன்னொரு நோக்கம்.

ஆனால், யுத்த வெற்றிக் கனவில் மூழ்கியிருக்கும் அரசு நிதானம் இழந்ததால், கப்பல் விவகாரம் இராஜதந்திர ரீதியிலும் புலிகளுக்கு உதவியுள்ளது.

●●●

கடந்த கால அரசாங்கத்தை குறைகூறிக் கொண்டு பதவிக்கு வந்த அரசாங்கம் பொதுஜன முன்னணி அரசாங்கம்.



எரிந்துகொண்டிருக்கும் பிரின்செஸ் கேஷ். உட்படம்: கப்பலைத் தகர்த்த கிபிர் விமானங்கள்

பதவி ஏற்ற புதிதில் முன்னைய அரசின் அணுகுமுறைகள், அமைப்பு முறைகள் என்று சகலவற்றையும் மூட்டைக்கட்டி ஓரமாக போட்டுவிட்டு, புதிய முறைகளை கொண்டு வந்துவிட்டதாக காட்டிக்கொண்டனர். அப்போதும்கூட ஜனாதிபதி ஆட்சிமுறையை மட்டும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டனர்.

புதுத் துடைப்பம் நன்றாகக் கூட்டும் என்பதுபோல, வந்த புதிதில் மனித உரிமை, புதைகுழி தோண்டல், படையினருக்கு சாடல், சமாதான முழக்கம் என்று ஏராளமான ஆரவாரங்கள். இப்போது துடைப்பம் தேய்ந்துபோய்விட்டது. அதனால் மூட்டை கட்டிப் போடப்பட்டதும், முன்னர் 17 வருடங்கள் பாவனையில் இருந்ததுமான பழைய துடைப்பத்தையே இன்றைய ஆட்சியினரும் நாடவேண்டிய கட்டாயம்.

பழைய துடைப்பத்துக்கு நீலக் குஞ்சம் கட்டி தமது துடைப்பம் என்று காண்பிக்கிறார்கள். மீண்டும் புதைகுழிகள். மீண்டும் நாடெங்கும் அவசரகாலச் சட்டம், மீண்டும் பத்திரிகையாளர்கள் மீதான ஒடுக்குமுறைகள் என்று பலவறாக அந்த பதினேழுவருட குப்பைகளை சேகரித்து ஒன்றுகுவிக்க தொடங்கிவிட்டனர்.

ஐ.தே.கட்சியின் ஆட்சி முறைகள் அணுகுமுறைகள்தான் இந்த நாட்டை கட்டியாள ஏற்றவை என்ற முடிவுக்கு மிக இரகசியமாக வந்து சேர்ந்துள்ளது பொதுஜன முன்னணி அரசாங்கம்.

யுத்தத்தை முன்னெடுப்பதிலும் முன்னைய அரசின் அமைப்பு முறைகளுக்கே இன்றைய அரசாங்கம் தட்டுத்தடுமாறி வந்து சேர்ந்திருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் பிரேமதாசாவால் கொண்டுவரப்பட்ட கூட்டுப் படை நடவடிக்கை தலைமையகம் (J.O.C) மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளது.

கூட்டுப்படை தலைமையகம் என்பது போர் நடவடிக்கைகளுக்கு தேவையற்றது, அந்தந்த படைப்பிரிவின் தளபதிகள் தாமாக முடிவுகள் எடுத்து செயற்படுத்தும் சுதந்திரத்தை கட்டுப்படுத்துகிறது என்றெல்லாம் முன்னர் பொதுஜன முன்னணியினர் யுத்த தந்திரம் பேசினார்கள்.

பாராளுமன்றத்தில் கடந்த வருடம் உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இன்றைய அரசு யுத்தம் நடத்தும் முறை சரியல்ல. கூட்டுப்படை தலைமையகத்தை உருவாக்கி, கூட்டுப்படைத் தளபதியை நியமிக்கவேண்டும் என்று கூறியிருந்தார்.

யுத்தத்தை நடத்த தமக்கு ஐ.தே.கட்சியின் ஆலோசகர்கள் தேவையில்லை என்று கூறிய பொதுஜன முன்னணி இப்போது முன்னைய ஏற்பாடுகளைத்தான் மூட்டைக்குள் இருந்து தேடி எடுத்து தூசுதட்டி கொண்டு வருகிறது.

கூட்டுப்படை தளபதியாக இராணுவத் தளபதி ரோஹான் தலுவத்தை நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒன்றேகால் வருடமாகத் தொடரும் ஜயசிக்குறுய் நடவடிக்கையை எதிர்வரும் பருவமழைக் காலத்தின் முன்னர் பூர்த்தி செய்தால்தான், டிசம்பரிலாவது தேர்தல்கள் நடத்தி முடிக்கலாம் என்று அரசு கணக்குப் போடுகிறது.

அப்படி வெற்றிபெற்றால்கூட அது எத்தனைநாள் தாக்குப்பிடிக்கும் என்பது அரசுக்கே சந்தேகம்தான் போலும். அதுதான் டிசம்பரில் மாகாணசபைத் தேர்தலை நடத்தலாமா? ஜனாதிபதித் தேர்தலையே நடத்தி முடிக்கலாமா? என்று ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

பெற்ற வெற்றிக்கு சேதாரம் வரமுன்னர் பெரிய தேர்தலாக நடத்தி முடித்துவிட்டால் மேலும் ஆறு வருடங்களுக்கு அதிகாரம் உத்தரவாதம் அல்லவா. அதன்பின்னர் மாகாண சபைத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல்களில் தோற்றால்கூட ஜனாதிபதியின் கையில்தானே சர்வ அதிகாரம் இருக்கும்.

அதனால்தான் எதனை முதலில் நடத்தலாம் என்ற சிந்தனை. ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு முடிவு கட்ட காலவரையறைகள் விதிக்கப்பட்டது பழையகதை. புதிய ஜனாதிபதி தேர்தலுக்கு கால நேரம் கணிக்கப்பட்டுக் கொண்டிருப்பது புதிய கதை.

**"பொருளாதார அழுத்தங்கள் புலிகளுக்கு பலம் சேர்த்து வருகின்றன என்பதை கவனிக்க தவறும் அரசு!"**

எல்லாக்கதைக்கும் மூலக்கதை ஜயசிக்குறுய் வெற்றிதான். நவம்பருக்குள் குறைந்த பட்சம் மாங்குளத்தை என்றாலும் கைப்பற்ற கூட்டுப்படைத் தலைமையகம் திட்டங்களை தீட்டிக்கொண்டிருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இன்னமும் இரண்டு மாதத்திற்குள் இலக்கை எட்ட அரசு விரும்பினாலும், இரண்டு மாதத்திற்குள் என்னென்ன மாற்றங்கள் நிகழுமோ என்பது புலிகளையும் பொறுத்ததே.

'ஜயசிக்குறுய்' ஆரம்பமான பின்னர் களத் தளபதிகள் பலர் மாற்றப்பட்டனர். வியூகங்கள் பலமுறை மாற்றப்பட்டன. நவீன ஆயுத தளபாடங்கள், உளவு விமானங்கள், மோட்டார் இலக்குகளை அறியும் கருவிகள் போன்றவை புகுத்தப்பட்டன. எனினும் பாதிக் கிணறும் தாண்டாத நிலைதான்.

இந்நிலையில் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைகளின் எதிர்காலம் கூட்டுப்படை தலைமையகத்தின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**கடந்தகால கூட்டுப்படை தலைமையகம் இன்றைய ஆட்சிக்கு ஒரு பிரதியமைச்சரை தந்திருக்கிறது**

கடந்த ஆட்சிக்காலத்தில் கூட்டுப்படை தலைமையகம் பெரிதாக எதுவும் சாதிக்கவில்லை. கூட்டுப்படைத் தலைமையகம்தான் குண்டுத்தாக்குதலுக்கு இரையானது.

அன்றைய கூட்டுப்படை தலைமையகம் இன்றைய ஆட்சிக்கு ஒரு பிரதி அமைச்சரையும் உருவாக்கி தந்திருக்கிறது.

கூட்டுப்படை தலைமையக குண்டு வெடிப்பின் சூத்திரதாரியான வரதனுக்கு மலையகத்தில் தலைமறைவாக இருக்க ஏற்பாடு செய்தவர் சந்திரசேகரன். அதனால் அவரைப் பிடித்து சிறையில் போட்டனர். சிறையில் இருந்த சந்திரசேகரனுக்கு உதவியதற்கு பிரதியுபகாரமாகவே அவரை தமது அணிக்கு சார்பாளராக மாற்றியது பொதுஜன முன்னணி.

சந்திரசேகரனின் ஒரு மேலதிக வாக்கினால் தான் பொதுஜன முன்னணி அன்று ஆட்சி அமைக்க முடிந்தது. அதற்கு நன்றியாக பிரதி அமைச்சர் பதவி தரப்பட்டது. எனவே கூட்டுப் படை தலைமையக தகர்ப்பு விவகாரம் இன்றைய ஆட்சிக்கு ஏதோ ஒருவகையில் நன்மை ஈன்றுள்ளது.

இப்போது உருவாகியுள்ள புதிய கூட்டுப் படை தலைமையகம் இன்றைய ஆட்சிக்கு என்ன பயன் தரப்போகிறது என்பது இனிமேல் தான் தெரியும்.

மாங்குளத்தை கைப்பற்றும் படை நகர்வு இதுவரை மந்தமாகவே இருக்கிறது. முனைப்பாக முன்னேறியதாக படைத்தரப்பும் கூறவில்லை.

மறுபுறம் கிளிநொச்சிப் பகுதியால் மேற் கொள்ளப்பட்ட தரைநகர்வும் மறுபடி பழைய இடத்திற்கே திரும்பியதாக படைப் பேச்சாளரே கூறியுள்ளார்.

23.08.98 அன்று ஜயசிக்குறுய் படைகள் மீது தாக்குதல் சண்டை ஒன்றை புலிகள் நடத்தினார்கள்.

ஜயசிக்குறுய் படையினரின் முன்னரங்க நிலைகள்மீது பலத்த தாக்குதல்களை புலிகள் அடிக்கடி தொடுத்து வருகின்றனர் என்பதை படையினர் தரப்பு தகவல்களே கூறுகின்றன.

கடந்த 23.08.98 ஞாயிறு நடந்த தாக்குதலை தாம் முறியடித்துவிட்டதாக படையினர் கூறியுள்ளனர்.

24.08.98 அன்று கொழும்பில் வழக்கத்திற்கு மாறான விமானப் பறப்புக்களும், ஆம்புலன்ஸ் வண்டிகளின் ஓட்டமுமாக இருந்தது.

இதேவேளை வன்னிக்கான உணவு விநியோகம் தடைப்பட்டிருக்கிறது. நிவாரண வெட்டும் அமுலில் இருக்கிறது.

ஆனால் நிவாரண வெட்டே கிடையவே கிடையாது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்திலேயே கூறியுள்ளார்.

வடபகுதி அரச அதிபர்களும், புனர்வாழ்வு சபைத் தலைவரும் நிவாரண வெட்டு இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளனர்.

அங்கு பேசியுள்ளோம், இங்கு பேசியுள்ளோம், அவரோடு பேசியுள்ளோம், இவரோடு பேசியுள்ளோம் என்றெல்லாம் தமிழ்க் கட்சிகள் மக்களை ஏமாற்றுகின்றன. அரசை ஆதரிக்கும் தம் நிலையை நியாயப்படுத்த அதைவிட வேறு வழியில்லை தமிழ்க் கட்சிகளுக்கு.


ஆனால் இத்தகைய பொருளாதார அழுத்தங்கள் புலிகளுக்கு பலம் சேர்ப்பனவாக மாறிவருவதை அரசு கவனிக்கத் தவறுகிறது.

'ஜயசிக்குறுய்' இப்போது முடிவடையப் போவதில்லை. அதுவரை பொருளாதார முற்றுகை நீடிக்குமானால் இன்னொரு சோமாலியா வடக்கில் உருவாகும். ஆனாலும் அதனால் அரசாங்கம் எதிர்பார்ப்பதற்கு மாறான கோபமும், வெறுப்புமே மேலோங்கும். ●

நாரதர்

---

# அதிரடி அய்யாத்துரை



***கதிர்காமக்கந்தன்*** திருவிழாவுக்கு துலாக் காவடி எடுக்க பக்தர் ஒருவருக்கு வந்தது பயங்கர ஆசை. ஆனாலும் ஆள் கொஞ்சம் விவேகமான மனுசன். முன்கூட்டியே பொலிசில் போய் விலாவாரியாக துலாக்காவடியின் நுட்பங்களை விளக்கி பெர்மிஷன் எடுத்துப் போட்டார். இல்லையென்றால் ஆட்டிலெறிதான் வருகுதோ என்று காவலர் தரப்பு கடும் நடவடிக்கை எடுத்திருக்கக்கூடும். என்ன, துலாக்காவடி நுட்பத்தை விளக்கி முடிப்பதற்குள் விலா எலும்புதான் நொந்து போச்சாம்.

***யாழில் கடையடைப்பு*** நடத்த முன்னர் சீருடை அதிகாரியிடம் சென்று அனுமதி கேட்டனராம் வர்த்தகர்கள். 'தாராளமாகச் செய்யுங்கள்: செய்யத்தான் வேண்டும்!' என்று கூறப்பட்டதாம். கடையடைப்பு நாளன்று காலையில் வர்த்தகர்களுக்கு காத்திருந்தது பேரதிர்ச்சி. 'ரெண்டு எழுத்தாருக்கு எதிரான கடையடைப்பு' என்று நகரின் மத்தியில் பெரிய 'பேனர்' கட்டப்பட்டிருந்ததாம். வர்த்தகர்களுக்கு தமக்கு அனுமதி தந்தவர்கள்மீதுதான் சந்தேகம். அதை பகிரங்கமாக சொல்லவும் முடியாத நிலை. பேனரை அவிழ்க்கவும் அச்சம். ஒரு மாதிரியாக பகல் பதினொரு மணிக்கு அவிழ்த்துப்போட்டினம். பின்னர் ஓர் அறிக்கையும் விட்டவை. என்னதான் இருந்தாலும் 'பேனர்' கட்ட வைத்தவர்களது மூளை பச்சை மூளைதான். அதாவது-காயாது சுறுசுறுப்பாக இருக்கும் மூளை.

***புதிய தமிழ் வெகுஜனப் பிரதிநிதியாக*** தமிழ் இயக்கம் ஒன்றின் முன்னாள் தலைவர் பொறுப்பேற்றுள்ளார். அவரை பதவி ஏற்காமல் தடுக்க மறைமுக முட்டுக் கட்டைகள் இருபக்கமும் இருந்து போடப்பட்டதாம். நாற்காலி ஒன்று காலியானால் ஒரு மாதத்தில் புதியவர் பதவியேற்கவேண்டுமாம். அது தெரிந்தும், "மூன்று மாதத்திற்குள் பதவி ஏற்றால்போதும்!" என்று புதியவருக்குக் கூறப்பட்டதாம். பதவி ஏற்காதுவிட்டால் அவர் இடமும் காலியாகுமல்லோ? நாற்காலி சில மனிதர்களை நாலுகாலாக்கிப் போடுமாக்கும்!

***சேர் பொன் இராமநாதன்,*** ஜே.ஆர்.ஜெயவர்த்தனே போன்ற பெரும் தலைகள் படித்த கல்லூரி றோயல் கல்லூரி. அங்கு படித்தால் ஒரு பெருமை என்று இலட்சம் இலட்சமாக கொட்டி அட்மிஷன் வாங்க கியூவில் நிற்கினம் இக்காலப் பெரும் புள்ளிகள். எல்லோருக்கும் அதிர்ச்சியான சங்கதி ஒன்று கசிந்திருக்குது. கல்லூரி விடுதி உல்லாச விடுதியாக நடந்திருக்குதாம். தினமும் இரவுகளில் விலைமாதுகளை உள்ளே அழைத்துப் போய் மாணவர்கள் கொட்டமடித்தனராம். சங்கதி இப்போது நாறிக்கொண்டிருக்குது. பெரும் தனவந்தர்களின் பிள்ளைகள் சம்பந்தப்பட்ட காரியம் என்பதால் கல்லூரி நிர்வாகமும் முடியைப் பிய்த்துக் கொண்டிருக்குதாம். 'செல்லப்பிள்ளை சேலை உடுக்காது, பள்ளிக்குப் போனா பாடம் படிக்காது' என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. சில செல்லப் பிள்ளைகள் பிறர் சேலை உடுக்கவும் விடமாட்டார்களாக்கும்.

***பிரிட்டிஷ் தூதர்*** யாழ் சென்றபோது நகருக்கு முதன்மையானவர் உட்பட ஏனைய கட்சிப் பிரதிநிதிகளும் சந்தித்தவை. அவர்களில் சிலர் தான் ரெண்டு எழுத்தாரைப்பற்றி தீமூட்ட, சலிப்புற்ற தூதர் "அங்கு உங்கள் ஆட்கள்தான் நிதி கொடுக்கினம். அவைக்கு சொல்லுங்கோ" என்று பந்தைத் திருப்பி அடித்தாராம். அதைச்சொல்லாமல் பிரிட்டிஷ் தூதர் ஏதோ தானாக அக்கருத்தைச் சொன்னமாதிரி நகருக்கு முதன்மையான 'பாலகர்' பல இடங்களில் காதோடு காதாக அளந்துகொண்டிருக்கிறாராம்.

***யாழில் பச்சை*** உடையினரால் பிரச்சனை என்பது மாதிரியும், தமக்கு அவையைப் பிடிக்காத மாதிரியும் கூட்டான கட்சி கூறியதல்லோ? யாழில் உள்ள அவர்களது அலுவலகத்துக்கு அழாத குறையாக கேட்டு பச்சை உடைப் பாதுகாப்பு பெற்றுள்ளதை யாரும் அறியார்கள்தானே என்று நினைக்கினமாக்கும்.

***"வெகுஜன சபை*** தமிழ்ப் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு போராட வேண்டும். பகிஷ்கரிக்க வேண்டும்!" என்று வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அதிகாரக் கட்சித் தலைவர் கூறியுள்ளார். அவர் கூறியுள்ள சகல விஷயங்களும் சத்தியமாக நியாயமானவை. ஆனால் அதற்குத் முன்னர் அதிகார தரப்பால் தமது விசுவாசி என்ற கோதாவில் தனக்கு தரப்பட்டுள்ள மீன்பிடி ஆலோசகர் பதவியையும், அதனால் பெறப்படும் சலுகைகளையும் அவர் கைவிட்டு முன்மாதிரியாக நடக்கலாமல்லோ?

***முழுப்பூசணிக்காயை*** ஒரு கோப்பை சோற்றுக்குள் மறைக்க நினைத்தால்கூட சிறு பகுதியாவது மறையும். ஆனால் ஒரு கோப்பை சோற்றால் ஒரு கப்பலையே மறைக்க நினைத்தால் அதற்கு என்ன பெயர்? இது நண்பர் ஒருத்தர் கேட்ட அதிரடிக் கேள்வி. நான் என்ன பதில் சொன்னேன் என்பது கிடக்கட்டும்: நீங்கள் என்றால் என்ன பதில் கூறியிருப்பீர்கள்?

***தமிழ் பேசும் வெகுஜனப்*** பிரதிநிதிகளுக்கு அதிகாரமுள்ள சிலர் அனுப்பும் கடிதங்கள் முகவரி முதல் உள்ளிருப்புவரை தனிச் சிங்களத்தில்தான் அனுப்பப்படுகின்றனவாம். வெகுஜன சபைக்கு பொறுப்பான அமைச்சு அனுப்பும் கடிதங்களும் அதே ரகம்தானாம். கடந்த காலத்தில் இருந்ததைவிட மொழி அமுலாக்கலின் இன்றைய நிலை 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' நிலையாம்.

**இவ்வாரப் பொன்மொழி:**

"என்று முதன் முதலாக
நீ உன்னையே
கேலி செய்துகொண்டு
சிந்தித்துச் செயற்படுகிறாயோ
அன்றுதான் நீ
வளர்ச்சியடைய ஆரம்பிக்கிறாய்!" ■


படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை




## கடற்பரப்பில் முதற் கரும்புலித் தாக்குதல்

வன்னியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்த கொக்காவில் இராணுவ முகாம்மீது புலிகள் குறிவைத்தனர்.

இம் முகாம் தொடர்பான வேவுத் தகவல்கள் முன்னரே திரட்டப்பட்டிருந்தன.

அரச படைகளுடன் போர் மூண்ட பின்னர் முன்னைய தகவல்கள் மீண்டும் ஒரு தடவை சரிபார்க்கப்பட்டன.

அப்போது வன்னிப் பிராந்திய புலிகளின் தளபதியாக இருந்தவர் பால்ராஜ்.

பால்ராஜ் தலைமையில் கொக்காவில் முகாம்மீதான தாக்குதல் தொடுக்கப்பட்டது.

10.07.90 அன்று தாக்குதல் ஆரம்பமானது. படையினரும் பதிற் தாக்குதலை நடத்தினார்கள்.

ஒரே நாளில் தாக்குதலை முடித்து விடச் சென்ற புலிகளுக்கு படையினர் காட்டிய தீவிர எதிர்ப்பு தடையாக இருந்தது.

பதுங்கு நிலைகளில் இருந்து சரமாரியாக சுட்டுக்கொண்டிருந்தனர் படையினர்.

முதல் நாள் காவலரண்கள் சிலவற்றை கைப்பற்றிய போதும் முகாமை கட்டுப்பாட்டில் கொண்டுவர புலிகளால் முடியவில்லை.

தொடர்ந்து மறுநாளும் சண்டை நடந்தன.

புலிகள் தரப்பில் முதன் முதலில் பெண்கள் அணியினர் முகாம் தகர்ப்பு சண்டையில் முக்கிய பங்கு வகித்தது இந்த தாக்குதலில் தான்.

(இதன்பின்னரே கோட்டை முகாம் முற்றுகை சமர் இடம்பெற்றது)

பெண்கள் அணியினரின் அதிரடித் தாக்குதல் காவலரண்கள் பல வீழ்ந்தன. முகாம் படிப்படியாக புலிகளின் கைகளில் வீழ்ந்து கொண்டிருந்தன.

முகாம் பொறுப்பதிகாரி இறுதிவரை புலிகளுடன் போரிட தனது படையினரை வழி நடத்தினார்.

இரண்டாம் நாள் சண்டையில் முகாம் பொறுப்பதிகாரி புலிகளின் தாக்குதலில் பலியானார்.

பொறுப்பதிகாரி பலியானதும் படையினர் தரப்பில் தளர்வு ஏற்பட்டது. அதே நேரம் புலிகளின் தாக்குதலும் உக்கிரமாகத் தொடங்கியது.

மேலும் சமரை நீடிக்காமல் முடிப்பதற்கு தளபதி பால்ராஜ் கட்டளையிட, புலிகளின் அணிகள் கடும் தாக்குதல் தொடுத்தன.

### புல்டோசர் தாக்குதல்

இரண்டாம் நாளான புதன்கிழமை காலையில் புலிகள் நடத்திய புட்டோசர் தாக்குதலும் முகாமை வீழ்த்தியதில் முக்கிய பங்கு வகித்தது.

கவச வாகனம்போல புலிகளால் செய்யப்பட்ட புல்டோசர் 19ம் திகதி அதிகாலையில் முகாமுக்குள் தடைகளை மோதித் தகர்த்தபடி புகுந்தது.

புல்டோசரை கவசமாக பாவித்து நகர்ந்த புலிகளின் அணிகள் படையினரின் பதுங்கு நிலைகளை சமீபித்து தாக்குதல் தொடுத்தனர்.

முதல் நாள் மோதலின் பின்னர் நள்ளிரவில் தமது தாக்குதலை புலிகள் சற்று நிறுத்தியிருந்தனர்.

புலிகளின் தாக்குதலை முறியடித்து விட்டதாக நினைத்த படையினர் நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கிடையே, திடீரென்று அதிகாலையில் புல்டோசரைக் கவசமாக்கிக்கொண்டு புலிகள் புகுந்தனர்.

இருநாள் சண்டையைக் கொண்ட கொக்காவில் சமரின் இறுதியில் முகாம் புலிகளின் வசமானது.

படையினர் தரப்பில் 70ற்கு மேற்பட்டோர் பலியாகினர். புலிகள் தரப்பில் 18 பேர் பலியாகினர். இவர்களில் ஆறுபேர் பெண் புலிகள்.

கப்டன் உஷா, இரண்டாம் லெப் பிரியங்கா, இரண்டாம் லெப் சாலினி, இரண்டாம் லெப் மாலா, இரண்டாம் லெப் குமாரி, இரண்டாம் லெப் அஜந்தா ஆகிய பெண் புலிகளும், கப்டன் சுகுமார், கப்டன் பாபு, லெப் நியூட்டன், லெப் நிலான், இரண்டாம் லெப்ரினன்ட்களான ஜெயா, கோபி, நவம், நிர்மல், வினோத், மருது ஆகியோரும் பலியாகினர்.

புலிகள் ஏவிய பசிலான் மோட்டார்களால் முகாம் சிதைந்துபோனது. அந்த இடிபாடுகள் மத்தியில் 65 படையினரின் உடல்களை புலிகள் கண்டெடுத்தனர்.

இலகு இயந்திரத் துப்பாக்கிகள் 04, ஆர்.பி.ஜி 03, மோட்டார்கள்-04, ஏ.கே.47 ரக துப்பாக்கிகள்-50 உட்பட பெருந்தொகையான ரவைகள் மற்றும் இராணுவத் தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இம்முகாம் தாக்குதலின்போது பின் வாங்கி அருகிலுள்ள காடுகளில் மறைந்திருந்த படையினரை தேடி அழிக்கும் நடவடிக்கைகளிலும் புலிகள் ஈடுபட்டனர். அதன்போது மேலும் 11 படையினர் கொல்லப்பட்டனர். 11 ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன.

இந்த தேடி அழிப்பு நடவடிக்கையில் புலிகள் தரப்பில் ராஜு, பகீர் ஆகியோர் பலியாகினர்.

கொக்காவில் முகாம் தாக்குதல் வன்னியில் மேலும் பாரிய தாக்குதலுக்கான ஒத்திகைகளமாகவும் அமைந்தது.

### கடற்புலிகள்

புலிகள் இயக்கத்தின் முதலாவது கரும்புலித் தாக்குதல் 05.07.87 அன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த படைமுகாம்மீது நடாத்தப்பட்டது. அது பற்றி முன்னரே இத்தொடரில் விபரிக்கப்பட்டுவிட்டது.

இலங்கைத் தமிழரின் ஆயுதப் போராட்ட வரலாற்றிலும் அதுவே முதலாவது தற்கொலைத் தாக்குதலுமாகும்.

தரையில் வெடிமருந்து ஏற்றப்பட்ட லொறியில் சென்று நடாத்தப்பட்ட அத்தாக்குதலில் பங்குகொண்ட மில்லர் முதற் கரும்புலியானார்.

கரும் புலிகள் நேரடியாக பிரபாகரனால் தெரிவு செய்யப்படுபவர்கள். தம்மை கரும்புலிகளாக அனுப்புமாறு கேட்டு பிரபாகரனுக்கு புலிகள் இயக்க உறுப்பினர்கள் கடிதம் அனுப்பிக் கொண்டிருப்பர். அவர்களில் யார் யாரை கரும்புலித் தாக்குதலில் ஈடுபடுத்தலாம் என்பதை அவர்களது பெயர்களை குலுக்கிப் போட்டு பிரபாகரன் தெரிவு செய்கிறார்.

கரும்புலித் தாக்குதலை தற்கொலை தாக்குதல் என்று புலிகள் அழைப்பதில்லை. தற்கொடை தாக்குதல் என்றே அழைக்கின்றனர்.

1987ல் நடைபெற்ற முதலாவது கரும்புலித் தாக்குதலின் பின்னர் மூன்றாண்டுகள் கழித்து 1990ல் கரும்புலித் தாக்குதலுக்கு திட்டமிடப்பட்டது.

இத்தாக்குதல் நடத்தக் குறிக்கப்பட்ட இடம் தரையல்ல, கடல்!

இரண்டாம் கட்ட ஈழப்போர் 1990 ஜூனில் ஆரம்பமான பின்னரே கடற்புலி அமைப்பை கட்டியமைக்க கூடுதல் கவனம் செலுத்தினார் பிரபாகரன்.

கடற்புலிகளது சிறப்புத் தளபதியாக சூசை நியமிக்கப்பட்டார். கடற்புலிப் பயிற்சிகள் ஆரம்பமாகின.

வெடிமருந்து நிரப்பப்பட்ட படகுடன் சென்று கடற்படைக் கலங்களுடன் மோதும் கரும்புலித் தாக்குதலுக்கே கடற்புலிகள் முதலில் பயிற்சி பெற்றனர்.



பிரபாகரனுடன் கடறகரும் புலிகள் இடமிருந்து வலமாக காந்தரூபன், வினோத், கொலின்ஸ் கடைசிபபடம

முதலாவது கடற் கரும்புலிகளாக பிரபாகரனால் மூன்றுபேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ்.

இவர்களில் காந்தரூபன் (யோகராசா கோணேஸ்வரன்) யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையை சேர்ந்தவர். 1987ல் இலங்கை அரச படையினருடனான மோதலின்போது, படையினரிடம் மாட்டிக்கொள்ளக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தில் சயனைட் குப்பியை கடித்துவிட்டார்.

சக உறுப்பினர்களால் காந்தரூபன் காப்பாற்றப்பட்டார். உயிர்தப்பிய போதும், உடலில் உள்பாதிப்பு இருந்தது.

நிறை உணவு கொடுத்து பராமரிக்குமாறு மருத்துவர்கள் கூறினர். இந்தியப் படை காலத்தில் மணலாற்றுக் காட்டில் காந்தரூபன் பிரபாகரனின் மெய்க்காப்பாளர் அணியில் பணியாற்றினான்.

காந்த ரூபனுக்காகவும் சுகவீனமுடையும் ஏனைய உறுப்பினர்களுக்காகவும் பசுமாடு ஒன்றை காட்டிலுள்ள தளத்திற்கு தருவித்தார் பிரபா கரன்.

காந்த ரூபனுக்கு, இன்னொரு சோகமும் இருந்தது. அவருக்கு தாய் தந்தை கிடையாது. வளர்ப்புத்தாய்தான் இருந்தார்.

கடற்கரும்புலித் தாக்குதலுக்கு செல்ல முன்பாக காந்தரூபன் பிரபாகரனிடம் கூறியது இது: "என்னைப் போன்ற அநாதைகளுக்காக ஒரு இடத்தை அமைத்து, அவர்கள் படிக்க ஏற்பாடு செய்து கொடுங்கோ அண்ணை. என்னை நீங்கள் அன்போடு கவனித்ததுபோல அவங்களையும் கவனிக்க வேண்டும்" காந்தரூபனுக்கு 19 வயது.

பின்னர் 'காந்தரூபன் நினைவாக' அநாதைக் குழந்தைகளுக்கான காப்பகம் உருவாக்கப்பட்டது.

### கப்டன் கொலின்ஸ்

இன்னொரு கடற் கரும் புலி கப்டன் கொலின்ஸ் (பெர்னாந்து சில்வெஸ்டர், நறுவிலிக்குளம், மன்னார்)

இவரது பெற்றோர்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பண்டிவிரிச்சான் கிராமத்தில் தங்கியிருந்தனர். கொலின்சுக்கு 21 வயது.

அவரது வயோதிபத் தந்தையார் கூறுகிறார்: "இவன் தம்பி வலு கெட்டிக்காரன். நல்லா படிப்பான். அவன் படிச்சுக் கொண்டிருக்கேக்க எங்கள் ஊரிலும் ஆமிக்காரர்கள் சுத்திவளைச்சு கனபேரை பிடிச்சுக் கொண்டு போனவை. அதனால் நாங்கள் பல இடங்களுக்கும் இடம் பெயர்ந்தோம். இது அவனுக்கு சரியான கவலை.." என்று கூறுகிறார்.

யுத்தத்தின் தாக்கங்கள்தான் மறுதாக்கத்தை உருவாக்குகின்றன என்பது புரிய வேண்டியவர்களுக்கு மட்டும் ஏனோ புரிவதில்லை.

### கப்டன் வினோத்

கடற்புலியாக சென்ற மூன்றாமவர் கப்டன் வினோத் (வேலுப்பிள்ளை திலகராஜா. வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்) கொலின்சுக்கு 20 வயது.

அவரது அக்கா கூறுகிறார்:

"இண்டைக்குப் பெடியள் கரும்புலியாய் நேவிக் கப்பல் அடிப்பாங்கள் என்று கொஞ்சச் சனம் ஊரைவிட்டுக் கிளம்பிப்போட்டுதுகள்.

நல்லா இருண்ட பிறகு ஊர்ச்சனம் கொஞ்சம் கப்பல் அடிக்கிறதைப் பார்க்க கடற்கரைக்கும் போனார்கள். நாங்களும் போனோம்.

திடீரென்று பெரிய வெளிச்சமாய் நெருப்புச் சுவாலை கடலுக்குள் எரிந்தது. நிலம் நடுங்கியது மாதிரியிருந்தது. எங்களை அறியாமலேயே கண்ணாலே கண்ணீர் வந்திட்டுது. மெதுவான குரலில் அம்மா.. அய்யய்யோ.. என்ற சத்தங்கள் எல்லோர் வாயிலிருந்தும் எழுந்தன. 'ஆரார் பெடியள் போச்சுதுகளோ' என்று சொல்லி நாங்கள் கவலைப்பட்டோம்."

வினோத்தின் அம்மா கூறுகிறார்:

"குண்டுச் சத்தம் கடலுக்குள் பெரிசாக கேக்கேக்க வீட்டு வாசலில் நான் குந்தியிருந்தனான்... ஆரார் பெத்த பிள்ளையளோ என்டு எனக்குள்ளே நினைச்சனான். அடுத்த நாள்தான் தம்பி தெரிந்தது, அதில் நான் பெத்த குஞ்சும் ஒன்டெண்டு!"

### தாக்குதல்

10.7.90 அன்று வடமராச்சி கடலில் 'எடித்தாரா' கட்டளைக் கப்பல் நங்கூரமிட்டு நின்றது.

கடலைக் கண்காணிப்பது, ரோந்துப் படகுகளுக்கு தகவல்கள் கொடுத்து சந்தேகத்துக்கு இடமான படகுகளை மடக்கச் சொல்லுவது போன்ற பணிகளை கட்டளைக் கப்பல் செய்யும்.

அந்தக் கட்டளைக்கப்பலை நோக்கித் தான் கடற்கரும்புலிகளின் படகுகள் பாய்ந்து சென்றன.

படகுகள் தம்மை நோக்கி வருவதைக் கண்ட கடற்படையினர் தாக்கத் தொடங்கினார்கள்.

வெடி மருந்து நிரப்பிய படகை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

கடற் படையினரின் தாக்குதலுக்குள் சிக்காமல் தெளிந்து, வளைந்து முன்னேறிய கரும்புலிப் படகுகள் கட்டளைக் கப்பல்மீது மோதின.

பெரும் சத்தம் எழுந்தது.

கப்பல் பாரிய சேதத்துடன் கடலில் தடுமாறியது.

கப்பலில் இருந்த கடற்படையினர் அனைவரும் பலியானார்கள்.

கடற்பரப்பில் கடற் கரும்புலிகளின் முதற்தாக்குதல் அதுதான்.

(தொடர்ந்து வரும்)

---

## "எங்களை ஏமாற்றினால் பதில் நடவடிக்கைக்கு தயங்கோம்!"

**பிரேமதாசா அரசுடன் போர் மூள முன்பாக புலிகளின் தலைவர் பிரபா 'ரைம்' சஞ்சிகை நிருபர் அனிதா பிரதாப்புக்கு அளித்த பேட்டியிலிருந்து...**

*இரண்டு வருடத்தின் பின் மக்களின் முன் தோன்றிய விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் 'ரைம்' பத்திரிகை நிருபர் அனிதா பிரதாபின் கேள்விகளுக்கு அளித்த பதில்கள்:*

**கேள்வி:- இந்தியாவை நீங்கள் எதிர்கொள்ள வைத்தது என்ன?**



பதில்:- இந்தியா, தமிழரின் நன்மைக்காகவே ஸ்ரீலங்காவில் தலையிட்டது எனக் கூறியது. உண்மையில் இந்தியா தனது நன்மை கருதியே வந்தது. எச்சந்தர்ப்பத்திலும் எங்கள் பிரச்சனைகளை விளக்கி அவற்றைத் தீர்த்து வைக்கும் நோக்கம் இருக்கவில்லை. இந்தியா திட்டமிட்டு ஸ்ரீலங்காவின் இனப் பிரச்சனையை மேலும் வலுவடையச் செய்தது.

**கே:- ஆனால் இந்தியா எப்போதும் ஸ்ரீலங்காவின் ஒருமைப்பாட்டிற்காகவே நின்றது?**

ப:- இலங்கையைத் தான் பாதுகாப்பதாக உலகத்தை நம்பவைப்பதற்கு இதை ஒரு சாட்டாகவே இந்தியா பாவித்தது. இந்தியா, தமிழ் மக்களைப் பாதுகாக்கப் போவதாக கூறிவந்தும் பின் எமது மக்களுக்கெதிராக போர் தொடுத்தமையும் என்னால் மன்னிக்க முடியாததாகும். போர் தொடுத்த மூன்றாம் நாள், பொதுமக்கள் அழிவு காரணமாக இப்போரை நிறுத்துமாறு இந்தியாவுக்கு வேண்டுகோள் அனுப்பினேன். ஆனால் இந்தியா எமது வேண்டுகோளை ஓர் பலவீனமாகக் கருதி எங்களை நசுக்கிவிடலாம் என நினைத்து மேலும் தொடர்ந்து தாக்கியது.

**கே:- உலகத்தின் மூன்றாவது பெரிய இராணுவத்தை எதிர்த்துப் போராடும் தைரியம் உங்களுக்கு எப்படி வந்தது?**

ப:- ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினால் கைது செய்யப்பட்ட பன்னிரண்டு வெவ்வேறு பகுதித் தலைவர்களை விடுவிக்க இந்தியா தவறியது (கைது செய்யப்பட்டோர் பின்பு சயனட் அருந்தினர்) அவர்களின் தற்கொடை எனக்கு இந்திய இராணுவத்தை எதிர்கொள்ளும் திடகாத்திரத்தை கொடுத்தது. எனது முக்கிய சகாக்களில் சிலர் இதற்கு எதிராக என்னை எச்சரித்து, இந்திய இராணுவத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் எவ்வளவு காலம் எதிர்த்து நிற்க முடியும், என கவலை தெரிவித்தனர். நான் அவர்களுக்கு, மனோ திடத்தோடும், தியாகத்துடனும் ஒரு சிறிய இனம் ஒரு வல்லரசை எதிர்த்துப் போர் புரிய முடியும் என வியட்நாம் போரை உதாரணம் காட்டிக் கூறினேன்.

நான் இந்தியாவுடன் போரிடும் தீர்மானம் எடுத்தபோது வெற்றி தோல்விகள் பற்றிக் கவலை கொள்ளவில்லை. நாம் கருத்தில் கொள்ளவேண்டியது எமக்கு போரிடும் திடநம்பிக்கையுண்டா என்பதேயாகும். தோற்றுவிடுவோம் என்ற அச்சத்தில் மக்கள் தங்கள் குறிக்கோளையோ அல்லது உரிமைகளையோ கைவிட முடியாது.

**கே:- இதில் இந்தியாவிற்கு ஓர் படிப்பினை உண்டா?**

ப:- எவ்வளவு வலிமையான வல்லரசானாலும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக எதையும் திணிக்க முடியாது என்பதே அவர்கள் கற்க வேண்டிய பாடமாகும்.

**கே:- இந்திய இராணுவத்தின் முக்கிய பலங்களும் பலவீனங்களும் யாவை?**

ப:- அவர்களின் பலம்-பலவீனமுமது தான்-அவர்களின் இராணுவத்தின் எண்ணிக்கையாகும். அது எங்களுக்கு பல கஷ்டங்களைக் கொடுத்தது. அது எங்களின் இடப் பெயர்ச்சியைக் கட்டுப்படுத்தியது. ஆனால் அவர்களின் பெரும் எண்ணிக்கையினால் அவர்களின் இழப்புகளும் பெருமளவில் இருந்தது. அத்துடன் இப்பெரிய இராணுவத்தின் தேவைகளுக்காக பெருமளவில் பணமும், சக்தியும் விரயம் செய்ய வேண்டியிருந்தது. இன்னொரு முக்கிய பலவீனம்- இந்திய இராணுவத்திற்கு ஆர்வமூட்டும் இலட்சியமற்ற தன்மையாகும். இந்திய சிப்பாய்களுக்கு தாங்கள் ஏன் சண்டையிடுகிறோம் என்பது தெரியாது.

**கே:- தமிழீழ விடுதலைப்புலிகளின் பலமும் பலவீனங்களும் யாவை?**

ப:- எங்களது பலமும்-பலவீனமும் மிகையான தன்நம்பிக்கையாகும். சில சமயங்களில் எங்கள் வீரர்கள் மிக ஆபத்தான தாக்குதல்களிலும் ஈடுபடுவர். உதாரணமாக; தப்பவழியில்லாத இடங்களிலும் இந்திய ரோந்துப்படைகளை மறைந்திருந்து தாக்குவது. இவற்றினால் மிக இழப்புக்கள் நேர்ந்தன. சில சமயங்களில் நாங்கள் கவலையீனமான செயல்களிலும் ஈடுபட்டோம். ஆனால் எங்களின் மிகையான தன்நம்பிக்கையினாலேயே எங்கள் வீரர்கள் மிகவும் ஆச்சரியப்படக் கூடிய வீரம் செறிந்த தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

**கே:- 6000 தமிழ் பொது மக்கள் கொல்லப்பட்டனர். இவ்விழப்பு பெறுமதியானதா?**

ப:- ஆம், எமது மக்களின் சுதந்திரத்திலும், சுயாட்சியிலும் எந்த சக்தியையும் தலையிட விடமாட்டோம் என நிரூபித்துள்ளோம்.

**கே:- ஆனால் நீங்கள் என்ன நன்மை பெற்றீர்கள்?**

ப:- நான் தன்னம்பிக்கையும் தைரியமும் எமது மக்களின் ஆதரவையும் பெற்றுள்ளேன்.

**கே:- பிரேமதாஸாவுடன் பேச்சுவார்த்தை தொடங்க உங்களைத் தூண்டியது யாது?**

ப:- எமது மக்கள், இந்தியா எங்களுக்கு தமிழீழம் (தனி நாடு) தருமென நினைத்தனர். அதற்குப் பதிலாக இந்தியா எங்கள் விருப்பத்திற்கு மாறான ஓர் ஒப்பந்தம் செய்தது. ஆகவே ஸ்ரீலங்கா அரசுடன் பேசி அதிலும் பார்க்க சிறந்த ஒழுங்குக்கு வரலாம் என நினைத்தோம். இதைத் தவிர ஓர் அந்நியநாடு தலையிட்டு எங்கள் மக்களை ஆதிக்கம் செலுத்துவதை தமிழீழ விடுதலைப்புலிகள் விடமாட்டார்கள். பிரேமதாஸாவும் இதே அப்பிராயமுடையவராகவிருந்தார். அவரும் அந்நிய தலையீட்டை ஒழிப்பதற்கான திடசங்கற்பமுடையவராகவிருந்தார்.

**கே:- இந்திய இராணுவம் முழுமையாக வெளியேறிய இச்சமயம் பலர் உங்கள் பரம விரோதியான ஸ்ரீலங்கா அரசுடன் போர் மூளுவது தவிர்க்கமுடியாதது என அஞ்சுகின்றனர்?**

ப:- எங்கள் நீண்ட கால சரித்திரமே எங்கள் மக்கள் அரசினால் அடக்கியொடுக்கப்பட்டதேயாகும். ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிரான முறையில் ஈடுபடுமானால் நாம் அதை எதிர்த்து போராடுவோம். ஆனால் இப்போதுள்ள அமைதி நிலை தொடர்வதையே நாம் விரும்புகிறோம்.

**கே:- மாகாணசபை தேர்தல்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஈடுபட விரும்புகிறார்கள் என்பது எவ்வளவு நம்பகரமானது?**

ப:- நாம் மனப்பூர்வமாகவே ஈடுபடுகிறோம். இந்தியாவிற்கும் உலகிற்கும் நாம் உண்மையான மக்கள் பிரதிநிதிகள் என்பதைக் காட்ட விரும்புகிறோம்.

**கே:- சுதந்திரமான தமிழீழக் கோரிக்கையை நீங்கள் கைவிட்டுவிட்டீர்களா?**

ப:- நாங்கள் கைவிடவில்லை

**கே:- அப்படியானால் நீங்கள் பிரேமதாஸாவுடன் என்ன பேசுகிறீர்கள்? இன்னும் நீங்கள் பிரிவினைக் கொள்கையை பிடித்துக் கொண்டிருந்தால், எவ்வாறு தேசிய நீரோட்டத்தில் நீங்கள் சேரமுடியும்?**

ப:- நாம் அரசியல் நீரோட்டத்தில் சேருகிறோம். எங்கள் சுயநிர்ணயக் கோரிக்கை நாங்கள் அரசியலில் ஈடுபடுவதற்குத் தடையாக இருக்காது.

**கே:- பிரேமதாஸாவுடன் உங்கள் சமாதானப் பேச்சுக்கள் ஓர் ராஜதந்திர முயற்சி மாத்திரமே என்று பலர் கருதுகின்றனர்.**

ப:- நாம் ஒருவரையும் ஏமாற்றவோ, நம்பிக்கைத் துரோகம் செய்யவோ இல்லை. அதே நேரம் எங்களை யாரும் ஏமாற்றினாலோ அல்லது நம்பிக்கைத் துரோகம் செய்தாலோ பதில் நடவடிக்கை எடுக்கத் தயங்கோம். எங்களை எவரும் நம்பினால் அவரின் நம்பிக்கைக்கு பாத்திரமாக நாம் செயற்படுவோம். ■

படிப்பகம்

## இலக்கிய நயம்

வானத்தை நிலவு
சலவை செய்துகொண்டிருந்த
வெள்ளை இரவில்,
அவன் மனதில் மட்டும்
கறுத்த இரவு!

தென்றல் சுட்டுவிட்டது!
நிலவு எரித்துவிட்டது!

தேனுக்குள் நஞ்சு
கலந்துவிட்டது!

பாலுக்குள்ளும் விஷம்
புகுந்துவிட்டது!

பூவுக்குள் நாகம்
குடி புகுந்துவிட்டது!

உயிர் மட்டும்
ஏன் மிச்சமிருக்கிறது?

அவன் விரக்தியின்
உச்சத்தில்
மரணத்தின் முகவரியை
விசாரித்துக் கொண்டிருந்தான்!

மனதுக்குள் விழுந்த
மலர்
முள்ளானது எப்படி?

இதயத்தில் ஏற்றிய
தீபம்
இதயத்தையே பொசுக்கும்
தீயானது ஏனடி?

கல்லுக்குள்ளும்
ஈரம் உண்டு கண்மணி!
கனிக்குள் மட்டும்
இல்லாமல் போனது எப்படி?

நேற்று
மதுவார்த்த எண்ணங்கள்
இன்று
விஷம் வார்ப்பது ஏனடி?

சோகம்
ஒவ்வொரு கல்லாக
எடுத்தெடுத்து
மனக்குளத்தில்
எறிந்து கொண்டிருந்தது!

காயப்பட்ட மனதில்
வழியும் இரத்தத்தை
எந்தக் கைகள்கொண்டு
நிறுத்துவான்?

காதல் கரம்
நீட்டியவள்தான்
காணாமல் போய்விட்டாளே!

யாராலும் கடத்தப்படவில்லை
தானே தன்னை
கடத்திப் போய்விட்டாள்!

யாராலும்
மண்ணில் புதைக்கபடவில்லை!
தானே தன்னை
புதைத்துக்
கொண்டாள்!

"காதலித்தது போதும்
பிரிந்துவிடலாம்!
நேசித்தது போதும்
மறந்துவிடலாம்!"

தேன் சிந்தும்
இதழ்களால்-அவள்
சிந்தியது விஷம்!

"காதலித்தது போதும்
பிரிந்துவிடலாம்!
நேசித்தது போதும்
மறந்துவிடலாம்!"

தித்தித்த இதழ்களால்
காதலுக்கு
தீவைத்துவிட்டாள்!

ஆலையில் இட்ட
கரும்பின் நிலை
அவன் மன நிலை!

தீயில் வெந்த
புழுவின் நிலை
அவன் நிலை!

அவள் சொன்னதை
நினைவில் மீட்டினான்!

"காதல் என்பது
விளக்கு!

காதலர்கள்
விட்டில் பூச்சிகள்!

விளக்கு
அழகாக வலை விரிக்க,
விட்டில் பூச்சிகள்
தீய்ந்து போகின்றன!"
தத்துவம் பேசினாள்,

அடிப்பாவி!
நான் தானடி விட்டில் பூச்சி!
நீ சிறகடித்த வண்ணக்கிளி!
என்னை கொத்திவிட்டு
பறந்துவிட்டாயேடி!

காதலிகள் என்பவர்கள்
விளக்கு
காதலன்கள் என்பவர்கள்
விட்டில் பூச்சிகள்!
என்றுநான் பேசமாட்டேன்!

எல்லாக் காதலிகளும்
ஏமாற்றுவதில்லை!

எல்லாக் காதலன்களும்
நல்லவர்களுமில்லை!

அவனுக்குள் சோகம்
சுரந்துகொண்டிருந்தது!

அவன் காதல்
தோல்விக்குள்
கவிழ்ந்து கொண்டிருந்தது!

புறம் அறிந்த
அளவுக்கு-அவளின்
அகம் அறியவில்லை!

குத்தி நின்ற எழில்களிலும்
கொத்துகின்ற பார்வையிலும்
முற்றித்திரண்ட மோகத்தில்
பற்றிக்கொண்டு கிடந்தேன்!

உள்ளிருக்கும் மனம்
அறியாமல்,
கள்ளிருக்கும் மலர்
என்று நினைத்து,
முள்மீதா மோகித்தேன்?!

குத்திவிட்டதடி
மனதை
கீறிக் கிழித்துவிட்டதடி!

தோள் சேர
தழுவியபோது,
தேள் என்று
தெரியாமல் போனதடி!

கால் சேர
நெருங்கிய போதும்
வழுக்குமரம் என்று
தெரியாமல் போனதடி!

அவன் மனம்
தாளாத சோகத்தில்
தத்தளித்தது!



## கண்ணீர் குளிப்பு

"எதற்காக காதலை
துறந்தாய்?"

எந்த மரத்தின்கீழ்
காதலை எதிர்க்கும்
ஞானத்தை பெற்றாய்?

காதல் தியாகிகளுக்கு
சமாதி கட்டியிருக்கிறார்கள்!
நீயோ!
எங்கள் காதலுக்கே
சமாதி கட்டிவிட்டாயேடி!

என் கண்களில்
ஏன் கண்ணீர் துளி?

உன்னை நினைத்தே
உருகிக் கொண்டிருக்கிறேன்
என்றா நினைத்தாய்?

பைத்தியக்காரி!
காதல் துரோகியை
காதலித்ததற்காகத்தானடி
இந்தக் கண்ணீர்துளி!

உன்னை தொட்ட
உதடுகளை
இந்தக் கண்ணீர்
கழுவட்டும்!

உன்னைத் தொட்ட
கரங்களை
இந்தக் கண்ணீர்
கழுவட்டும்!

உன்னை காதலித்த
பாவம் தீர
கண்ணீரால் ஒரு
ஜலக்கிரீடை
செய்து கொண்டிருக்கிறேன்!

துரோகி!
அழகிருந்தென்ன
அன்பில்லாமல்!
எழில் இருந்தென்ன
அன்பில்லாமல்!

அகத்து உறுப்பாம்
அன்பு இல்லாமல்
புறத்து உறுப்புகள்
உனக்கிருந்து
யாது பலன்?"
என்றான் உரத்து,
உதறினான் கவலையை!

"புறத்துறுப் பெல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு"

அதிகாரம்-08, குறள்-79

தருவது ரசிகன்

* இங்கிலாந்தில் இலங்கை அணியின் ஆட்டம் எப்படிச் சிந்தியா?

செல்வி ஆர்.வர்ஷா, கொழும்பு-06.

ஆசியாவின் மைதானங்களில்தான் இலங்கை அணி சோபிக்கும் என்று அவுஸ்திரேலிய முன்னாள் கப்டன் கூறியதாக ஞாபகம். அதனைப் பெரிய பொய்யாக்கி விட்டனர்.

* சிந்தியா! இலங்கை கிரிக்கெட் அணியி விருந்து மகாநாமாவை நீக்கியது சரியா?

எம்.கிருஷ்ணகுமார், உக்குவளை.

இங்கிலாந்தில் தோல்வியடைந்திருந்தால் இக் கேள்வி பெரும் பூதமாக உருவெடுத் திருக்கும். பெற்ற வெற்றியால் மகாநாம விவகாரம் மறக்கப்பட்டுவிட்டது. சில வெற்றி கள் சில தவறுகளை பூசிமெழுகிவிடும்!

* கவலைகளை மறந்து தூங்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டு தூங்கினாலும் முடியவில்லையே?

பா.ரவிநாத், யாழ்ப்பாணம்.

இரவில் தூக்கம் வருவதில்லை என்று ஒருத்தர் டாக்டரிடம் சென்றார். டாக்டர் அவரிடம், "நீ தினமும் இரவு படுத்தவுடன் உன் வீட்டில் நிறைய செம்மறி ஆடுகளை வளர்ப்பதாகக் கற்பனை செய்துகொள். ஒவ்வொரு ஆடாக எண்ணிக்கொண்டு வா. நீ நூறாவது ஆட்டை எண்ணும்போதே உனக்குத் தூக்கம் வந்துவிடும்!" என்று யோசனை கூறினார்.

சரியென்று சென்றவன் ஒரு வாரம் கழித்து திரும்பி வந்தான்.

"டாக்டர்! என் நிலைமை ரொம்ப மோச மாகிவிட்டது. முன்பாவது விடியற்காலையில் சிறிது தூங்குவேன். இப்போது அதுவும் போய்விட்டது" என்று புலம்பினான்.

"என்ன ஆயிற்று? விளக்கமாகக் கூறு?" என்று டாக்டர் கேட்டார்.

"டாக்டர்! நீங்கள் கூறியபடி ஆடுகளை எண்ணத்தொடங்கினேன். ஆடுகளின் எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தாண்டியும் எனக்குத் தூக்கம் வரவில்லை. பிறகு கற்பனையிலேயே செம்மறியாடுகளின் தோலை உரித்தேன். பதப்படுத்தினேன். கோட், சூட் முதலியவை தைத்தேன். எடுத்துக்கொண்டு போய் ஊருக்குள் விற்பனை செய்தேன். அதில் ஆயிரம் ரூபாய் நஷ்டம் வந்துவிட்டது!" என்று அழத்தொடங்கிவிட்டான்.

* ரஜினியின் அடுத்த பட தகவல்கள் துப்பறியும் கதைபோல இருக்கிறதே?

கோ.ஸ்ரீதரன், காலி.

புதிய தகவல் ஒன்று சொல்லவா? ரஜினியின் அடுத்த படத்தில் கௌரவ பாத்திரம் ஒன்றுக்கு சிவாஜியை நடிக்கக் கேட்டிருக்கிறார்களாம்.

* ஜெயலலிதாவின் மிரட்டலுக்கு பாரதிய ஜனதா பணியவில்லையே?

எஸ்.எஸ்.ரிப்னா, மாத்தறை.

அவர் கையில் இருப்பது அட்டைக்கத்தி தான் என்று புரிந்து கொண்டனர்!

* ஆண்பிள்ளை, பெண்பிள்ளை-இவர்களில் தொல்லை இல்லாத பிள்ளை எந்தப்பிள்ளை?

செல்வி அ.ரேணுகா, திருமலை.

நல்லாய் கேட்டீர்கள் போங்கள்! பிள்ளை என்றாலே தொல்லை என்றுதானே அர்த்தம்! அமரர் கிருபானந்தவாரியார் கூறியதைப் பாருங்கள்:

"ஒரு பொருளைக் குறிக்க தமிழில் பல சொற்கள் உள்ளன. ஆனால் ஒரு தனி அர்த்தம் இருக்கிறது. உதாரணத்துக்கு 'பிள்ளை' என்றால் தொல்லை தரும் வாரிசு என்று அர்த்தம். மகன் என்றால் குடும்பத்தைக் காப் பாற்றுபவன். மைந்தன் என் றால் குடும்பத்துடன் சுற்றத் தாரையும் தாங்கவல்லவன். குமாரன் என்பவன் தந்தையை விட அறிவில் ஒங்கியவன் புத்திரன் என்றால், தந்தையை சொர்க்கத்திற்கு அனுப்பக் கூடிய நல்லறம் செய்பவன் என்று அர்த்தம்!"

உங்கள் கேள்விக்கு எனது பதில்: இருகண்ணில் ஏது உயர்வு தாழ்வு!

* இப்போது வரும் படங்களில் கதாநாயகர்களுக்கு இரண்டு ஜோடிகள் இருப்பது வழக்க மாகி வருகிறதே, ஏன்?

கே.நம்பிராஜ், கொழும்பு-06.

ஒரு ஜோடி கிளு கிளுப்புக்கு. இன் னொரு ஜோடி மேலதிக கிளு கிளுப்புக்கு!

* சிந்தியா! நட்புக்கு ஒரு விளக்கம் கூறுக?

எ.ப.தக்ஷிகா, ஜெர்மனி.

சமீபத்தில் படித்து, மனதில் தைத்து நிற்கும் கருத்து இது:

"நட்பு என்பது நுனிக்கரும்பில் தொடங்கி அடிக்கரும்புவரை சாப் பிடும்போது ருசி கூடிக்கொண்டு போவதுபோல் இருக்க வேண்டும்."

* நிவாரண நிறுத்தம் தொடருமா?

ஜெ.சமீர், புத்தளம்.

ஆம்! ஆம்! அஷ்ரஃப் இருக்க, நிறுத்தமே இல்லை என்கிறார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்! நிறுத்தம் தான் என்கிறார் புனரமைப்பு அதிகாரி! நிறுத்தம் பரிசீ லிக்கப்படும் என்றாராம் ஜனாதிபதி! இதில் யார் அரசாங்கத்தை பிரதி நிதித்துவப்படுத்தி பேசுகிறார்கள்? ஒரே குழப்பம்! நம்மைக் குழப்பு கிறார்களா? அல்லது..?!

* அஜித்குமார் நிலை கவலைக் கிடந்தானே?

சி.செந்தில்குமார், நீர்கொழும்பு.

இங்குள்ள படத்தைப் பாருங்கள். அப்படியா தெரிகிறது?!ஹீரோ போனால் இன்னொரு ஹீரோ!

* எனக்காக கடி ஜோக் ஒன்று கூறுங்களேன்?

பி.புனிதமலர், காரைதீவு.

"மலைமீது ஏறும், இறங்கும் ஆனால் கொஞ்சமும் அசையாது. அது என்ன?"
"மலைப்பாதை!"

* 'பிரின்ஸெஸ் கேஷ்' கப்பல் விவகாரத்தில் ஜனாதிபதி செயலகம் கூறிய தகவல் பற்றி? இனி யாரை நம்புவது?

ஜெ.மிதுஷா, கொழும்பு-09.

ஒரு இரவுமட்டும் வாழ்ந்த பொய்! (மறுநாள் காலையில்தான் அதற்கு நேர்மாறான தகவலை அரச வானொலியே கூறிவிட்டதே!) யாரையும் உடனே நம்பா தீர்கள்! தெளிந்து-ஆராய்ந்து நம்புங்கள்!



'சின்னராஜா' படத்தில் ரோஜா-கார்த்திக்-பிரியா ராமன்

* திருவாளர்கள் வாசுதேவ நாணயக்காரா, பட்டி வீரக்கோன் ஆகியோர் தீர்வு யோசனையை அமுல்படுத்துமாறு போராடி வருகின்றனர். 'முரசு' ஏன் அதுபற்றி எழுதவில்லை?

சி. தங்கவேலாயுதம், வவுனியா.

திரு.வாசுதேவ நாணயக்காரா இனவாதமற்ற ஒருவர் என்பது நூறு வீத நிஜம்! அவர் நினைத்தால் அரசுடன் முரண்படாமல் நிறைய சம்பாதித் திருக்கலாம் என்பது இன்னொரு நிஜம்! ஆனால் அவர் நடத்தும் போராட்டம் தமிழ் பேசும் மக்களுக்கு கெடுதியானது! நிராகரிக் கப்படவேண்டியதும், அரைகுறையானது மான தீர்வு யோசனையை அமுல்படுத்தினால் அமுக்கப்படுவது தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகள் அன்றோ!

* அமெரிக்காவின் அநியாயத் தாக்குதலை இந்தியா வர வேற்றது சரியா?

எஸ் சிவபாதம், மட்டக்களப்பு.

தனது நலனின் பொருட்டு இந்தியா தப்புச் செய்வது இது முதற் தடவையல்ல!

* இந்திய மாலுமிகள் இருவரை விமான நிலையத்தில் வைத்து விசாரித்தனரே, இந்தியா ஏன் கண்டிக்கவில்லை?

எம்.சம்சுதீன், கல்முனை.

செய்திகளில் சொல்லப் பட்டதுபோல அங்கு நடந்தது விசாரணையல்ல! விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற கதைதான் நடந்தது! நட்பு முறையில் வி.ஐ.பிப் பகுதியில் வைத்து அளவளாவப்பட்டது என்பதே சரி! கப்டன் ரொம்ப சூடாக இருந்ததாகக் கேள்வி!

* 'நிலாவே வா' எப்போது வரும்?

சி.லீனஸ், கொழும்பு-12.

வந்து பல வாரங்களாகி-இங்கும் எப்போதோ வீடியோவில் வந்துவிட்டதே!



'உயிரோடு உயிராக' படத்தில் அஜித்குமார்-ரிச்சா

ஸ்போர்ட்ஸ்

## உலக சாம்பியன் டெஸ்ட் போட்டிகள்

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கு முன் டெஸ்ட் போட்டிகள்தான் விளையாடப் பட்டன. இருப்பினும் கிரிக்கெட் உலகக் கிண்ணத்திற்காக ஒருநாள் கிரிக்கெட் போட்டி கள்தான் விளையாடப்படுகின்றன.

முதலாவது உலக சாம்பியன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை 2000ம் ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகவலை சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் தலைவர் ஜக்மோகன் டால்மியா தெரிவித்துள்ளார்.

உலக சாம்பியன் டெஸ்ட் போட்டி முழுவதையும் இரண்டரை மாதங்களில் முடித்துவிடலாம் என்று கூறும் டால்மியா, இப்போட்டிகளை 52 நாட்களிலேயே நடத்தி முடிக்கத் திட்டம் வகுக்கப்படுவதாக மேலும் தெரிவித்தார்.

## பிரட்மனின் பிறந்தநாள்

கிரிக்கெட் உலகின் சகாப்தம் எனக் கருதப்படும் அவுஸ்திரேலியாவின் சேர். டொனால்ட் பிரட்மனின் 90வது பிறந்த தினம் ஆகஸ்ட் 27. அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் பிறந்தநாள் விழா கோலாகலமாக நடைபெறுகிறது.

பிரட்மனின் பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்ள இந்திய அணியின் முன்னாள் கப்டனும், அதிரடி ஆட்டக்காரருமான சச்சின் டெண்டுல்கருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள் ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஒழுங்கு செய்துள்ள இந்த விழாவில் பிரட்மன் கலந்து கொள்ளமாட்டார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இருப்பினும் டெண்டுல்கரைச் சந்திப்பதற்காக பிரட்மன் நேரம் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

இந்த விழாவில் கலந்துகொள்ளும் டெண் டுல்கர், அதுபற்றி நிருபர்களிடம் பேசும் போது,



பிரட்மன்

"கிரிக்கெட் உலகின் வரலாறாக விளங்கிய டொன் பிரட்மனின் 90வது பிறந்த தின விழாவில் கலந்து கொள்ள எனக்கு அழைப்பு வந்திருப் பதை நான் மகிழ்ச் சிக்குரியதாகக் கருதுகிறேன்.

பிரட்மனுடன் என்னை ஒப் பிட்டுப் பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவருடன் எந்த வீரரையும் ஒப்பிடவே முடி யாது. அந்தளவிற்கு அவர் ஒரு சிறப்பான வீரர்.

எனது ஆட்டம் குறித்து நான் திருப்தி அடையவில்லை. எனது ஆட்டம் இன்னும் மேம்படைய வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரை தொடர்ந்து ஆடு வதன் மூலமே திறமையை வளர்த்துக்கொள்ள முடியும் என்று கருது கிறேன்!" என்று கூறியுள்ளார்.

## மீண்டும் கேப்டன்

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக் கிடையே நடைபெறும் சஹாரா கோப்பைக் கிரிக்கெட் போட்டிக்கு, பாகிஸ்தான் அணி யின் கேப்டனாக துவக்க ஆட்டக்காரர் அமீர் சொஹைல் நியமிக்கப்பட்டுள்ளார்.

சஹாரா போட்டிகள் தவிர, பாகிஸ் தானில் அவுஸ்திரேலியா, ஸிம்பாப்வே ஆகிய அணிகளுடன் நடைபெறும் போட்டித் தொடர்களுக்கும் அமீர் சொஹைலே கேப்ட னாக இருப்பார்.

அத்துடன் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக இருந்த ஹாருன் ரஷீத் நீக்கப்பட்டு, புதிய பயிற்சியாளராக முன்னாள் கேப்டன் ஜாவெட் மியாண்டாட் நியமிக்கப் பட்டுள்ளார்.

## புதிய பயிற்சியாளர்

அடுத்தமாதம் கோலாலம்பூரில் நடை பெறும் கொமன்வெல்த் கிரிக்கெட் போட்டிக் கான பங்களாதேஷ் அணியின் கேப்டனாக அக்ரம் கான் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அணியின் பயிற்சியாளராக இருந்த மேற்கிந்தியத்தீவின் கோர்டன் கிறீனிட்ஜ் நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக காலிப் அஷ்ரப் நியமிக்கப்பட்டுள்ளார். காலிப் அஷ்ரப் பங்களாதேஷ் அணியின் முன்னாள் கேப்டன் ஆவார்.



www.padippakam.com

படிப்பகம்

# தேவைகள்



**வெண்ணிலா சூரியகுமாரன்-வன்னி**

ஸ்கந்தபுரம் பிரதான வீதி புழுதி பறக்க நீண்டிருந்தது. உச்சி வெய்யில் சுள்ளென்று எரிக்க மேல்சட்டை வியர்வையில் முதுகோடு ஒட்டிக் கொண்டது.

ஆறுமுகம் சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்தான். சைக்கிளின் பின் கரியரில் விறகுச் சுமை. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் அடிவயிற்றிலிருந்து மூச்சு வாங்கியது.

குமரன் தாழ்வுக் காட்டுக்குள் விறகு தறித்து சைக்கிளில் கட்டிக் கொண்டு வரும் வழியில் கரும்புத் தோட்டம் சந்தியில் சைக்கிளுக்கு காற்று போய்விட்டது. தேய்ந்துபோன ரயரும் நைந்து போன ரியூப்பும்...

அங்கிருந்தே மூச்சு வாங்க உருட்டிக் கொண்டு வருகிறான். கடைத்தெருவின் ஒரு பக்க ஒழுங்கைக்குள் திரும்பினான். ஒவ்வொரு காணிக்குள்ளும் நிறைய குடிசைகள்... நிறைய மனிதர்கள். ஒவ்வொருவரிடமும் "விறகு வேணுமா?" என்று கேட்டுக் கொண்டே நடந்தான்.

இப்போது எல்லோருமே தங்களுக்குத் தேவையான விறகை காட்டுக்குள் போய் வெட்டிக்கொண்டு வந்து விடுகிறார்கள். அதனால் இப்போது விறகு சுலபமாக விலைப்படுவதில்லை. நாளெல்லாம் வெய்யிலுக்குள் திரிந்து தெருத் தெருவாய் அலைந்தாலும் சில நாட்களில் விறகு விற்க முடியாமலே போய்விடும்.

வெண்ணிலா திரையரங்கின் முன்னால் நின்ற மரத்தின் கீழே நின்று மூச்சை இழுத்து விட்டுக் கொண்டான்.

மனதுக்குள் சொல்ல முடியாத துயரம் பொங்கியது. நேரம் போகப்போக விறகு விற்க முடியாமற்போனதை நினைக்க மனம் பதை பதைத்தது. வீட்டில் ராசனின் நிலை என்ன பாடோ தெரியவில்லை இரண்டு வயது ராசன் துவண்டு போய்ப் படுத்திருக்கிறான்.

இடம் பெயர்ந்து ஸ்கந்தபுரம் வந்தபிறகு எத்தனை தரம் காய்ச்சல் வந்துவிட்டது. நேற்றும் ஆஸ்பத்திரியில் காட்டியபோது அங்கர் மா வாங்கி கரைத்து கொடுக்கச் சொல்லிவிட்டார்கள். மா பெட்டி வாங்க தொண்ணூறு ரூபாய் தேவை.

நேற்று விறகு விற்ற நாற்பத்தைந்து ரூபாவையும் மடியில் சுருட்டி வைத்திருக்கிறான். 'இன்றைக்கும் இந்த விறகு நாற்பத்தைஞ்சு ரூபாக்கு விற்க வேண்டும். யாராவது விறகை வாங்கிக் கொண்டு காசு தரமாட்டார்களா?' என்று மனம் ஏங்கியது. விறகை விற்ற உடனே மா பெட்டி வாங்கிக் கொண்டு வீட்டுக்கு ஓட வேணும்.

அவன் வியர்த்து வழிந்த முகத்துடன் சைக்கிளை உருட்டிக் கொண்டே ஒழுங்கையில் நடந்தான். சிறிது தூரத்தில் ஒரு வீட்டு வாசலில் நின்றவர் 'விறகு' என்று கூப்பிட்டார்.

"விறகு என்ன விலை?"

"நாற்பத்தைஞ்சு" என்று சொல்ல வந்தவன் சட்டென்று "ஐம்பது ரூபா...!" என்று சொன்னான், எப்படியும் குறைத்துத்தான் கேட்பார்கள். "உந்த விறகு ஐம்பது ரூபாயே? நாப்பதெண்டா தா. இல்லாட்டி வேண்டாம்!"

"நல்ல பாலை விறகு அண்ணை வாங்குங்கோ..."

"நாப்பதுக்கு தாறியே...?"

"கஷ்டப்பட்டு கொண்டுவாறன். அப்ப நாப்பத்தைஞ்சு எண்டாலும் தாங்கோ!" அந்த ஆள் கொஞ்சம் யோசிக்க அவன் கலவரத்துடன் பார்த்தான். ஐந்து ரூபா குறைந்தாலும் மா பெட்டி வாங்க முடியாது....

"சரி, இந்தப் பக்கம் பறிச்சு விடு!"

அவன் அவசரமாக விறகை எடுத்துப் போட்டான். அவர் உள்ளே போய் காசு கொண்டு வந்து கொடுக்க சரி பார்த்து மடிக்குள் சுருட்டி வைத்துக் கொண்டான். வியர்த்து வழிந்த முகத்தை தலையில் கட்டிய அழுக்குத் துவாயை எடுத்து துடைத்துக் கொண்டு அவசரமாய் சைக்கிளை மிதித்தான்.. 'சேரன்' கடையில் அங்கர் பெட்டி வாங்கிக் கொண்டு வீடு போகும்போது மனதுக்குள் நிம்மதி இருந்தது. நிதானமாய் மூச்சு வந்தது. 'மா கரைச்சு பிள்ளைக்கு குடுத்தால்தான் ஓடி ஆடி விளையாடும், என்ர குஞ்சு....'

முகத்து வியர்வையோடு கண்ணீரும் கலந்து வழிந்தது. மணியம் குளத்தில் இருந்த தங்கள் குடியிருப்பை அடைந்தபோது நேரம் மூன்று மணி. வீட்டு வாசலில் கூட்டமாய் ஏழெட்டு சனம், உள்ளிருந்து அவன் மனைவி ஓலமிட்டு அழுகின்ற குரல் காதில் வந்து அறைந்தது. "அய்யோ எங்கட ராசா போயிட்டியே... என்ர செல்லம்.. என்ர குஞ்சு..."

# தர்ம அடி

**கார்த்திக்**

தண்ணி இல்லா காடு... ம் அந்த மாதிரி. பஸ் வசதி இல்லாத ஊர். அந்த ஊருக்கு ஒரே ஒரு பஸ். அதுவும் அந்த வழியில், இரண்டு கி.மீ.தொலைவில். ஒரு நாளைக்கு இரண்டு தடவை வந்து போகும்.

அந்த ஊருக்கு எனக்கு வேலை மாற்றம்! கையில் இரண்டு பேக். ஒரு சூட்கேஸ். ஒரு தலையணையுடன் வந்திறங்கினேன்.

மணி காலை 8.00.

பசி வேறு, இவ்வளவையும் தூக்கிக் கொண்டு அந்த ஊருக்கு இரண்டு கி.மீ.தூரம் வேறு நடக்க வேண்டும். அம்மா எனக்கு ஆசையோடு கட்டிக் கொடுத்த சாப்பாட்டுப் பார்சல் வேறு என்னைப் பார்த்துச் சிரித்தது. விதியை நொந்து கொண்டு பொதிகளைத் தூக்கிக் கொண்டு நடந்தேன்.




ஒரு நூறு மீட்டர் தூரம் நடந்திருப்பேன். ஒருவன் தலை தெறிக்க கையில் வேட்டியைப் பிடித்துக் கொண்டு ஓடி வந்தான். அவனைப் பின் தொடர்ந்து 10 அடி தொலைவில் இரண்டு பொலிஸ்காரர்கள் துரத்தியபடி, அதன் பின்னால் நான்கைந்து ஆட்கள், அவன் பின் புதுமணத் தம்பதி ஆகியோர் ஓடி வந்தனர்.

"மறிடா-புடிடா".. என்ற சத்தத்துடன்.

நான் புரிந்து கொண்டேன். திருடன், புதுப் பொண்ணோட நகையை அறுத்துக்கிட்டு ஓடியாறான். இவனை அனைவரும் விரட்டிக்கொண்டு வர்றாங்க, என்று.

நான் சுதாகரித்துக் கொண்டு, என்னுடைய பொதிகளை தரையில் மொத்தென்று போட்டு விட்டு, அவனை மறிக்கத் தயாரானேன்.

நான் தயாரானதற்கும் அவன் என்னைக் கடப்பதற்கும் சரியாக இருந்தது. அவனை லபக் என்று பிடித்துக் கொண்டேன். அவன் திமிறினான். "என்னை விடுடா போகனும்!" என்று கத்தினான். நான் விடுவதாக இல்லை.

நான் வெற்றிப் பெருமிதத்துடன் அவன் கைகளைப் பின்னால் இறுக்கியபடி நிமிர்ந்தேன்.. அதிர்ச்சி...!

பின்னால் வந்த பொலிஸ்காரர்களும், அவர்கள் பின்னால் வந்தவர்களும், இதைக் கண்டு கொள்ளாமல் எங்களைக் கடந்து ஓடினார்கள்.. விழித்தேன்!

அவனும் சிறிது போராட்டத்துக்குப் பின் என்னிடம் இருந்து திமிறி விடுபட்டு சட்டை செய்யாமல் ஓடினான். நான் ஆச்சரியமாகப் பார்த்தேன்.

நான் வந்து இறங்கிய பஸ் திரும்பிக் கொண்டு இருந்தது.

அனைவரும் ஓடி ஏறி விட்டார்கள். இவன் ஓடுவதற்குள் பஸ் சென்று விட்டது.

ஆத்திரத்துடன் திரும்பினான்.

அப்புறம் என்ன?

மீண்டும் தலைப்பை கவனிக்கவும்.

# இதுதான் அம்மா



**எஸ்.அலாவுதீன்**

ரவிக்கு அம்மாவைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. இந்த வீட்டுக்காக என்னமாய் பாடுபடுகிறாள், அவளுக்காக எதையும் செய்து கொள்வதில்லை. காலையில் நேரத்தில் எழுந்து விடுவாள். அப்புறம் பம்பரந்தான்-வேலை செய்வதில். கொஞ்சம் கூட ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலைதான். எப்படியும் இரவு படுக்கச் செல்ல மணி பத்தாகிவிடும். என்னதான் அசதியாக இருந்தாலும், வீட்டில் வறுமை இருந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் இருக்க இந்தப் பெண்களால் எப்படித்தான் முடிகிறதோ!

இரண்டு நாட்களாய் அம்மாவின் கிழிந்த புடவை அவன் கண்களை உறுத்திக் கொண்டே இருந்தது. தன் நண்பன் சேகரிடம் கைமாற்றாக இருநூறு ரூபாய் புரட்டினான். அடுத்த சம்பளத்தில் தருவதாக வாக்குக் கொடுத்துத்தான் புரட்ட முடிந்தது. ஒரே உற்சாகம் மனதில். 'இன்னைக்கு எப்படியாவது அம்மா கிட்ட கொடுத்து சேலை வாங்கிக் கொள்ளச் சொல்லணும்' என்று மனதில் நினைத்தவாறு வீட்டை அடைந்தான். சாப்பிட்டுவிட்டு கிளம்பும்போது அம்மாவிடம் பணத்தைக் கொடுத்து சேலை வாங்கிக் கொள்ளச் சொல்லிவிட்டு வேலைக்குக் கிளம்பினான்.

மாலை ஆறு மணி இருக்கும்.

சேகரை பார்த்துவிட்டு அவன் கடைக்கு போய்விட்டு வர நேரமாகிவிட்டது. அம்மா இன்னைக்கு சேலை வாங்கியிருப்பாள் என்று நினைத்தவாறு வீட்டுக்குள் சென்றான்.

"அம்மா வாங்கிட்டியாம்மா?" கேட்டவாறு அடுக்களைக்குள் நுழைந்தான்.

"கண்ணு உட்காரு. டீ போட்டுக்கொண்டாரேன்!" என்றவாறு அம்மா டீ கலந்து கொண்டு வந்தாள்.

"ஏம்மா சேலை வாங்கிட்டியா? எங்க எடுத்துட்டு வா பார்க்கலாம்!" ரவி கேட்டான்.

"கோவிச்சுக்காதே கண்ணு.... சேலை வாங்கத்தான் கடைக்குப் போனேன். அப்பத்தான் ஞாபகம் வந்துச்சு, அப்பாக்கு ஒரு நல்ல சட்டைத் துணி இல்லைன்னு-அதான் எடுத்துட்டு வந்துட்டேன்!"

"அப்ப உனக்கு?"

"எனக்கெதுக்குடா. நான் வெளியிலா போறேன்? அப்பாதான் நாலு இடத்துக்குப் போறாரு வர்றாரு. நல்ல துணி மாத்திட்டு போகட்டும்னுதான்...."

அம்மா சொல்லச் சொல்ல ரவிக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

# இடியப்ப



**கே.ஜி.கமல்**

நகரத்தின் சாயலே படியாமல் எவ்வளவு அழகான கிராமம்... அதில் இப்படி ஒரு வீடு கிடைத்ததில் அவனுக்கு மகிழ்ச்சிதான். தனது சொந்த வீட்டில் நகரத்தில் ஆடம்பரமாக வாழ்ந்தவனுக்கு இந்த அடக்கமான வாழ்க்கை புதியதாக இருந்தாலும், தனது தாய்க்காக எதையும் சந்திக்க, சகிக்கத் தயாராய் இருந்தான் அவன்.

சுரேஷ், "உங்க அம்மாவை மருத்துவத்தில் முடிந்த அளவு குணப்படுத்திவிட்டோம். இனி அவர்கள் பரிபூரணமாக குணமடையணுமென்றால், இந்த ஆர்ப்பாட்டமான நகர வாழ்க்கையிலிருந்து கொஞ்ச காலமாவது விலகி ஏதேனும் அமைதியான கிராமத்தில் வசிப்பதுதான் நல்லது." டாக்டரின் சொல்லை வேதவாக்காய் எடுத்துக்கொண்டு இதோ இன்று காலையில்தான் இங்கு குடி வந்தான்.

சைக்கிளை மெதுவாக மிதித்துக்கொண்டு ஊரை பராக்கு பார்த்துக்கொண்டு சென்றவன், எதிரில் வந்த ஒரு கிராமத்து தேவதையைக் கண்டதும் திகைத்தான். அவனது வாலிப மனது துள்ளி விளையாடியது.

அவளின் அருகில் சென்று சைக்கிளை நிறுத்தி காலை ஊன்றியபடி, "நேரம் என்னங்க?" என்றான்.

நிமிர்ந்து பார்த்த அவள் சுமாரான அழகிலிருந்தாள். கிராமத்திற்கே உரிய அழகுகளுடன்... பெயர் சாந்தி.

சுரேஷின் கையில் வாட்சை கண்டவள், "ஏன் உங்க வாட்ச் ஓடலியா!" என்றாள்.

"அது ஓடலைன்னுதானே அதை கட்டிக்கொண்டு நான் ஓடிக்கொண்டிருக்கிறேன்!" என்றபடியே மணிக்கட்டை திருப்பி வாட்சை பார்த்தான். "அடடே! உங்களைக் கண்டதும் அதுவும் ஓடுதே... என் இதயத்தைப் போல!" என்றான்.

"நான்சென்ஸ்!" என்றாள் சாந்தி கோபமாக.

"என்னது நீ சென்ஸா? அப்ப நான்?"

"இடியட்..."

"ஓ.கே. தேங்க்ஸ்.. ஸீயூ!" என்றபடியே சைக்கிளை மிதித்து கடந்து போன சுரேஷை முதுகில் முறைத்துவிட்டு நடக்கத் தொடங்கினாள் சாந்தி.

கட்டிலில் படுத்திருந்த சுரேஷ் பக்கத்து வீட்டிலிருந்து கேட்ட அந்த கெட்டவார்த்தைகளையும், அடியின் அவஸ்தையில் அலறும் பெண்ணின் ஈனக்குரலையும் பொறுத்துப் பொறுத்து சகிக்க முடியாதவனாய், எழுந்து சட்டையைப் போட்டுக்கொண்டு வெளியே வந்தவன், அதே வேகத்தில் அடுத்த வீட்டுக்குள் நுழைந்து... "ஏன் இப்படி காட்டுமிராண்டித்தனமா கூச்சல் போடறீங்க... அக்கம் பக்கம் யாரும் குடியிருக்க வேண்டாமா?" என்றான்.

"யாருப்பா அது என் வீட்டுக்குள்ளேயே வந்து எனக்கே நியாயம் சொல்றது?" என்றான் அங்கிருந்தவன்.

அப்போது புதுக்குரலை கேட்டு ரூமை விட்டு வெளியே வந்த சாந்தி, சுரேஷைக் கண்டதும் திகைத்து நின்றாள். சாந்தியைக் கண்ட சுரேஷின் உதடுகள் அனிச்சையாய் 'நான்சென்ஸ்' என்று மௌனமாய் முனகியதையும் அவள் கவனிக்கத் தவறவில்லை.

"நான் பக்கத்து வீட்டுல குடி வந்திருக்கேன். பேரு சுரேஷ்... என் அம்மா மனநிலை சரியில்லாதவங்க... அதனால இப்படி கிராமத்துல அமைதியா இருந்தா சீக்கிரம் குணமாகிடுவாங்கன்னு டாக்டர் சொன்னார். ஆனால் இங்க வந்த முதல் நாளே இப்படீன்னா..."

"ஓ... டவுன் தம்பியா? அதான் இவ்வளவு தைரியம்..." என்ற அவன் உடனே இளகிய குரலில், "இத பாரு தம்பி! என்னைப்போல மனக் கஷ்டம் உனக்கும் இருந்தா நீயும் இப்படித்தான் நடப்பே!"

"நீங்க தப்பா நினைக்கலின்னா உங்க பிரச்சனை என்னன்னு நானும் தெரிஞ்சிக்கலாமா?"

"சரி...இங்க வா...!" என்று சுரேஷின் கையைப் பிடித்து இழுத்துப்போனவன் தொட்டிலில் தூங்கிய கைக்குழந்தையைக் காட்டி, "இந்தக் குழந்தையைப் பாரு!" என்றான்.

"குழந்தை அழகா, சிவப்பா மொழுமொழுன்னு இருக்கு. ஆண் குழந்தையா?"

மீண்டும் சுரேஷின் கையைப் பிடித்து இழுத்துப் போனவன், சுவரோரம் நின்று அழுது கொண்டிருந்த பெண்ணைக் காட்டினான். அவள் சாந்தியின் ஜாடையில் இருந்தாள். அவளது அக்காவாக இருக்கவேண்டும் என்று நினைத்தான் சுரேஷ். "இவளைப் பாரு எவ்வளவு கறுப்பா இருக்காள். என்னைப்பாரு நானும் கறுப்பு... இப்படிரெண்டு பேருமே கறுப்பா இருக்கும்போது குழந்தை எப்படி சிவப்பா பிறக்கும்? எவன் கூடவோ சேர்ந்திருந்துட்டு, அந்த பிள்ளைக்கு என்னை அப்பனாக்கப் பாக்குறா?"

"இல்லங்க... சத்தியமா என்னை நம்புங்க... நான் எந்தத் தப்பும் செய்யலை! குழந்தை சிவப்பா இருக்குறது அது இறைவனோட வரம். அதுக்கு நான் என்ன செய்ய முடியும்? இதை மனசுல வச்சிக்கிட்டுதான் என்னை ஒரு தடவைக்குமேல வந்து பார்க்கவே வரலை. அழைக்கவும் வரலை... நானாக இங்கவந்தா, வந்த உடனேயே இப்படி ரகளை பண்றாரு. நீங்களாவது எடுத்து சொல்லி எனக்கு ஒரு வழி காட்டுங்க...!" கண்ணீருடன் முறையிட்டாள் அவள்.

திரும்பி சாந்தியைப் பார்த்தான் சுரேஷ். அவள் மௌனமாக தன் அக்காவையே பார்த்துக்கொண்டு நின்றாள். விழிகள் கலங்கி இருந்தன.

"நான் ஒண்ணு சொல்லட்டுமா...?" என்ற சுரேஷ், "ஆனா..இப்ப..." என்று இழுத்தான்.

"என்ன நான் குடிச்சிருக்கேன்னு பார்க்கறீயா தம்பி... சும்மா சொல்லு.. இப்பத்தான் நான் ஸ்டெடியாவே இருக்கேன்!"

"இத பாருங்க. குழந்தை சிவப்பாவோ, கருப்பாவோ பிறக்கிறது. அழகா அசிங்கமா, முடமா, ஊனமில்லாத பிறக்கிறது எல்லாம் ஜீன்களோட வேலை. அதில் உள்ள குரோமோசோம்களோட வீரியத்தைப் பொறுத்தும் இதெல்லாம் மாறும். அதுக்கு நம்ம..."

பேசிக்கொண்டே போன சுரேஷ் அவரின் கேள்விக்குறியான நெற்றி சுருக்கங்களைக் கண்டு நிறுத்தினான்.

"விஞ்ஞான ரீதியா உங்களுக்கு புரியலை. நடப்பு முறையிலேயே சொல்றேன். நீங்க வெற்றிலை பாக்குப் போடுவீங்களா?"

"உம்..."

"அதில் வெற்றிலை பச்சை நிறம். சுண்ணாம்பு வெள்ளை, பாக்கு பழுப்பு நிறம். இதெல்லாம் போட்டுமெல்லும்போது அதில் உள்ள ஏதேனும் ஒரு நிறத்தில்தான் வாய் மாறணும். ஏன் சிகப்பா மாறுது? அப்ப மெல்லுபவர்கள் தப்பு பண்ணிட்டாங்களா...? அதுதான் இயற்கையோட, இறைவனோட மாயம்.

செயல் மட்டும்தான் நம்முடையது. விளைவுகள் இறைவனின் சித்தம். அவன் போடும் பிச்சை... நம் ஒவ்வொரு இயக்கமும், அவனால்தான். அதுபோலத்தான் கர்ப்பமும். அவன் தீர்மானிக்கும் நிறத்தில்-அளவில் சம அழகில்தான் குழந்தை உண்டாகும். அதை யாராலும் மாற்றவோ, மறுக்கவோ முடியாது. புரியுதா? அவங்க முகத்தைப் பாருங்க. தப்பு பண்றவங்க மாதிரியா தெரியுது? கணவன்-மனைவி ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்கிட்டு விட்டுக் கொடுத்து அமைதியா வாழ கத்துக்கங்க. உங்க சந்தேகத்தால் அந்த பிஞ்சின் எதிர்காலத்தை வீணாக்கிடாதீங்க. நான் எதுவும் தப்பா பேசியிருந்தா என்னை மன்னிச்சிருங்க!" என்று நிறுத்தினான்.

"இல்ல தம்பி, நீதான் என்னை மன்னிக்கணும்... நான் படிப்பறிவு இல்லாதவன். அதான் விபரம் புரியாம என் மனைவி மேல சந்தேகப்பட்டு விட்டேன். இனி அவளை அடிக்கமாட்டேன். ரொம்ப நன்றி தம்பி!"

"சரி... இனிமேலாவது அமைதியா இருங்க!" என்றவன், சாந்தியின் சகோதரியின் பக்கம் திரும்பி 'வரேன்' என்று ஜாடையில் சொல்லி விட்டு புறப்பட்டான். சாந்தியின் சகோதரியின் கண்களில் இருந்து நன்றியாக கண்ணீர் வழிந்தது.

சுரேஷின் பேச்சில் மயங்கி நின்ற சாந்தி, 'எவ்வளவு பெரிய பிரச்சனையை எவ்வளவு சுலபமாத் தீர்த்துவிட்டான். எனக்குக்கூட இப்படி தோணலையே!' என்று மனதிற்குள் வியந்தபடி ஓடிச்சென்று ரூமிற்குள் நுழைந்தவள் ஜன்னலை திறந்து சுரேஷ் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'டேய் இடியட்! நீ புத்தியுள்ள இடியட்ரா... உன்னை எனக்கு புடிச்சிருக்குடா...' மனம் பூரிப்பில் முனகியது.

என்ன பெயர் சொன்னான்.."ம்.. சுரேஷ்" சொல்லிப்பார்த்துக் கொண்டாள். அவள் உதடுகள் இனித்தன.



www.padippakam.com

www.padippakam.com

# சர்வதேசப் பயங்கரவாதம்

## அலசுவது- இராஜதந்திரி

தன்மீது பாலியல் குற்றச்சாட்டு எழுந்தபோது ஈராக்மீது போர்ப்பிரகடனம் செய்த கிளின்ரன், இப்போது தன் தகாத உறவு வெளிப்பட்டுள்ள தருணத்தில் ஆப்கானிஸ்தான்மீதும், சூடான்மீதும் ஏவுகணைவிட்டு விளையாடியுள்ளார்.

எனினும் அமெரிக்காவின் ஆதிக்க நலனுக்கு கிளின்ரனின் திசை திருப்பும் நாடகம் தோதாக இருந்தமையால்தான் தாக்குதலுக்கு அமெரிக்காவில் ஆதரவு கிடைத்திருந்தது.

கென்யா, தான்சானியா ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்காவின் தூதரகங்கள் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகியதற்காக, அப்பாவி மக்கள்மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்துவதும் அப்பட்டமான பயங்கரவாதமேயாகும்.

குவைத்மீது ஈராக் ஆக்கிமித்தமையாலேயே அதன்மீது போர் தொடுத்ததாக அமெரிக்கா உட்பட அதன் நேசநாடுகள் முன்னர் பீற்றிக்கொண்டன.

தமது வல்லாதிக்கத்துக்கு ஈராக் சவாலாக மாறிவிடுமோ என்று கருதி தாம் நடத்திய வளைகுடா யுத்தத்தை குவைத் நாட்டின் சுதந்திரம்மீது கொண்ட கரிசனையாக சித்தரித்திருந்தன.

அதே அமெரிக்கா இன்று ஆப்கானிஸ்தான், சூடான் ஆகிய நாடுகள்மீது ஏவுகணைகளை செலுத்தியுள்ளது. இதுவும் ஒருவிதமான ஆக்கிரமிப்பு மனோபாவமேயாகும்.

இதனை பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய யுத்தம் என்று அமெரிக்காவும் அதன் நலனை நாடி பலனைப் பெறும் வெகுஜன தொடர்பு சாதனங்களும் விபரித்துவருகின்றன.

சர்வதேசப் பயங்கரவாதியான அமெரிக்கா அகில உலகையும் மிரட்ட பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

இன்று ஏவுகணை விடுத்துள்ள அமெரிக்கா, நாளை அணுக்குண்டையும் நியூத்திரன் குண்டையும் தன் நலனுக்காக பயன்படுத்தமாட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

எனவே அமெரிக்கா போன்ற வல்லாறுகளிடம் கடைசி அணு ஆயுதம் இருக்கும்வரை அதற்கு எதிரான சக்திகளிடமும் அணு ஆயுதம் இருக்கவேண்டியதும் அவசியமேயாகும்.

அமெரிக்காவின் சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்த்து உலகெங்கும் கண்டனங்கள் கிளர்ந்தெழுந்துள்ளன.

இலங்கையில் உரிமை கேட்டு போராடும் தமிழ் பேசும் மக்களின் தரப்பில் இருந்து எக்குரலும் எழவில்லை.

தென்னிலங்கையில் மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதை தமக்கு சம்பந்தமில்லாத விவகாரம் என்று கூறி தம்மையும் ஏமாற்றி, தமிழ் மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன தமிழ் கட்சிகள்.

இத்தகைய கட்சிகள் சர்வதேச விவகாரங்களை கூர்ந்து கவனிக்கும் என்றோ, அவை எமது போராட்டத்தில் செலுத்தப்போகும் தாக்கம் தொடர்பாக புரிந்துகொள்ளக்கூடியவை என்றோ எதிர்பார்ப்பதும் அறிவீனமேயாகும்.

ஆனால், ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது, அமெரிக்காவை கண்டித்தால் இந்தியா போன்ற ஏதாவது ஒருநாடு தமக்கு சலுகை காண்பிக்கும் என்று தெரிந்தால் தமிழ் கட்சிகள் அமெரிக்க எதிர்ப்பில் போட்டி போட்டுக்கொண்டு முன்னணியில் நிற்கக் கூடியவை.

தமது சொந்த நலனின் அடிப்படையிலேயே சகல விஷயங்களையும் நோக்குகின்ற தலைமைகளை கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளிடம் பரந்த சிந்தனைகளை எதிர்பார்ப்பது முடியாத காரியமேயாகும்.

இதேசமயம் விடுதலைப் புலிகளின் வெளியீடுகளில் அமெரிக்கா எதிர்ப்பு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது.

கென்யாவிலும், தான்சானியாவிலும் அமெரிக்காவின் தூதரகங்கள் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானதும், அதன்பின்னர் அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலும் சர்வதேச அரங்கில் நடந்த சம்பவங்களாக மட்டும் கருதப்படக்கூடியவையல்ல.

அமெரிக்கா நடத்தியுள்ள 'பயங்கரவாத பதிலடி' நடவடிக்கை போன்றதே, வடக்கு-கிழக்கில் நடைபெற்றுவரும் ஷெல்லடிகளும், குண்டுவீச்சுகளுமாகும்.

கொழும்பில் புலிகளின் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற பின்னர் வடக்கு-கிழக்கில் விமானத் தாக்குதல்கள் நடைபெறுவதும், புலிகளின் இலக்குகள் நிர்மூலமாக்கப்பட்டதாக கூறப்படுவதும், இங்கும் நடைபெற்றுவரும் நிகழ்வுகளேயாகும்.


குண்டுவெடித்த அமெரிக்க தூதரகம்

தமக்கு எதிரான நடவடிக்கைளை பயங்கரவாதம் என்று சித்தரித்தபடி, மிக மோசமான அரச பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டவிழ்த்துவிடுவது ஒடுக்குமுறை அரசுகளது வழக்கமாக இருந்து வருகிறது.

தற்போது அமெரிக்கா மேற்கொண்டுள்ள பதிலடிப் பயங்கரவாதமானது, ஏனைய ஒடுக்குமுறை அரசுகளுக்கும் முன்னுதாரணமாகவும், ஊக்கம் தருவதாகவும் அமைந்துள்ளது.

பதிலடிதான் முக்கியம். அது யார் மீது, யார் தலையில் விழுந்தாலும் பரவாயில்லை என்று கருதிக்கொண்டு, தத்தம் நாடுகளில் போராடும் மக்களை ஒடுக்க அந்தந்த நாட்டு அரசுகள் துணியப்போகின்றன.

ஒருகாலத்தில் உலகெங்கும் சதி நாச வேலைகளை திட்டமிட்டு நிறைவேற்றிய பயங்கரவாத நாடு அமெரிக்கா.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, சிலிநாட்டு அதிபர் அலண்டே போன்ற மிகச் சிறந்த உலகத் தலைவர்களை ஒழித்துக் கட்டியவர்களுக்கு உதவியதோடு, பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் நடத்திய குண்டுத் தாக்குதல்களையும் அமெரிக்காவே ஆதரித்து வந்தது.

அமெரிக்காவின் ஏற்றுமதிப் பொருட்களின் பட்டியலில் எப்போதுமே பயங்கரவாதமும் இடம்பெற்றே வந்துள்ளது. தன்னால் ஏற்றுமதி செய்யப்பட்ட பயங்கரவாதம தனது காலடியிலேயே வெடிக்கத் தொடங்கிய பின்னர்தான் அமெரிக்கா குண்டு வெடிப்புக்களை கண்டிக்க ஆரம்பித்தது.

சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற அமெரிக்காவின் பாசாங்கு, தன்வினை தன்னைச் சுட்டதால் ஏற்பட்ட கதிகலக்கமேயன்றி வேறல்ல.

சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் விடுதலைக்காக போராடும் நாடுகளையும், இயக்கங்களையும் நசுக்குவதும் அமெரிக்காவின் கொள்கையாக விளங்குகிறது.

போர்க்குணமிக்க இயக்கங்கள் வளர்வதை அனுமதிப்பது நாளை தனக்கும் ஆபத்தாகலாம் என்றரீதியில் அமெரிக்கா சிந்திக்கத் தொடங்கியுள்ளது.

அந்தச் சிந்தனையை நியூயோர்க் வர்த்தக மையக் குண்டு வெடிப்பு உருவாக்கியிருந்தது. சமீபத்திய கென்யா மற்றும் தான்சானியா குண்டுத் தாக்குதல்கள் அச் சிந்தனையை மேலும் தூண்டிவிட்டிருக்கிறது.

## பதிலடிகள் ஒரே ரகம்

அதுமட்டுமன்றி-உலக அரங்கில் தனக்கு சவாலான சக்திகள் தோற்றம் பெற்றுவருகின்றன என்பதும் அமெரிக்காவுக்கு தலையிடியாகியுள்ளது.

இவை தொடருமானால் உலகெங்கும் பரந்து விரியும் தன் ஆதிக்கத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும், முழு உலகையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நீண்டகால திட்டத்துக்கு ஆபத்து என்றும் அமெரிக்க அரசு கருதுகிறது.

எனவே, உலகெங்கும் தளம் தேடி, ஆங்காங்கே குந்தியிருந்து உலகை தன்பிடியில் கொண்டுவரும் முயற்சிகளை அமெரிக்கா மேலும் முடுக்கிவிடும்.

இவ்வாறான பின்னணியில் இலங்கையின் இனப்பிரச்சனை விவகாரத்திலும், அதன் பிரதிபலிப்பான யுத்தத்திலும் இலங்கை அரசையே அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரிக்கும்.

அதுமட்டுமன்றி இலங்கை அரசின் பக்கம் நின்று புலிகளின் குண்டுத்தாக்குதல் போன்றவற்றை கண்டிக்கவும் அமெரிக்கா முனைப்பு காட்டக்கூடும்.

'இன்று உனக்கு, நாளை எனக்கு' என்றரீதியில் அடக்குமுறை அரசுகள் தமக்குள் ஒத்த கண்ணோட்டங்களை உருவாக்கிக் கொள்ளுவது புதிதல்ல.

அமெரிக்கா தற்காலத்தில் குண்டுத் தாக்குதல்களை கண்டிப்பதும் அவ்வாறான கண்ணோட்டத்திலேயாகும்.

சூடானில் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமெரிக்கா தாக்கியழித்துள்ளது. அதனை ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை என்று அப்பட்டமான பொய்யைக் கூறியுமுள்ளது.

அதேசமயம் பாகிஸ்தான் கிராமம் ஒன்றில் குறிதவறி விழுந்த அமெரிக்க ஏவுகணை அமெரிக்காவின் பொறுப்பற்ற பயங்கரவாதச் செயலை உலகமறியச் செய்துள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஈடான சம்பவங்கள் இங்கும் நடந்துள்ளன.

இலங்கை அரசின் சட்டபூர்வ அனுமதியுடன் சென்ற சரக்குக் கப்பலைக்கூட புலிக்கப்பல் என்று இலங்கை அரசின் ஜனாதிபதி செயலகமே குற்றம் சாட்டி இருந்தது. அப்பாவி மாலுமிகளையும் புலிகளுக்கு உதவியோர் என்று கூறிவிட்டு குண்டுபோட்டு அழிக்கக்கூட அரசு தயாராக இருந்தது. அதிஷ்டவசமாக அவர்கள் காப்பாற்றப்பட்டுவிட்டனர்.

இதனையே புலிகள் செய்திருந்தால், அதனை சர்வதேச பயங்கரவாதச் செயலில் ஒரு அங்கமாக சித்தரிக்க இலங்கை அரசு முயன்றிருக்கும்.

முன்னர் வடக்கு கடலில் மிஷன் கப்பலையும், மொரங் பொங் கப்பலையும் புலிகள் தடுத்துக் கைப்பற்றியபோது, அதனை அமெரிக்கா கண்டித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.,

சரக்குக் கப்பல்களை தாக்குவதோ, கடத்துவதோ சர்வதேச குற்றம் என்ற தொனியில் அமெரிக்கா உபதேசித்திருந்தது.

ஆனால், இலங்கை அரசு தனது அனுமதியுடன், தனது நாட்டுக் கொடியுடன் சென்ற சரக்குக் கப்பலையே குண்டுவீசி அழித்திருக்கிறது. அவ்வாறு இருந்தும் அமெரிக்கா எக்கருத்தையும் தெரிவிக்கவில்லை.

சரக்குக் கப்பலில் இந்திய மாலுமிகள் இருந்தமையாலும், அவர்கள் உயிர் தப்பியதாலும், பிரின்ஸஸ் கேஷ் கப்பல் புலிக்கப்பல் என்ற முத்திரையில் இருந்து தப்பியது. அந்த மாலுமிகள் இந்நாட்டு தமிழர்களாக இருந்திருந்தால் மாண்டிருந்தாலும், மீண்டிருந்தாலும் புலி முத்திரை குத்தப்பட்டிருப்பர்.

வடக்கு-கிழக்கில் புலிகளின் நிலைகள் என்று கூறப்பட்டு, மருத்துவமனைகள், கோவில்கள், குடிமனைகள் என்பவை குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளன.

ஆனால் இத்தகைய நடவடிக்கைகளை பயங்கரவாதத்திற்கு எதிரான பதிலடி என்று நியாயப்படுத்த அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதல் முன்னுதாரணமாக விளங்கப்போகிறது.

இந்திய அரசு அமெரிக்காவின் தாக்குதலை கண்டிக்கவில்லை. தனது நாட்டு நலனின் அடிப்படையிலேயே இந்தியா அத்தகைய நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது.

இந்தியாவுக்குள்ளும் மும்பாய், கோவை போன்ற பெருநகரங்களில் குண்டுகள் வெடித்திருக்கின்றன. பாகிஸ்தானின் உதவியுடனேயே அக் குண்டு வெடிப்புக்கள் நடந்தன என்று இந்தியா சந்தேகிக்கிறது.

மும்பாய் குண்டு வெடிப்பின் சூத்திரதாரியாக கருதப்படும் தாவூத் இப்ராகீம் பாகிஸ்தானின் அரவணைப்பிலேயே தங்கியிருப்பதாக இந்திய புலனாய்வுத் துறை கூறிவருகிறது.

எதிர்காலத்தில் இந்தியாவில் குண்டுகள் வெடித்தால் பாகிஸ்தான்மீது தாம் பதிலடி நடத்துவதை நியாயப்படுத்தக்கூடிய வாய்ப்பாகவே இந்திய அரசு அமெரிக்காவின் தாக்குதலை நோக்கியுள்ளது.

இந்தியாவுக்கு இது ஒரு வாய்ப்பாகப் போய்விடும் என்பதை உணர்ந்துதான் பாகிஸ்தான் புத்திசாலித்தனமாக யோசித்து அமெரிக்கத் தாக்குதலை கண்டித்துள்ளது.

சூடானும், ஆப்கானிஸ்தானும் தனக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கு புகலிடம் கொடுக்கின்றன. தூதரக குண்டு வெடிப்புக்களில் சம்பந்தப்பட்டவர்கள் சிலர் அந்த நாடுகளில் ஒளிந்திருக்கின்றனர் என்றெல்லாம் அமெரிக்கா குற்றம்சாட்டி வருகிறது. அதன் அடிப்படையிலேயே அந்த நாடுகள்மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

அதே விதமான குற்றச்சாட்டுக்களைத்தான் பாகிஸ்தான்மீது இந்தியா முன்பிருந்தே கூறிவருகிறது. அப்போதெல்லாம் பாகிஸ்தானுக்கு ஆதரவாகவே அமெரிக்காவின் அணுகுமுறைகள் அமைந்திருந்தன என்பதும் குறிப்பிடத்தகுந்தது.

எனவே, ஒவ்வொரு நாடும் தமது நலனை முதன்மைப்படுத்தி அதன் அடிப்படையிலேயே கண்ணோட்டம் செலுத்துகின்றன.

அது தவறான போக்கல்ல. அதே சமயம் தமது நலனுக்காக ஏனைய நாடுகளதும், மக்களதும் நலன்களை துச்சமாகக் கருதி நாசப்படுத்த நினைப்பதுதான் தவறானதாகும். அமெரிக்கா அதனைத்தான் செய்து வருகிறது.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை, தமது நலனின் அடிப்படையில் நோக்கினாலும் கூட அமெரிக்காவின் சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்க்க வேண்டியவர்களாகிறார்கள்.

தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை கூறுபோடும் அரைகுறைத் தீர்வுப் பொதியை திணிக்கும் யுத்தத்தை ஆதரிக்கும் நாடு என்ற ரீதியிலும், அமெரிக்காவின் சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகள் இலங்கை அரசுக்கும் தனது பதிலடி நடவடிக்கைகளை நியாயப்படுத்த உற்சாகமளிக்கக்கூடியவை என்பதாலும் ஆப்கானிஸ்தான், சூடான் மீதான தாக்குதலை கண்டிக்கும் சக்திகளுடன் தமிழ்பேசும் தரப்பும் கைகோர்க்க வேண்டும். அதுமட்டுமன்றி அமெரிக்காவின் தாக்குதல் பொது நீதிக்கும் புறம்பானதேயாகும்.

தமது உரிமைகளுக்காக போராடும் மக்களுக்கும், அவர்களது சக்திகளுக்கும் தெளிவான உள்நாட்டு கொள்கை, வெளிநாட்டுக் கொள்கை இரண்டும் முக்கியமானதாகும்.

ராஜீவ் கொலையால் இந்திய அனுதாபம் போய்விட்டதே என்று ஒப்பாரி வைக்கும் தமிழ்க்கட்சிகள் தமது பங்குக்கு உலக அனுதாபத்தைத் திரட்ட என்ன செய்தன? செய்கின்றன? அவ்வாறு செய்து கொண்டு கண்டித்தால் நியாயமாக இருக்கும். ■

## சந்திக்கு வராத சங்கதிகள்

### நக்கீரன்

## புளொட்டுக்கு தடை!

வவுனியாவில் புளொட்டுக்கு கிடைத்துள்ள அனுபவம் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு நல்லதோர் பாடம்.

வவுனியாவைவிட்டு தமது அனுமதி இல்லாமல் வெளியேறக்கூடாது என்று புளொட் இயக்க உறுப்பினர்களுக்கு பொலிசார் உத்தரவிட்டனர். அந்த உத்தரவை பத்திரிகைகளுக்கும் கூறி புளொட்டை அவமதித்து மகிழ்ந்துள்ளனர். வவுனியாவில் இருந்து கொழும்பு வந்து செல்வதற்கான அவர்களது 'பாஸ்' இரத்துச்செய்யப்பட்டது.

வவுனியாவில் படையினரால் கொண்டு வரப்பட்ட எரிபொருள் பங்கீட்டு முறையை எதிர்த்து புளொட் ஹர்த்தால் அனுஷ்டித்தது.

ஒருபுறம் அரசுக்கு ஆதரவு அளித்தபடி, அமைச்சர்களுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணைகளை எதிர்த்து வாக்களித்தபடி இருக்கும் புளொட்டுக்கு, அரசை எதிர்த்தே ஹர்த்தால் நடத்த வேண்டிய கட்டாயம்.

மட்டக்களப்பு, திருமலை போன்ற பகுதிகளில் இன்னும் படையினருடன் இணைந்து நிற்கும் புளொட் வவுனியாவில் படையினருடன் மல்லுக்கட்டியது.

தமது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பலியானதற்காக, வவுனியாவில் இருந்து யாழ் மக்களை வெளியேறுமாறு மிரட்டிய புளொட்டுக்கும், தமது முகாம் பாதுகாப்புக்காக திருமலை லிங்கநகரில் தமிழரை வெளியேற்ற படையினர் முயல்வதற்கும் இடையே என்ன வித்தியாசம்? என்ற கேள்விகளை புளொட்டின் ஹர்த்தால் செய்திகள் இல்லாமல் ஆக்கிவிடவில்லை.

ஆனால், என்ன நோக்கம் கருதி செய்யப்பட்டிருந்தாலும், படையினருடன் மல்லுக்கு நின்று தொடர் ஹர்த்தால் அனுஷ்டிக்க புளொட் துணிந்ததை வரவேற்கவே வேண்டும்.

இவ்வாறான போராட்டங்களைக்கூட ஏனைய தமிழ்க் கட்சிகளால் நடத்த முடியவில்லை என்கிறபோது, அக் கட்சிகளுக்கு அதனை விமர்சனம் பண்ண தார்மீக உரிமை கிடையாது.

ஹர்த்தால் நடத்தி என்ன பயன்? என்று கேட்கலாம். புளொட் உட்பட சகல தமிழ்க் கட்சிகளும் அரசின் முன் முதுகு வளைந்து, கைகட்டி, வாய்பொத்தி நின்று மனுக்கள் போட்டும் கூட எதுதான் கிடைத்தது? அதைவிட போராடி தோற்றால்கூட கௌரவம்தான்!

புளொட் இயக்கம் ஹர்த்தால் நடத்தியதை அடுத்துத்தான் அவர்களுக்கு வவுனியாவை விட்டு வெளியேற தடை உத்தரவு போடப்பட்டது.

சில வாரங்களுக்கு முன்னர் யாழ் மக்களை வவுனியாவைவிட்டு வெளியேறச் சொன்ன புளொட்டுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும் என்கின்றனர் சிலர்.

சில தமிழ்க் கட்சிகளுக்கும் உள்ளூர சந்தோசம் என்று கேள்வி.

ஆனால் இது சந்தோசப்படக்கூடிய விஷயமல்ல. புளொட் வவுனியாவில் கொலை செய்கிறது. நிதி வாங்குகிறது என்ற புகார்களையெல்லாம் பொலிசாரோ படையினரோ காதில் போட்டுக்கொள்ளவில்லை.

"எமது எதிரிகளை நாம்தான் விசாரிக்கிறோம்" என்று மாணிக்கதாசன் பி.பி.சிக்கு நேரடியாக பேட்டி கொடுத்தபோதும் பொலிசார் அசையவில்லை.

சண்முகநாதன் கொலைக்குப் பின்னர் யாழ் மக்களை வெளியேறுமாறு புளொட் மிரட்டியபோதுகூட பொலிசாரும், படையினரும் வேடிக்கை பார்த்தனர்.

அப்போதெல்லாம் இல்லாத சட்டம், ஒழுங்கு அக்கறை இப்போது வரக்காரணம் என்ன?

அங்குதான் இருக்கிறது விஷயமே. அது என்ன தெரியுமா?

அரசு, படைகள், பொலிசார் என்று சகல தரப்பும் தமிழ்க் கட்சிகள் தொடர்பாக இன்று அனுஷ்டிக்கும் பொதுக் கொள்கைதான் அது?

அது என்ன பொதுக் கொள்கை?

"நீங்கள் எங்களுக்கு உபகாரம் செய்தபடி இருக்கும்வரை, எங்கள் நலன்களுக்கு இசைவாக நடக்கும்வரை, எந்த அட்டூழியத்தையும் நீங்கள் செய்யலாம். எங்கள் நலனுக்கு மாறாக செயற்படுவீர்களானால் உங்களை உதைக்கவும் தயங்கோம்!"

புளொட் உறுப்பினர்களுக்கு நடமாடத் தடை விதிக்கப்பட்டதும் அக் கொள்கைப்படிதான். ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் மறைமுகமாக விடுக்கப்பட்ட எச்சரிக்கைதான் அது.

இந்திய அமைதிப்படை யாழில் நின்றபோது அதன் அதிகாரி ஒருவர் கூறினாராம்: "புலிகளை வென்றதும் இந்த ஆயுதம் தாங்கிய துஷ்டர்களிடம் ஆயுதங்களை பறித்து அடக்கிவிடுவேன்!"

இன்றுள்ள அரச படை அதிகாரிகளதும் கருத்தும் கிட்டத்தட்ட அதேமாதிரித்தான். ஏன், அரசின் கருத்தும்கூட அதுதான். புலிகள் இருப்பதால்தான் இக் கட்சிகள் உயிர்வாழ அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் புளொட் உறுப்பினர்களுக்கு தடை விதிக்கப்பட்ட விடயத்தை 'இன்று புளொட்டுக்கு நாளை எமக்கு' என்ற ரீதியிலாவது கண்டித்திருக்கலாம்.

எங்கே புளொட் பெயர் எடுக்கப்போகிறதோ? புளொட் போராடி வென்றால் தாமும் போராட்டங்கள் நடத்த வேண்டி வருமே என்று நினைத்த கட்சிகளுக்கு இது சந்தோசம்தான். மூச்சுக்காட்டவில்லை.

இந்த அற்ப சந்தோசங்கள் நீடிக்காது. கால்களைப் பிடித்திருக்கும்வரை கருணைகாட்டப்படும். காலைக் கொஞ்சம் கிள்ளிப்பார்க்க நினைத்தால்கூட உதைதான் கிடைக்கும்! அதுதான் புளொட்டுக்கு கிடைத்துள்ள பாடம்!



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

## அதிர் இடி 24

# இடி அமீன்

அமீனின் ஆட்சியில் ஊழலும், துஷ்பிரயோகங்களும் மலிந்து விட்டன என்று புகார்கள் கிளம்பின.

உகண்டாவிலேயே காதும் காதும் வைத்ததுமாதிரி பரவிய ஊழல் குற்றச் சாட்டு உகண்டாவிற்கு வெளியே பத்திரிகைச் செய்திகளாக வெளியாகின.

வெளிநாட்டு வானொலிகள் ஊடாக உகண்டா மக்களின் காதுகளுக்கும் எட்டின.

ஒபேடே ஜனாதிபதியாக இருந்த போது வரவு செலவுத் திட்டத்தில் எட்டுக்கோடி டொலர் துண்டுவிழுந்தது.

அமீனின் ஆட்சியில் துண்டுவிழும் தொகை மேலும் பல கோடிகள் உயர்ந்தது.

அமீனுக்கு போதிய படிப்பறிவு கிடையாது. எழுத்தறிவு, வாசிப்பறிவுகூட சொற்பம்தான்.

நிதித்துறையின் உயர் அதிகாரிகள் அழைக்கப்பட்டனர். கடும் சுகவீனம் காரணமாக விடுப்பில் நின்ற அதிகாரி கள்கூட அமீன் அழைப்பதை அறிந்து கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

கூட்டத்தில் இடி அமீன் வீசிய முதல் கேள்வியே அதிகாரிகளை தூக்கிவாரிப் போட்டுவிட்டது. வேறு சந்தர்ப்பமாக இருந்தால் அந்த மண்டபமே அதிரும்படி சிரித்திருப்பர்.

இப்போது சிரித்தால் உயிர் போய் விடுமே, அதனால் சிரிப்பை அடக்க படாதபாடு பட்டார்கள்.

**"நம்மால் பணத்தை அச்சிடமுடியும். அப்படியிருக்கும் போது நிதிப்பற்றாக்குறை ஏன் ஏற்படுகிறது? தேவையான பணத்தை அச்சிட்டு முடிக்க ஏன் தாமதிக்கிறீர்கள்?"** என்றுதான் கேட்டிருந்தான் அமீன்.

சிரிப்பை அடக்கிக்கொண்டு மண்டபமே மௌனத்தில் இருக்க, அமீனுக்கு தன் கேள்வி ஏடாகூடமாக இருந்து விட்டதோ? என்று உள்ளூர சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

சூழ்நிலையின் இறுக்கத்தை உடைக்க தன் வழக்கமான இடிச் சிரிப்பை உதிர்த்தான்.

அமீன் தமாஷ் பண்ணுகிறானா, அல்லது உண்மையாகவே கேட்டானா? என்று இப்போது அதிகாரிகளுக்கு சந்தேகம் வந்திருந்தது.

அதிகாரிகள் தன்னை ஒரு முட்டாளாக நினைக்கக்கூடாது என்பதற்காக அமீன் தன் விவேகத்தைக் காட்டினான்.

**"என்ன, இப்படிக்கேட்டுவிட்டேன் என்று நினைக்கிறீர்களா? இதே மாதிரித்தான் மக்கள் எம்மைக் கேட்பார்கள். அவர்களுக்கு புரியக்கூடியவிதமாக யாராவது விளக்குங்கள் பார்க்கலாம்!"** என்றான்.

தான் அறிய வேண்டிய கேள்விக்கான பதிலை மக்கள் பெயரில் கேட்கும் தன் விவேகத்தை தானே வியந்து கொண்டான்.

'அப்படிச் செய்யமுடியாது. பணவீக்கம் ஏற்படும். பணத்தின் மதிப்பு குறையும். வெறும் துண்டுக் காகிதத்துக்கு இருக்கும் மரியாதைகூட இருக்காது' என்றும், பல உதாரணங்களுடனும் அதிகாரிகள் விளக்கிக் காட்டினர்.

முழுவதும் புரியாவிட்டாலும் பணத்தை அரசு விரும்பியவாறு அச்சிட முடியாது என்பது அமீனுக்கு புரிந்தது.

**"பார்த்தீர்களா? இந்த எளிதான விஷயங்கள்கூட நம் மக்களுக்கு புரியாமல் இருக்கிறது. எல்லாம் முன்னர் இருந்த ஆட்சிகள் செய்த பிழைகள்தான். காரணம்!"** என்று அமீன் சொன்னதற்கு சாவி கொடுத்த பொம்மைபோல அனைவரது தலைகளும் ஆடின.

"துண்டுவிழும் தொகையை குறைப்பதற்கு அரசாங்கம் சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும்" என்று கூறிய ஓர் அதிகாரி, அமீனின் முகம் மாறுவதைக் கண்டு பயந்து, "தங்களைப் போல ஏனையோரும் எளிமையாக இருக்குமாறு தாங்கள்தான் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்றபோதுதான் அமீனின் முகம் மலர்ந்தது.

பணத்தை அச்சிட்டு பிரச்சனையை தீர்க்கலாம் என்று பார்த்தால் அது சரியாக வரவில்லை.

இப்படியே போனால் மக்களின் மத்தியில் எதிர்ப்புக்கான சூழ்நிலை அமோகமாக உருவாகிவிடும்.

'என்ன செய்யலாம்?' அமீனின் மூளையில் நரித்தந்திரம் ஒன்று மின்னலடித்தது.

ஊழல் குற்றச்சாட்டில் நான்கு அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களை ஒபேடேயின் ஆட்கள் என்றும் அறிவித்தான் இடி அமீன்.

அவர்களில் மூன்று பேர் தமது சக ஊழியர்களிடம் இடி அமீன் ஆட்சியைப் பற்றி தரக் குறைவாகப் பேசியதாக மலையமுங்குவுக்கு தகவல் கிடைத்தது.

அப்படியே அமுக்கி கொண்டு வந்து சேர்த்துவிட்டு, ஊழல் பழி போட்டுவிட்டான். பழிபோடச் சொல்லிக் கொடுத்தது இடி அமீன்.

தவறு அதிகாரிகள் மீதுதான் தன் மீதல்ல. ஊழல் செய்யும் அதிகாரிகள்தான் அரச பணத்தை நாசமாக்கிவிட்டனர் என்று மக்களை நம்பவைக்க அந்த அதிகாரிகள்மீதே பழிபோடச் சொல்லிவிட்டான்.

மலையமுங்கு கைது செய்த நாலாவது அதிகாரிக்கு ஒரு அழகான மனைவி இருந்தாள். அவள்மீது மலையமுங்குவுக்கு அதீதமான ஆசை இருந்தது.

"என் கணவரை விடுதலை செய்யுங்கள்.



அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லையே" என்று அழுதபடி மலையமுங்குவை சந்தித்தாள் மனைவி.

மலையமுங்குவின் கண்கள் அவள் கண்ணீரை அலட்சியம் செய்துவிட்டு, அவளது இளமையான உடலை ஆசையோடு நோக்கின. அவளுடைய உயர்ந்து தாழும் பிரதேசங்களில் அவனுடைய கண்கள் பருந்துகள்போல அலைந்தன.

ஒரு பலியாட்டை கொலைப் பசியோடு பார்க்கும் நரிபோல மலையமுங்கு அவளை நோக்கினான்.

"மூன்று பேரை டாங்கிகளால் ஏற்றியே கொல்லப்போகிறேன்!" என்றான். அவள் தன் காதுகளைப் பொத்தியபடி "வேண்டாம், அ...அவரை விட்டு விடுங்கள்" என்றாள்.

"மூன்றுபேரை என்றுதானே சொன்னேன், நான்கு பேரை என்றா சொன்னேன். நீ மனது வைத்தால் உன் கணவருக்கு உடனே விடுதலை" என்றான் வெறியோடு. அவளைத் தன் கண்களால் துகிலுரித்தபடி.

"நான்... நான் என்ன செய்யமுடியும்" என்றாள்... அதற்குள் அவள் அருகில் வந்துவிட்ட மலையமுங்கு தன் முரட்டுக் கரங்களால் அவளை நெரிப்பதுபோல கட்டிப் பிடித்துக் கொண்டான்.

அவன் நோக்கம் அவளுக்கு புரிந்துவிட்டது. உடன்பட மனம் ஒப்பாமல் திமிறினாள். அவள் காதருகே "உன் கணவன் உடல் டாங்கியின் சக்கரங்களால் நசிபடுவதை நீ பார்க்க வேண்டுமா?" என்று கேட்டான்.

*அந்தக் கேள்வி அவளை நிலை குலையச் செய்தபோது, அவள் தரையில் வீழ்த்தப் பட்டாள். மலையமுங்கு என்ற மிருகத்தின் பாரம் அவளை தரையோடு அழுத்தியது. அவன் வெறியோடு முயல, அவள் மயங்கிப் போனாள்.*

நான்கு அதிகாரிகளில் ஒருவர் மட்டும் விடுதலையானார். மூன்றுபேரை டாங்கிகளால் ஏற்றியே கொன்றான் மலையமுங்கு.

இக் கொலைகள் பற்றிய செய்திகள் உகண்டாவில் இருந்த வெளிநாட்டு தூதரகங்கள் மூலமாக அந்தந்த நாட்டு அரசுகளுக்கு தெரியவந்தது.

'இடி அமீன் பயங்கரமான சர்வாதிகாரி. கொலை பாதக ஆட்சி நடத்துகிறான்'

**கடந்தவாரம்**

**இடி அமீனின் காதலியின் சகோதரனான மலையமுங்கு பழிபாவத்திற்கு அஞ்சாதவன். அவனது படுகொலைகள் அமீனைக்கூட சில சமயம் அதிர்ச்சியடைய வைக்கிறது.**

**இனி....**

என்று கண்டனங்கள் கிளம்பின.

இடி அமீனது கொலை பாதக ஆட்சிக்கு தளபதியாக மலையமுங்குவின் பெயர் அடிபட்டது.

தன்னை இரக்கமில்லாத ஒருவனாக சித்தரிப்பதை முறியடிக்கும் விதமான காரியம் ஒன்றைச் செய்தான் அமீன்.

தனது மகனான முவங்காவுடன் பொது நிகழ்ச்சிகள் சிலவற்றில் கலந்து கொண்டான்.

அமீனுக்கும் அவன் மனைவியரில் ஒருவரான மெடினாவுக்கும் பிறந்தவன் முவங்கா. இடி அமீனின் சாயலிலேயே இருப்பான். அவனுக்கு இராணுவ உடை அணிவித்து தன்னுடன் அழைத்துச் சென்றான் அமீன்.

**"என்னைப் போய் இரக்கமில்லாத அரக்கன் என்கிறார்கள். எனக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். மனைவிகள் இருக்கிறார்கள். பாசம் என்றால் என்னவென்று எனக்கும் தெரியும்!"** என்று உருக்கமாக அமீன் கூறியதை அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவரும் உண்மையாக நம்பினார்களோ இல்லையோ நம்புவது போல அவர்கள் பாவனைகள் இருந்தன.



அமீனின் வாரிசு

'இடி அமீனின் வாரிசு தயாராகிறது. இன்னொரு கொடுங்கோலானாக தன் மகனை வளர்க்கப் போகிறாரா இடி அமீன்?' என்று வெளிநாட்டுப் பத்திரிகைகள் கேலியுடன் எழுதி இருந்தன.

**"வெள்ளைக்கார நாய்களுக்கு கறுப்பன் ஒருவன் துடிப்பான தலைவனாக ஆட்சி நடத்துவதை சகிக்க முடியவில்லை. அது தான் அலட்டுகிறார்கள்."** என்று உகண்டா மக்களுக்கு தெரிவித்தது உகண்டா அரச வானொலி.

வெள்ளைக்காரர்களை திட்டித் தீர்த்த இடி அமீன், தன்னைப் பற்றி வெளியுலகில் பரவும் தகவல்களை நிறுத்த வெள்ளைக்கார நாடுகளுடன் நட்பு கொள்ள நினைத்தான்.

உகண்டா இராணுவத்தையும் உளவுப் பிரிவையும் செப்பனிட பிரிட்டிஷ் உதவியை கோரினான். முதற்கட்டமாக உளவுப் பிரிவை செப்பனிட ஓர் அதிகாரி உகண்டாவுக்கு சென்றார்.

அதனால் பிரிட்டிஷ் அதிகாரியை ஆர்ப்பாட்டமாக வரவேற்றான்.

ஆனால் அந்த அதிகாரிக்கு வந்த சில நாட்களுக்குள்ளாகவே பைத்தியம் பிடிக்கும் போலாகிவிட்டது. **(இடி தொடரும்)**

தருவது
ரசிகன்

# கிளின்ரன் கட்டிய 'ரை'

தனது தவறை கிளின்ரன் ஒப்புக்கொண்டார். மோனிகாவுடன் தனக்கு உறவு இருந்ததை ஏற்றுக்கொண்டார். இதன்பின்னரும் கிளின்ரனின் செல்வாக்கு சரியவில்லை என்று அமெரிக்கப் பத்திரிகைகள் சில கூறுகின்றன. அவை கலப்படமில்லாத பொய்கள்.

முன்னர் நீதிமன்றத்துக்கும், அமெரிக்க மக்களுக்கும் துணிந்து பொய்சொன்ன ஒருவர் இப்போது உண்மை பேசி பயன் என்ன? என்று கேட்கின்றனர் பெரும்பாலான அமெரிக்க மக்கள்.

மோனிகாவிடம் இருந்த கிளின்ரனின் விந்துக்கறைபட்ட நீலநிற ஆடைதான் கிளின்ரனை உண்மை பேசும் உத்தமராக்கியது (?!). மரபணு (டி.என்.ஏ) சோதனை செய்தால் மாட்டிக்கொண்டு முழிக்க வேண்டுமே என்பதால் உண்மையை கக்கிவிட்டார்.

இன்னொரு சுவாரசியமான சம்பவமும் நடந்திருக்கிறது. கிளின்ரனின் வழக்கில் மோனிகா சாட்சியமளிக்க வந்தபோது கிளின்ரன் ஜிகினா போட்ட 'ரை' அணிந்திருந்தாராம்.



அந்த 'ரை'யை 1998ம் ஆண்டு கிளின்ரனின் 50வது பிறந்தநாளன்று மோனிகா பரிசளித்தாராம். பரிசை மோனிகாவே கிளின்ரனின் கழுத்தில் கட்டிவிட அவரை தன்னோடு அணைத்தபடி முத்தமிட்டாராம் கிளின்ரன். அன்று இருவரும் நீண்டநேரம் அறையில் இருக்க, கிளின்ரனை சந்திக்க வந்த முக்கிய பிரமுகர்கள்கூட வெளியே காத்திருக்க வைக்கப் பட்டனராம். வெளியே வந்த மோனிகா களைத்துப் போயிருந்தார்.

"நாம் இருவரும் தினசரி சந்தித்துக் கொள்ள முடியாதபோது, இந்த 'ரை'யை நான் அணிந்திருந்தால், உன் ஞாபகமாக உள்ளேன் என்று புரிந்துகொள்" என்று கூறியிருந்தாராம் கிளின்ரன்.

அந்த ரையை அணிந்திருந்தால் மோனிகா மனம் மாறி தனக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கலாம் என்று கருதியே அதை நீதிமன்றத்திற்கு அணிந்து வந்தார் கிளின்ரன்.

ஆனால் மோனிகா 'ரை'யை கவனிக்கவில்லை. கிளின்ரனின் கடைசி அஸ்திரமும் பயனற்றுப் போனது. அதன்பின்னரே உண்மையை ஒப்புக் கொள்வதுபோல நாடகமாடினார்.

"முதலிலேயே உண்மையை ஒப்புக் கொண்டிருந்தால் கிளின்ரனை பாராட்டியிருக்கலாம்" என்று கூறுகின்றனராம் அமெரிக்க மக்கள் பலர்.

# அவரா சொன்னார்? இருக்காது

இன்று உலகில் நம்பர் வன் அழகன் என்று புகழப்படும் நாயகன் லியனார்டோ டிகாப்ரியோ. இவர்தான் டைட்டானிக் பட நாயகன் என்பது தெரிந்ததே



மிக இளைஞனான இந்த ஹீரோ தன்னைவிட பல மடங்கு வயது அதிகமான ஹொலிவூட் நடிகைகளுடன் இணைத்துப் பேசப்படுகிறார்.

பிரபல ஹொலிவூட் நடிகர்கள் துரத்தித்திரியும் நடிகைகளான அலிஸியா சில்வர்ஸ்டோன், கிளார் டேன்ஸ் உட்பட இளம் பெண்களுடன் இவரை இணைத்து ஏகப்பட்ட கிசுகிசுக்கள்.

அந்த கிசுகிசுக்களுக்கு மத்தியில், அவரது பேட்டி ஒன்று பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. 'அவர் அப்படிக் கூறியிருக்க மாட்டார்' என்று பெண் ரசிகைகளின் குரல் எழுந்து கொண்டிருக்கிறது.



அப்படி என்னதான் கூறினார் என்று கேட்கிறீர்களா? கேளுங்கள்.

"முத்தமிடுவதைப் போன்ற மோசமான காரியம் உலகில் வேறு எதுவும் கிடையாது. வாய்களைப் போல அசிங்கம் பிடித்த சமாச்சாரம் உலகில் எங்கும் இல்லை. இந்த வாயில் எப்படித்தான் முத்தமிட்டுக் கொள்கிறார்களோ? மனிதனின் வாயைவிட நாயின்வாய் எவ்வளவோ மேல். என்னுடைய முதல் முத்தம் என் வாழ்க்கையிலேயே நான் மறக்கமுடியாத அருவருப்பான விஷயம்!" என்று தொடர்கிறது அவரது பேட்டி.

'ஈவா' என்னும் பத்திரிகைக்கே அந்தப் பேட்டியை அளித்திருக்கிறார். அப் பேட்டி அவரது பெயரில் வெளியாகும் புத்தகத்திலும் இடம்பெற்றுள்ளது.

# இளவரசரும் மாமா மகளும்!

டயானாவின் மகன் இளவரசர் வில்லியம்ஸுடன் இருக்கும் இளம் பெண்ணைப் பார்த்ததும் பல கேள்விகள் உங்கள் மனதில் எழக் கூடும். இதைப் படியுங்கள்.

இளவரசர் சாள்ஸின் சகோதரி இளவரசி ஆனின் மகள் ஸாராதான் வில்லியம்ஸுடன் காணப்படுகிறார். 17 வயதான இவ்விளமங்கை தனது மாமா மகன் இளவரசர் வில்லியமுடன் மிக நெருக்கமாகக் காணப்படுகிறார். இளவரசி டயானாவின் மரணச் சடங்குகளின்போது வில்லியம், ஹரி இருவரையும் தேற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தவர் ஸாராதான். உயர்தரப் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் இவர் எப்போதும் எல்லோருடனும் கலகலப்பாகவே உரையாடி மகிழ்வூட்டுவார்.



வில்லியம்– ஸாரா

தமது தாயாரின் அகால மரணம் பற்றிய செய்தி வெளிவந்ததும் இளவரசர்கள் வில்லியமும் ஹரியும் சோகமே உருவாகி அழுது புலம்பினர். இவர்களைத் தேற்றுவதற்காகவே இளவரசி ஸாரா தன்னைத் தானே தயார்ப்படுத்திக்கொண்டார். பல நகைச்சுவைக் கதைகளையும் கூறி ஊடே வாழ்வின் நிலையாமையின் தத்துவங்களையும் எடுத்துச் சொல்லி இளவரசர்களைத் திடப்படுத்திக் கொண்டிருந்தார்.

எலிஸபத் மகாராணி- இளவரசர் பிலிப் திருமண பொன்விழா நிகழ்ச்சிகளிலெல்லாம் இளவரசர் சாள்ஸுடன் மிக நெருக்கமாக ஸாரா காணப்பட்டார்.

ஸாரா தன்னருகிலிருக்கும்போது வில்லியம் மிகவும் உற்சாகமாகக் காணப்படுகிறார் என்று இலண்டன் மாநகரிலிருந்து வெளியாகும் செய்தித் தாள்கள் கூறுகின்றன. வழமையாக கமராவைக் கண்டால் கூச்சப்படும் வில்லியம்ஸ் ஸாராவுடன் இருக்கும்போது கமராக் கூச்சமற்றவராகக் காணப்படுகிறாராம். இத்தகைய கூச்சசுபாவத்தை ஸாராதான் வில்லியம்சிடமிருந்து விரட்டியடித்தார் என்று கூறுகிறார்கள்.

'ஸாரா' என்று தன் சகோதரி ஆனின் மகளுக்கு இளவரசர் சாள்ஸ்தான் பெயர் சூட்டினார். 'ஸாரா' என்றால் 'உதயத்தின் பிரகாசம்' என்பது பொருள். இந்தப் பிரகாசம் வில்லியம்ஸையும் பிரகாசப் படுத்துகிறது.



படிப்பகம்

# பாறையில் ஏறிய பிரின்செஷ்





எம்.வி.பிரின்செஷ் கேஷ் கப்பலுக்கு இங்கு நடந்த சோகக்கதை உலகறிந்ததே. உலகில் வேறு எங்காவது பிரின்செஷ் என்ற பெயரிலுள்ள கப்பல் இருந்ததா? இப்படி சோகம் நிகழ்ந்ததா என்று ஆராய்ந்தோம். படத்தோடு கிடைத்த தகவல் இது.1910ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பனிபடர்ந்த காலை நேரத்தில் பாதை தவறி பாறையில் ஏறியது எஸ்.எஸ்.பிரின்செஷ் என்ற பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல். அலாஸ்காவின் சென்ரிநெல் தீவு கடற்பரப்பில் இந்த விபத்து நிகழ்ந்தது.

தகவல் அறிந்து விரைந்த பசுபிக் றெயில்வே கப்பல் உதவிக்கு விரைந்து பயணிகளையும், சரக்குகளையும் பத்திரமாக இறக்கியது. இக்கப்பலில் 18 அங்குல அகலமும், 50 அடி நீளமானதுமான வெடிப்பு ஏற்பட்டது. அதனை திருத்தி மீண்டும் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டது.

1910ல் தப்பிய இக்கப்பல் 1930ல் ஜமெய்க்கா நாட்டுக் கடலில் மூழ்கிப் போனது. ஆக அன்று ஒரு பிரின்செஷ் ஜமெய்க்காவில். இன்றொரு பிரின்செஷ் முல்லைத்தீவில். இன்னொரு ஒற்றுமை என்ன தெரியுமா? அந்த பிரின்செஷ் விபத்தில் சிக்கியதும் ஆகஸ்ட் மாதத்தில். இங்கு பிரின்செஷ் விபரீதத்தில் சிக்கியதும் ஆகஸ்ட் மாதத்தில்!

## உடையாத சாதனை



ஒரு பைன்ற் தண்ணீர் கொள்ளக்கூடிய 57 கண்ணாடி தம்ளர்களை ஒன்றன் மீது ஒன்றை வைத்து தனது நாடியில் தாங்கிச் சாதனை புரிகிறார் ஜமெய்க்கா நாட்டைச் சேர்ந்த அஷ்ரிடா ஃபேர்மன் என்பவர்.

1996 மே 18ம் திகதியன்று நியூயோர்க் நகரில் 11.89 நொடிகள் வரை இச்சாதனையை ஃபேர்மன் செய்து காட்டினார்.

கின்னஸில் இடம்பிடித்துள்ள இச் சாதனையை இதுவரை வேறு யாரும் உடைக்கவில்லை. பலர் முயற்சி செய்து கண்ணாடி தம்ளர்களைத்தான் உடைத்திருக்கிறார்கள்.

## வயதான அம்மா






அமெரிக்காவில் கலிஃபோர்னியா மாநிலத்தில் ஹைலண்ட் எனும் இடத்தைச் சேர்ந்த அர்செலி கெஹ் என்ற மாது ஒரு பெண் மகவை ஈன்றெடுத்தார். இதில் என்ன விசேஷம் என்கிறீர்களா? இப்பெண்மணிக்கு இக்குழந்தை பிறக்கும்போது வயது 63- ஒன்பது மாதம்.

லோமாலிண்டா பல்கலைக்கழக மருத்துவ மையத்தில் 1996ம் ஆண்டு நவம்பர் மாதம் 7ம் திகதியன்று தான் இக்குழந்தை பிறந்தது. ஆனால் இத் தகவல் 1997 ஏப்ரல் 23ம் திகதிதான் வெளியுலகுக்குத் தெரிவிக்கப்பட்டது. வயதான தாய் என்று கின்னஸில் இவர் இடம்பிடித்துள்ளார்.

மேலும் சில பிரசவ சாதனைகள்! இதோ: உலகிலேயே அதிக குழந்தைகளைப் பெற்றெடுத்த பெண்மணி ரஷ்யத் தலைநகரான மொஸ்கோவுக்கு அருகிலுள்ள ஷுயாவைச் சேர்ந்த திருமதி ஃபியோடர் வஸ்ஸிலியெவ் ஆவார். இவர் மொத்தம் 69 பிள்ளைகளைப் பெற்றெடுத்துள்ளார். திருமதி வஸ்ஸியெவ் 27 தடவைதான் பிரசவித்துள்ளார். 16 இரட்டைக் குழந்தைகள், எழுதடவைகளில் 3 குழந்தைகளையும் நான்கு தடவைகள் ஒரு தடவையில் 4 குழந்தைகளையும் ஈன்றெடுத்தார்.

இப்பிரசவங்கள் 1725ம் ஆண்டு முதல் 1765ம் ஆண்டு வரையுள்ள 40 ஆண்டுகளுக்கிடையில் இடம்பெற்றன. ஆனால் 1787 பெப்ரவரி 27ல் தான் மொஸ்கோவுக்கு நிக்கலோஸ்கி குருத்துவ நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டது இக்குழந்தைகளில் ஆக இரண்டு மட்டும்தான் குழந்தைப் பராயத்தில் இறந்தனவாம்.

## திமிங்கில வேட்டை



வட அமெரிக்காவின் மேற்குக் கரையோரங்களில் காணப்படும் கடும் சாம்பல் வர்ண திமிங்கிலங்கள் இன்றைய உயிர் வாழும் உயிரினங்களில் மிகப் பெரியவை. 43 அடி நீளம்வரை இவை வளரும்.

இப்பிராணிகளை வேட்டையாடுவதற்கு அமெரிக்கப் பூர்வீகக் குடிகளில் ஒன்றான மக்கா இனத்தவருக்கு பன்னாட்டு திமிங்கிலப் பாதுகாப்புக்கான அமைப்பு அனுமதி தந்திருக்கிறது.

வாஷிங்டன் மாநிலத்திலுள்ள நீஹ் குடாவில் மட்டும் இம்மக்கள் திமிங்கில வேட்டை ஆடலாம் என நிபந்தனையுமுண்டு. இதென்ன பெரிய விஷயம் பல நாடுகளில் மக்களை வேட்டையாடவே யோசனை சொல்லும் அரசாச்சே அமெரிக்க அரசு.

வேறு அமைப்புகள் இப்பிராணிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. நீஹ் குடாவினுள் சாம்பல் திமிங்கிலங்கள் வந்துவிடாதபடி இவ்வமைப்புக்கள் சில தந்திரோபாயங்களைச் செய்து வருகின்றன.

நோர்வே நாட்டு கடற்படையின் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு நீர்மூழ்க்கிக் கப்பலை ஏற்பாடு செய்து இந்நிறுவனம் ஒன்று கடலினடியில் பலத்த சப்தத்தை எழுப்பி திமிங்கிலங்களை விரட்டியடிக்கின்றனர்.

திமிங்கிலங்களின் உயிரைக் காக்கவே இத்தனை முயற்சி எடுக்கிறார்கள். மனித உயிர்களைப்பற்றி அதில் பத்தில் ஒருபங்கு அக்கறைகூட இல்லாத அரசுகளும் இருக்கின்றனவே என்று நினைக்கிறீர்களா?

## தகவல் பெட்டி

## பூங்காவில் கூக்குரல்

நீருக்குள் மூழ்கிக் கொண்டிருக்கும் மனிதர்போலத் தெரிகிறதல்லவா. அல்ல, அல்ல. உயிருள்ள மனிதரல்ல, உருவாக்கப்பட்ட சிலை.

தைவான் நாட்டின் தலைநகரான தைப்பேய் அருகே உள்ள பூங்காவில் இந்த சிலை தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. 'கூக்குரலிடும் அலெச்சாண்டர்' என்று இதற்கு பெயர்.

இச் சிலைக்கு எதிர்ப்பும் எழுந்திருக்கிறது. பூங்காவுக்கு வரும் சிறுவர்களை பயமுறுத்துவது போன்று இச்சிலை இருப்பதால், உடனே அகற்றுங்கள் எனப் பெற்றோர்கள் பலர் போர்க்கொடி உயர்த்தி உள்ளனர்.



## காணாமல்போன தலை



தலையைக் காணவில்லை என்றாலும், அதனைக் கண்டிக்காமல், கண்டுபிடித்து தருமாறு காணாமல் போகச் செய்தவர்களிடமே இரங்கிக் கேட்டுவிட்டு, அப்படிக் கேட்டதைச் சொல்லியே விளம்பரம் தேடும் அரசியல்வாதிகள் வாழும் உலகம். அவர்கள் இப்படத்தை கூர்ந்து நோக்கக்கூடும்.

நல்லவேளையாக தலை காணாமல் போகவில்லை. மறைந்திருக்கிறது. இன்னொரு தலை தெரியாமல் கச்சிதமாக 'கிளிக்' செய்யப்பட்டுள்ளது. படப்பிடிப்பில் சாகசம், புதுமை, எதையும் வித்தியாசமாக செய்து பாருங்கள், அசத்தலாகத்தான் இருக்கும்.

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 69

# மகளின் காதலுக்கு எதிர்ப்புக்கொடி
## இயக்குநரை மிரட்டிய அடியாட்கள்

பாரதியாரின் கனவுக் காதலி பெயரில் படமெடுத்து, பொற்காலம் கண்ட இயக்குநர் அவர். அவரது இயக்கத்தில் நடித்த இரண்டு எழுத்தில் பெயர் உள்ள நடிகையுடன் காதல்வயப்பட்டார். நடிகையின் தாயார் பிரபல கட்சி ஒன்றின் தலைவருக்கு மிக நெருக்கமானவர். வேண்டப்பட்டவர். அவரது சகோதரியும் திராவிட கட்சி ஒன்றின் வீரமான அமைச்சருக்கு மிக மிக நெருக்கமானவர். தமிழ் நாட்டில் மாம்பழத்துக்கு பெயர் போன மாவட்டத்தின் வீரமான அமைச்சர் அவர்.

இவ்வாறாக ஆள், அம்பு, அதிகார பின்பலம் உள்ள நடிகையின் தாயார் மகளை வைத்து பல திட்டங்களை தீட்டி வைத்திருக்கிறார். அப்படி இருக்கும்போது காதல், கத்தரிக்காய் என்று மகள் இப்போதே சினிமா உலகை விட்டு விலக அனுமதிப்பாரா?

ஏற்கனவே இரண்டு எழுத்து நடிகை தமிழ்ப்பட உலக பிரபல நடிகரின் தனிக்கவனிப்பில் இருந்தவர். அந்த நடிகருக்கும், மேலே குறிப்பிட்ட பிரபல கட்சித் தலைவருக்கும் இடையே நெருக்கம் இருந்தது. அதனால் நடிகையின் தாய்க்குலமும் தடைபோடாமல் உடன்பட்டது.

இயக்குநர் விவகாரம் அப்படி அல்ல. முதலுக்கே மோசம் வரலாம் என்பதால், தாய்க்குலம் பொங்கி எழுந்தது.

தனக்கு நெருக்கமான தலைவரிடம் விஷயத்தை கொண்டு சென்றது. அவர் நேரடியாக தலையிட முன்வரவில்லை. இந்தமாதிரி விஷயங்களில் முன்னே பின்னே யோசிப்பவர் அவர்.

### அமைச்சரின் நிபந்தனை

தனது சகோதரி ஊடாக வீரமான அமைச்சரை தொடர்பு கொண்டார் தாய்க்குலம். உதவ முன்வந்த அமைச்சர் அதற்கு பிரதியுபகாரமாக நடிகை ஒருநாள் இரவு மட்டும் தன்னுடன் தங்கினால் போதும் என்றார். சகோதரிக்கு வந்ததே கோபம். நாலு திட்டு திட்டிவிட்டு திரும்பினார்.

ஆனால் நடிகையின் தாயாருக்கு அமைச்சர் கேட்ட காணிக்கையை கொடுப்பதில் தயக்கம் ஏற்படவில்லை. தானே நேரடியாக தொடர்பு கொண்டார். அவர்மீதும் முன்னர் கண்வைத்தவர்தான் அமைச்சர்.

பல படங்களில் தாராளமாக தோன்றிய முன்னாள் நடிகையான தாய்க்குலம் அக் காலத்தில் பல வி.ஐ.பிக்களை ஆட்டிப் படைத்தவர்.

அமைச்சருக்கு காணிக்கை கொடுக்கப்பட்டார் நடிகை. அதன் பின்னர் இயக்குநர் வீட்டுக் கதவைத் தட்டினார்கள் அமைச்சரின் அடியாட்கள்.

"அவளை பார்க்கக்கூடாது. பேசக்கூடாது. அடுத்தபடத்தில் அவள் இருக்கவும் கூடாது. மீறினால் நீ இருக்கமாட்டாய், புரிஞ்சுக்கோ" என்றுவிட்டு போயினர்.

இயக்குநர் பயந்து போனார். தன் காதலை முட்டைகட்டி எறிந்துவிட்டார்.

தன் காதலை சமாதிகட்டத்தான் தன்னையே அமைச்சருக்கு காணிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்பது பின்னர்தான் நடிகைக்கு தெரிந்தது. அழுதார். அரற்றினார். இயக்குநரை தொடர்பு கொள்ள முயன்றார். இயக்குநர் ஒளிந்தார். கசந்தார் நடிகை. அதற்குள் அந்த அமைச்சரின் மகனும் நடிகைமீது கண்வைத்து விருந்து கேட்டார். மாவட்டத்தையே ஆட்டிப் படைக்கும் அந்த புத்திரரின் பிடியில் சிலமாதங்கள் இருந்தார் நடிகை.

மகன் விவகாரம் தெரிந்த பின்னர் தந்தை மெல்ல ஒதுங்கிக்கொண்டார். எப்படியோ காதல் தோல்வியை மறந்துவிட்ட நடிகை மறுபடி மீன்போல துள்ளுகிறார்.

## இயக்குநர் சரண்

வில்லனாக நடித்து கதாநாயகனாக நடித்து மறுபடி வில்லனாக பிரகாசித்த சரண்ராஜ் இப்போது இயக்குநராகிவிட்டார்.

அவர் இயக்கி நடிக்கும் படம்: அண்ணன் தங்கச்சி. பாலசந்தர் கையால் 'கல்கி' படத்தில் மெருகூட்டப்பட்ட சுருதி தான் கதாநாயகி.

## என்னால் முடியாதா?

ரவளி தெலுங்கில் மல்லுக்கு நிற்கிறார். "போலி நடிகைகள் கொடிகட்டிப் பறக்கும் போது, இயற்கையான உடல்வாகு கொண்ட நான் ஏன் முன்னுக்கு வர முடியாது?" என்கிறார்.

தமிழில் முயன்று பார்த்தும் முடியாமல் போனதால் தெலுங்கில் பாய்ந்து போயிருக்கிறார் அம்மணி.

## மி னி சி னி

* 'கள்ளழகர்' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக நடிக்க இருப்பவர் புதுமுகம் லைலா. இவர் முதலில் 'வி.ஐ.பி.' படத்தில் சிம்ரான் நடித்த வேடத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டு பின்னர் நீக்கப்பட்டவர்.

* அர்ஜுன் தற்போது இயக்கி நடித்து வரும் 'தாயின் மணிக்கொடி' யின் படப்பிடிப்புக்கள் முடிவடைந்துவிட்டன. இதற்குப் பிறகு அர்ஜுன் இயக்கி நடிக்கும் படம் முழுக்க முழுக்க வெளிநாடுகளில் தயாராகவுள்ளது.

* பாண்டியராஜனுடன் 'கும்பகோணம் கோபாலு' படத்தில் நடித்து வரும் மயூரி, 'சம்மர் இன் பெத்லெகம்' என்ற மலையாளப் படத்தில் நடித்து முடித்துள்ளார். சிபி மலையில் இயக்கிய இப்படத்தில் சுரேஷ்கோபி-ஜெயராம் இணைந்து நடித்துள்ளனர்.

* சூப்பர் குட்பிலிம்ஸ் தயாரிக்க விஜய் நடிக்கும் 'இனி பிரிவில்லை' என்று படத்தை செந்தில் என்பவர் இயக்குவதாக இருந்தது. இப்போது இப்படத்தின் பெயரையும், இயக்குநரையும் மாற்றி விட்டார்கள்.

* மம்முட்டி கதாநாயகனாக நடிக்கும் 'அம்பேத்கார்' என்ற ஆங்கிலப்படத்தில், மம்முட்டிக்கு மனைவியாக சோனாலி நடிக்கிறார். வினீத்திற்கு ஜோடியாக 'மேமாதம்' என்ற படத்தில் கதாநாயகியாக நடித்தவர்தான் இந்த சோனாலி.

* நடிகர் திலகத்தின் 125வது படம் 'உயர்ந்த மனிதன்'. தற்போது இதே பெயரில் புதிய படமொன்று தயாராகவுள்ளது. இந்தப் படத்தை 'ராமன் அப்துல்லா' படத்தைத் தயாரித்த கோவை முருகேசன் தயாரிக்கிறார்.




ரசிகா
படம்: கபடி கபடி



ராம்கி-இந்திரஜா
படம்: தடயம்

## அன்று ஹீரோ இன்று?

நடிகர் ஜெய்சங்கர் அந்தக் காலத்தில் தமிழக ஜேம்ஸ்பொண்ட் என்று அழைக்கப்பட்டவர். அக் காலத்தில் ஜெய்சங்கர் நாயகனாக நடித்த படங்களில் ஒன்று இரவும் பகலும்.

தற்போது அதே பெயரில் ஒன்று தயாராகிறது. இதிலும் நடிக்கிறார். ஹீரோவா... ஹீரோவின் அப்பாவாக. ஹீரோ தீபக். புதுமுகம். பிர... நம்பியாரின் மகள் வயிற்... இவர்.

நம்பியாரின் மகள் சிநேக... துக்கு பின்னர் நடிகர் சரத்பா... கைப்பிடித்துள்ளார்.



## அன்புக் கரங்களில்

பாண்டியராஜனின் அன்புக்கு பாத்திரமாகி, அவரிடமே அடைக்கலமாகி, அவரது சிபாரிசால் பல படங்களில் ஜோடி சேர்ந்தவர் ரசிகா.

'கும்பகோணம் கோபாலு' படத்தில் பாண்டியராஜனின் ஜோடியாக நடிப்பவர் மயூரி. அந்த மயூரியிடம் மயங்கிய பாண்டியராஜன் ரசிகாவை புறக்கணிக்க தொடங்கினார்.

ரசிகாவா கொக்கா, இப்போது இயக்குநராகவும், வில்லனாகவும் இருந்து கதாநாயகனாக நடித்துவரும் நடிகரின் அன்புப் பிடியில் சிக்கியிருக்கிறார்.

## 'உயிரே' நாயகன்

'தில்ஸே' இந்திப் படம் தமிழில் 'உயிரே' என்று மொழிமாறி வருகிறது. இதில் நாயகன் ஷாருக்கான். நாயகி மனிஷா கொய்ராலா. இயக்கம்! மணிரத்னம் என்பது ரொம்பப் பழைய செய்தி.

தனது படம் தமிழில் வருவதையடுத்து ஷாருக்கானின் பார்வை தமிழுக்கு திரும்பியிருக்கிறது. தமிழில் நடிக்கப் போகிறாரோ? என்று நினைக்க வேண்டாம். சிறந்த தமிழ்ப் படங்களை இந்தியில் மாற்றி கதாநாயகனாக நடிக்க விரும்புகிறார். முதல் கட்டமாக 'பூந்தோட்டம்' படத்தை இந்தியில் எடுக்கிறார்கள். கதாநாயகன் ஷாருக்கான்.

## சின்னப் பெயர்கள்

மணிரத்னத்தின் 'உயிரே' படத்தில் தமிழில் ஷாருக்கானுக்காக குரல் கொடுத்திருப்பவர் அரவிந்தசாமி. மனிஷாவுக்கு குரல் கொடுத்திருப்பவர் யார் தெரியுமா? சுகாசினி.

'நாயகன்', 'அஞ்சலி', 'ரோஜா', 'பம்பாய்', 'இருவர்', 'உயிரே' என்று சின்ன சின்ன தலைப்புக்களாக படங்களுக்கு பெயர் சூட்டுபவர் மணிரத்னம். அப்படிப் பெயர் வைத்தால்தான் மக்கள் மனதில் நச் என்று பதியுமாம்.

## கார்த்திக்~அஜித்

உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் படத்தில் கார்த்திக் கதாநாயகன். கௌரவ பாத்திரத்தில் அஜித்குமார் தோன்றியுள்ளார். படம் வெளிவந்துவிட்டது. கார்த்திக், அஜித் இணைப்புக்கு நல்ல வரவேற்பு இருப்பதால், இன்னொரு படத்திலும் இவர்கள் இணைந்து நடிக்கவுள்ளனர்.

படத்தின் பெயர்: ஆனந்தப் பூங்காற்றே. கதாநாயகி மீனா. அஜித்துக்கும் ஜோடி உண்டு. யார் என்பது இன்னமும் முடிவாகவில்லை. இயக்கம்: ராஜ்கபூர். இசை: தேவா.


படிப்பகம்

www.padippakam.com

## காதோடு சொல்லுகிறோம்

ன்' நடிகை தன் தங்கைக்கு வாய்ப்புக் கேட்டு பிரபல பாளர் ஒருவரை உடும்புப்பிடி பிடிக்க, தயாரிப்பாள டியில் உருகி சம்மதித்துவிட்டாராம். ஒஹோ என்று போகிறார் தங்கை என்று கூறித்திரிகிறார் 'ரன்' ஐந்தெழுத்து படநிறுவன தயாரிப்பாளராம் அவர்.

ன்றெழுத்து இளம் நடிகர் இப்போது 'தேவ' நடிகைக்கு ரது விட்டு 'காலமெல்லாம் காதல் வாழ்க' என் ம். கௌசல்யமான நடிகை மசியாததால் 'தேவ' பின் பக்கம் பார்வையைத் திருப்பியுள்ளாராம். இதனால் நடிகை முன்றெழுத்து நடிகருக்கு சிபாரிசு செய்ய நடிகர் தன் படங்களில் நடிகைக்குமாக சிபாரிசு செய்து வருகின்றாராம்.

ஹீர நடிகையால் அறிக்கைவிட்டு நிராகரிக்கப்பட்ட நடிகரை, பழம்பெரும் காதல் மன்னரான நடிகர் அழைத்தாராம். 'நான் செய்யாத எதை புதுசா நீ செய்திருக்கிறாய்? என்றாலும் உனக்கு புத்திசாலித்தனம் போதாது. யாருடன் வேண்டுமானாலும் கூத்தடி. ஆனால் குடும்பம் ஒன்றை உனக்காக உருவாக்கி வைத்திரு. நான் அப்படி செய்ததால்தான் கடைசிக்காலத்தில் இப்படி நிம்மதியாக இருக்கிறேன்" என்று ஆலோசனை கூறியுள்ளாராம்.

குறுமுனி பெயர் கொண்ட இயக்குநர் விடுகதை போட்டு தோல்வி கண்டதால் அவர் பக்கம் திரும்ப தயாரிப்பாளர்கள் பயப்படுகிறார்களாம். குறுமுனியால் முன்னுக்கு கொண்டுவரப்பட்ட நடிகையும், இப்போது அவர் அழைப்புக்கு மதிப்புக் கொடுப்பதில்லையாம்.

நட்சத்திரத் தம்பதியின் வாரிசான நடிகைக்கு தன் தந்தையின் நண்பர்களான நடிகர்களுடன் நடிப்பது தமாஷாக இருக்கிறதாம். நடிகை அவ்வாறு சொன்னதால் குறிப்பிட்ட நடிகர்கள் சிலருக்கு மன வருத்தமாம்.

## சொர்க்கத்தில் தேவயாணி

அடுத்த ரஜினி பட நாயகிகள் சிம்ரான், ஐஸ்வர்யா, ப்ரீதா என்றெல்லாம் கிளம்பிய ஊகம் இப்போது தேவயாணி என்று கூறுகிறது.

'படையப்பா' படத்தில் தனக்கு ஏற்ற ஜோடி தேவயாணி என்று கூறிவிட்டாராம் ரஜினி. 'சூர்ய வம்சம்', படம் பார்த்த ரஜினி அதில் தேவயாணியின் நடிப்பைப் பார்த்து நெகிழ்ந்துபோனாராம்.

'படையப்பா'வில் தேவயாணி தவிர ரம்யா கிருஷ்ணன், சித்தாரா ஆகியோரும் உண்டு. இப்படத்தில் ரஜினியோடு நாசரும், தெலுங்கு நடிகர் கிருஷ்ணம் ராஜூம் நடிக்கின்றனர்.

'காதலா காதலா! படத் தயாரிப்பாளர் தேனப்பனும், இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமாரும் இணைந்து தயாரிக்கும் இப்படத்தின் இசை: ஏ.ஆர்.ரகுமான். இவை ரஜினி படம் பற்றிய பிந்திய தகவல்கள். ரஜினியே தன் வாயால் உறுதிப்படுத்தினால்தான் உத்தரவாதம்.




கார்த்திக்-தேவயாணி
படம்: உதவிக்கு வரலாமா

## மகேஸ்வரியின் காதலர்

தெற்றுப்பல்லும் அழகுதான். ஆனால் தெற்றுப் பல்லாகவும் இல்லாமல், முத்துப்பல்லாகவும் இல்லாமல் அங்கும் இங்குமாய் அழகற்று இருக்கும் பற்களை என்ன செய்யலாம்?

பல்வரிசையை ஒழுங்குபடுத்த 'கிளிப்' பொருத்திக் கொள்ளலாம். அதைத்தான் செய்கிறார் மகேஸ்வரி. அம்மணியின் லேட்டஸ்ட் காதலர் நாகார்ஜுனாவாம். இப்படியே பட்டியல் நீளும்போல் இருக்கிறது.

## ஜெயராம் கவலை

பிரபுவுடன் நடிக்க இருந்த 'நண்பா, நண்பா' படம் நிறுத்தப்பட்டதால் ஜெயராமுக்கு கவலை. ஏற்கனவே ரஜினியுடன் இணைந்து நடிக்க இருந்த அருணாச்சலத்திலும் பின்னர் நடிக்க முடியாமல் போயிருந்தது.

'நண்பா, நண்பா' படம் பல வருடங்களாக தயாரிப்பில் இருந்து தற்போது நிறுத்தப்பட்டுவிட்டமை தெரிந்ததே. முதலில் பிரபுவுடன் சுரேஸ் கோபி நடிப்பதாக இருந்தது. பின்னர் ஜெயராம் என்றனர். இப்போது படமே காலி!

## குருதனபால்–சத்யராஜ்

மாமன் மகள், 'தாய்மாமன்', 'பெரிய மனுசன்' ஆகிய சத்யராஜ் படங்களை இயக்கியவர் குருதனபால், சத்யராஜை வைத்து 'வந்தாங்க ஜெயிச்சாங்க' என்னும் படத்தை எடுக்க இருந்தார். பின்னர் அப்படம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

இப்போது 'திருநாள்' என்ற பெயரில் சத்யராஜ் நடிக்கும் படத்தை இயக்கப்போகிறார். இதில் சத்யராஜுக்கு இரண்டு நாயகிகள். தேர்வு நடக்கிறது. விஜயகுமார், கவுண்டமணி, செந்தில், தலைவாசல் விஜய் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: இளையராஜா.

## பிரசாந்த் அதிசயம்

ய படம் பசங்கர் அல்ல, டத்தின் நடிகர் பேரன் வாகரத் வத்தான்

'ஜீன்ஸ்' படத்தில் ஏழு அதிசயங்களை காட்டினார்கள். இப்போது பிரசாந்த் நடிக்கும் படம் ஒன்றுக்கும் 'அதிசயம்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

இப்படத்தை தயாரிப்பது விஜய் அமிர்தராஜ். ஜீன்ஸ் பட தயாரிப்பாளரேதான். இன்னொருவர் தியாகராஜன்.

இயக்கம், காதல் கோட்டை புகழ் அகத்தியன். இசை: இளையராஜா பாடல்கள் பதிவு செய்யப்பட்டுவிட்டன.

'காதல் கோட்டை', 'கோகுலத்தில் சீதை' படங்களின் பின்னர் சற்று டல்லாகியிருந்த அகத்தியனின் மார்க்கெட்டை அதிசயம் மறுபடி சீர் செய்யுமா?

## 'ஏ' படம்


சற்று ஏடாகூடமான படங்களுக்கு 'ஏ'சான்றிதழ் வழங்கப்படுவதுண்டு. கன்னடத்தில் படம் ஒன்றுக்கே 'ஏ' என்று பெயரிட்டுள்ளனர். படம் சூப்பர் ஹிட். அதனை அதே பெயரில் தெலுங்கில் சுட்டனர். அங்கும் ஹிட். விடுவார்களா? விரைவில் தமிழில் சுட்டுத்தரப் போகிறார்கள்.

## விருது என்ன செய்யும்?

பாலுமகேந்திராவிடம் பல கலைகள் பயின்றவர் நடிகை அர்ச்சனா. உயர்ந்த உருவம், அகன்ற கண்கள், எடுப்பான தோற்றம் எல்லாம் இருந்தும் பாலுமகேந்திராவின் கட்டுப்பாட்டில் இருந்ததால் விரும்பியபடி நடிக்க முடியவில்லை. ஆனாலும் விருது வாங்கும் விதமாக நடித்து ஊர்வசி விருதுகளை அள்ளினார்.

ஊர்வசி விருது இருந்து என்ன பயன்? பணம் வராதே! அதனால் ஏற்பட்ட தகராறு பாலுமகேந்திராவுடன் உறவு முறிந்தது.

இப்போது படம் ஒன்றை இயக்கும் ஆசை வந்திருக்கிறது அர்ச்சனாவுக்கு. பாலுமகேந்திராவிடம் கற்ற கலைகளில் இயக்குநர் கலையும் ஒன்றாம்.



ரமன்காந்த்-ஸ்நேகா
படம்: மோனிஷா



ப்ரீதா விஜயகுமார்
படம்: காதல் சந்தியா

## பீடா வாங்கலியோ பீடா

எடுத்த எடுப்பிலேயே முதல் இடத்திற்கு நெருங்கி விட்டார் ப்ரீதா விஜயகுமார். இன்றுள்ள முன்னணி நடிகைகளிலேயே மிக இளமையானவர் இவர்தான். அதனால் வயதான நாயகர்கள்கூட ஜொள்ளு விடுகிறார்கள்.

விஜயகாந்த், சத்யராஜ், நெப்போலியன் போன்ற நாயகர்களுடன் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது அப்படித்தான்.

'சந்திப்போமா', 'தர்மா' இரண்டும் தமிழில் இவர் நடித்ததில் வெளியான படங்கள். மேற்படி படங்கள் இரண்டும் தூள் கிளப்பாவிட்டாலும், ப்ரீதா ரசிக மகாஜனங்களை ஜொள் ஒழுக வைத்திருக்கிறார்.

தர்மாவில் சில காட்சிகளில் மட்டுமே கவர்ச்சிக்காக பயன்படுத்தப்படுத்தி விணடித்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் ப்ரீதாவின் இளமையை ரசிக்க ஏகப்பட்ட கூட்டம். விஜயகாந்த் சண்டைக் காட்சிகளில் பின்னி எடுக்க, அவரையே பின்னி எடுத்திருக்கிறார் ப்ரீதா. இளமை பேசும் ப்ரீதா முன்னால் விஜயகாந்தே கொஞ்சம் தடுமாறுவது போல் தெரிகிறது.

ப்ரீதாவுக்கு ஜொள்ளுவிடும் ரசிகர்கள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், சென்னையில் உள்ள கில்லாடி பீடா வியாபாரிகள் சிலர் ப்ரீதா பீடாவை அறிமுகம் செய்துள்ளனர்.

குஷ்பு இட்லி மாதிரி இப்போது ப்ரீதா பீடா. தளிரான வெத்திலையில் தயாரானது. மென்றால் சுவையானது, உதடு சிவக்கும், மென்மையானது என்றெல்லாம் கூறி விற்கிறார்களாம்.

ப்ரீதா விஜயகுமார்தான் இன்றுள்ள தமிழ்ப்பட கதாநாயகிகளில் தமிழ்ப்பெண். ஸ்ரீதேவிக்குப் பின்னர் தமிழில் நம்பர் வன் இடத்தைப் பிடிக்கப்போகும் தமிழ் நடிகை இவர்தான் என்கிறார்கள்.

## நட்புக்காக தெலுங்கில்

'நட்புக்காக' படத்தை தெலுங்கில் எடுத்து நடிக்கப் போகிறார் சிரஞ்சீவி.

ஏற்கனவே சரத்குமார் நடித்த 'நாட்டாமை'யும் தெலுங்கில் எடுக்கப்பட்டு சூப்பர் ஹிட். அதில் மோகன் பாபு கதாநாயகனாக நடித்திருந்தார். கௌரவ பாத்திரத்தில் ரஜினி நடித்திருந்தார்.

இந்த தடவை முந்திக் கொண்டார் சிரஞ்சீவி. சமீபகாலமாக தொய்ந்து போயுள்ள மார்க்கெட்டை 'நட்புக்காக' சீர்படுத்தும் என்று நம்புகிறாராம்.

www.padippakam.com

## சமாதியாகிப் போகிறேன்...!

எத்தனை
தடவைகள்
என்னில்
அணுக்கதிர்ப்
பரிசோதனை
செய்திருக்கிறாய்,
ஒன்றா? இரண்டா?
••
உன்
கண்பட்ட
இடங்கள்
புண்பட்டுள்ளதை
அறிவாயா?
••
உன்
கன்னக்குழியில்
விழுந்த நான்
இன்னும்
எழும்பவேயில்லை!
••
பரிசோதனை
செய்தது நீ!
பரிதவிப்பது
நான்!
••
ஆயுள் முழுக்க
எனக்கு
அகதி முகாம்தானா?
••
பேச்சுவார்த்தையே
இல்லையா?
நமக்குள்
சமாதானம்
பிறக்காதா?!
••

மாரிமுத்து யோகராஜன்

## தேன் கிண்ணம்



எதிர்காலத்தில அமெரிக்க ஜனாதிபதியையே ஆட்டமகாணச் செய்யப்போவதை அறியாத சிறுமியாக...

## கண் துடைப்புகள்!

நடந்தேறியவைகளெல்லாம்
ஈடுசெய்ய முடியாத
இழப்புகளென்றால்,
எங்ஙனம் சாத்தியம்?
*
ஆபிரஹாம் லிங்கன், கென்னடி,
மகாத்மா, நேரு, இந்திரா,
நம் நாட்டின்
தந்தை செல்வா, பொன்னம்பலம்,
இலக்கிய வானில்
பாரதி, பட்டுக்கோட்டை,
ஈழத்தில் 'தங்கத்தாத்தா'வும்...
அழகுலகில்
டயானாவும்–
காருண்யத்தில் அன்னை
தெரேசாவும் வகித்த இடங்கள்
வெறிச்சோடி விட்டனவா?
*
இவைகளெல்லாம்
ஈடுசெய்ய
முடியாதவைகள்
என்றால், உலகம்
எவ்விதம் இயங்குகிறது?
*
இன்னொரு சிவாஜியும்,
எம்.ஜி.ஆருமா...?
தேவையில்லை!
*
புதிது புதிதாய்
பரம்பரைகள் தோன்றி
தமது பெயர்களையும்
தக்க வைக்கும்!
*
ஈடுசெய்ய முடியாத
இழப்புகள் என்பது
வெறும் கண்துடைப்பு
தானோ?
*

'பாரதிக்கவி', வண்-வடமேற்கு, யாழ்ப்பாணம்.

# அன்று மேனகை இன்று மோனிகா





முற்றும் துறந்த முனிவர்
விசுவாமித்திரரை
மயக்கிய அழகி
மேனகை என்பது
புராணக்கதை!
உலகை முற்றும்
கலக்க நினைக்கும்
அமெரிக்காவின்
அதிபரை மயக்கிய
அழகி மோனிகா- இது
புதியகதை!
ஆனால் கிளின்ரன்
முற்றும்
துறந்தவருமல்ல.
விசுவாமித்திரரும்
அல்ல; விஷயமித்திரர்!
பல அழகிகளை இதம்-
பதம் அறிந்தவர்.

மோனிகா இளமை பொங்கும் அழகி. அவரது காந்தக் கண்கள் வீசிய கணையில் வீழ்ந்த கிளின்ரன் தன் அலுவலக அறையிலேயே பணியைக் கொடுத்து, தன் ஆசைக்குப் பணிய வைத்து, அலுவலகத்தையே கட்டிலறையாக மாற்றிய கதை சுவாரசியமானது.

முதலில் இந்த சமாச்சாரம் கசிந்தபோது பெருந்தன்மையுடன் உண்மையை ஒப்புக்கொள்ளாமல் அமெரிக்க மக்களையும், நீதித்துறையையும் ஏமாற்றிய கிளின்ரன், ஆதாரபூர்வமாக மாட்டிக் கொள்ளும் கடைசித் தருணத்தில் ஏதோ நீதிமான்போல உண்மையைக் கூறியது அப்பட்டமான நாடகம்.

ஒன்று மட்டும் உண்மை- கிளின்ரன் தீராத விளையாட்டுப் பிள்ளை. ஆதாரத்தை விண்டு வைத்ததால் அந்தப பிள்ளை கையும் களவுமாக மாட்டிக்கொண்டு முழிக்கிறது.



மயக்கும் மோகினியாக

## எல்லாம் நடக்கிறது

வீட்டுக்கு
வெளிச்சம் கேட்டோம்...!
வெளியேயும் வெளிச்சம்–
வீடு எரிவதால்!
***
அப்பாவிகளை
அழிக்கவேண்டாமென்றோம்!
அழிக்கவில்லை–
வல்லுறவிற்குட்படுத்தாமல்...!
***
புதைகுழிகளை
தோண்டச் சொன்னோம்..!
தோண்டுகிறார்கள்...!
எங்களையும் புதைக்க...!
***
அகதி முகாம் தேடுகிறோம்..!
வதை முகாம் வைக்கிறது–
தமிழ் பேசும் இராணுவம்!
***
கைது செய்ய வேண்டாமென்றோம்!
குற்றவாளிகளைக்
கைது செய்யவில்லை!
***

எஸ்.பிரபா.

## வருமா தாய்நாட்டுக் கவலை?

பச்சை அரிசியும் யாழ் மரக்கறியும்
கறுப்பு- வெள்ளைக் கொழும்பு மாம்பழங்களும்
சிலோன் நண்டும் சிங்க றாலும்
பனங்கள்ளும் லயன் பியரும்
தமிழ்க் கடையும் இந்துக் கோயில்களும்
தார் வீதியில் தேர்த் திருவிழாக்களும்
கிழமைக்கு மூன்று சினிமாப்படங்களும்
இந்திய சினிமா நட்சத்திர வருகையும்
இன்னிசை பொப்பிசை இசை நிகழ்ச்சிகளும்
இனிய தமிழ் உணவகங்களும்
தனித் தமிழ் வானொலி தொலைக்காட்சிகளும்
தாராளமாக இங்கே உள்ளபோது–
எனக்கு வருமா தாய்நாட்டுக் கவலை...?

மீரா-கென்ற், UK

## கிளறுங்கள்!

சுதந்திரம்,
அமைதி,
நிம்மதி,
எல்லாமே
காணாமற்
போயின...!
**
கண்டு
பிடிக்கப்
புறப்பட்ட
கருணையின்
தூதுவர்களே!
ஜனநாயகம்
புதையுண்டு போன,
எமது பூமியைக்
கிளறுங்கள்!
நீதியின் தேவதையை
நிறுத்தி வைப்போம்.
**

நெடுந்தீவு-மகேஷ்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(30.08.1998 தொடக்கம் 05.09.1998 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தனலாபம், செல்வச் செழிப்பு. | மு.ப. | 9 மணி |
| திங்கள்- மனக் கவலை, காரிய சித்தி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், வீண் அலைச்சல். | காலை | 7 மணி |
| புதன்- பிரயாணம், நண்பர்கள் விரோதம். | மு.ப. | 9 மணி |
| வியாழன்- பொருள் வரவு, குடும்ப மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- கௌரவம், நல்ல நண்பர் சந்திப்பு. | பி.ப. | 2 மணி |
| சனி- தேகசுகக் குறைவு, மனக் கவலை. | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மன நிம்மதி, காரிய சித்தி. | காலை | 8 மணி |
| திங்கள்- வீண் அலைச்சல், மனச் சோர்வு. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- நண்பர் உதவி, பண வரவு. | மு.ப. | 9 மணி |
| புதன்- முயற்சித் தடை, பெரியோர் சந்திப்பு. | மு.ப. | 10.30 மணி |
| வியாழன்- பொருள் வரவு, வீண் அலைச்சல். | பகல் | 11.20 மணி |
| வெள்ளி- தனலாபம், கீர்த்தி. | காலை | 7 மணி |
| சனி- யோசனை, மனக் குழப்பம். | காலை | 8.30 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- சுப காரியம், அலைச்சல். | மு.ப. | 9 மணி |
| திங்கள்- மனக் கவலை, அலைச்சல். | மாலை | 4 மணி |
| செவ்வாய்- முயற்சி, தெய்வானுகூலம். | மு.ப. | 10.30 மணி |
| புதன்- திரவியலாபம், அதிக அலைச்சல். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, குடும்ப ஒற்றுமை. | மாலை | 4 மணி |
| வெள்ளி- பொருள் விரயம், மனக் கவலை. | காலை | 6.30 மணி |
| சனி- பிரயாணம், பொருள் வரவு. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-02

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் முன்னேற்றம், அலைச்சல். | காலை | 7 மணி |
| திங்கள்- வெளியூர் பிரயாணம், முன்னேற்றம். | மு.ப. | 9 மணி |
| செவ்வாய்- உடல் நலக்குறைவு, பொருள் நஷ்டம். | காலை | 8 மணி |
| புதன்- குடும்ப சந்தோஷம், பண வரவு. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- காரிய சித்தி, பெரியோர் உதவி. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- மனச் சஞ்சலம், தூரதேச பிரயாணம். | காலை | 7.30 மணி |
| சனி- காரிய தாமதம், தெய்வ வழிபாடு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனப்பயம், உடல் சோர்வு. | மாலை | 7 மணி |
| திங்கள்- பெரும் செலவு, மனக் கவலை. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, தேகசுகம். | காலை | 8 மணி |
| புதன்- இலாபம், தொழில் முன்னேற்றம். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- திரவிய லாபம், மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- பெரும் நஷ்டம், மனக் கவலை. | காலை | 6 மணி |
| சனி- முயற்சி பலிதம், பொருள் லாபம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், இராகு. |
| கடகம் | - செவ்வாய், சுக்கிரன், புதன். |
| மீனம் | - குரு. |
| மேடம் | - சனி. |

சந்திரன்- சிம்மம், கன்னி, துலாம், ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனச் சோர்வு, மனக் குழப்பம். | மு.ப. | 9 மணி |
| திங்கள்- பொருள் வரவு, இனசன விரோதம். | பி.ப. | 3 மணி |
| செவ்வாய்- கடும் முயற்சி, அவமானம். | காலை | 7 மணி |
| புதன்- பெரியோர் சந்திப்பு, தனலாபம். | காலை | 6 மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, குடும்ப ஒற்றுமை. | மாலை | 7 மணி |
| வெள்ளி- கௌரவம், பதவி உயர்வு. | பி.ப. | 2 மணி |
| சனி- காரியத் தடை, அலைச்சல். | மு.ப. | 9 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனப்பயம், உடல் சோர்வு. | காலை | 6 மணி |
| திங்கள்- பொருள் வரவு, தேகசுகம். | மாலை | 6 மணி |
| செவ்வாய்- பொன் சேர்க்கை, மன மகிழ்ச்சி. | மாலை | 5 மணி |
| புதன்- பெரியோர் சந்திப்பு, கௌரவம். | மு.ப. | 9 மணி |
| வியாழன்- சுப செய்தி, காரியம் கைகூடல். | காலை | 6 மணி |
| வெள்ளி- இனசன ஒற்றுமை, மன ஊக்கம். | மு.ப. | 10 மணி |
| சனி- பொருள் நஷ்டம், கௌரவம் பாதிப்பு. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனச் சஞ்சலம், பொருள் நஷ்டம். | மு.ப. | 10 மணி |
| திங்கள்- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- காரிய தாமதம், குடும்பத் தகராறு. | காலை | 8 மணி |
| புதன்- பொருள் வரவு, மகிழ்ச்சி. | மாலை | 5 மணி |
| வியாழன்- உடல் நலக்குறைவு, வீண் அலைச்சல். | மு.ப. | 9 மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, லக்ஷ்மி கடாட்சம். | காலை | 8 மணி |
| சனி- பிரயாணம், குடும்ப ஒற்றுமை. | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தேகசுகம், சஞ்சலம். | மாலை | 7 மணி |
| திங்கள்- மனக் கவலை, பொருள் வரவு. | காலை | 6 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| புதன்- சுபகாரியம், சிந்தனை. | மு.ப. | 9 மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, வெற்றி. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், தர்ம கைங்கரியம். | பகல் | 12 மணி |
| சனி- பிரயாணம், சுபபோகம். | காலை | 8 மணி |

அதிஷ்டநாள்-ஞாயிறு, அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, சந்தோஷம். | மு.ப. | 9 மணி |
| திங்கள்- காரிய வெற்றி, பொருள் வரவு. | பி.ப. | 3 மணி |
| செவ்வாய்- வீண் விரயம், காரிய சித்தி. | காலை | 8 மணி |
| புதன்- பிரயாணம், சுபசெய்தி. | மு.ப. | 9 மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | காலை | 7 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| சனி- காரிய தாமதம், மனக் கவலை. | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனப் பயம், வீண் அலைச்சல். | மு.ப. | 10 மணி |
| திங்கள்- தொழில் முன்னேற்றம், பெரியோர் உதவி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- முன்னேற்றம், மனப் பயம். | காலை | 6 மணி |
| புதன்- சஞ்சலம், வீண் விரயம். | மு.ப. | 9 மணி |
| வியாழன்- அந்நியர் பயம், காரியத் தாமதம். | மாலை | 5 மணி |
| வெள்ளி- குடும்ப ஒற்றுமை, தொழில் முன்னேற்றம். | காலை | 7 மணி |
| சனி- தூரதேச பிரயாணம், மன மகிழ்ச்சி. | மாலை | 5 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மனச் சஞ்சலம். | காலை | 7 மணி |
| திங்கள்- பெரும் நஷ்டம், பிரயாணத் தடை. | காலை | 6 மணி |
| செவ்வாய்- மன நிம்மதி, பொருள் வரவு. | மு.ப. | 9 மணி |
| புதன்- பிரயாணம், காரியானுகூலம். | காலை | 7 மணி |
| வியாழன்- தெய்வ வழிபாடு, காரிய சித்தி. | மு.ப. | 9 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, உடல் நலக்குறைவு. | பகல் | 12 மணி |
| சனி- தனலாபம், காரிய சித்தி. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6



படிப்பகம்

www.padippakam.com

## திடீர் விருந்தாளிகளை உபசரிக்க!

**தி**டீரென்று உங்கள் வீட்டிற்கு விருந்தினர் வந்து விட்டார்களா? அந்த நேரத்தில் நீங்கள் பிஸியா? வந்த விருந்தினரை எப்படி உபசரிப்பது?

* விருந்தினர்களின் உடல்நலத்தையும், அவர்களது குடும்பத்தில் நடந்த நல்லது



கெட்டதுகளையும் விசாரிக்க மறந்து விடாதீர்கள்.

* விருந்தினர்களை அருகில் வைத்துக் கொண்டு புத்தகம் படிக்கவோ, ரீ.வி. பார்க்கவோ செய்யாதீர்கள்.
* உங்களது கணவரைப் பற்றியோ குழந்தைகளைப் பற்றியோ புகழ்ந்து பேசி, வந்த விருந்தாளிகளைப் போரடிக்காதீர்கள்.
* விருந்தினர்களை வரவேற்பறையில் வைத்து உரையாடுங்கள். அவர்கள் விரும்பினால் சமையலறைக்குக் கூட்டிச் செல்லுங்கள். அங்கு உரையாடலைத் தொடருங்கள். விருந்தினர்களின் உடை உங்களுக்குப் பிடிக்காவிட்டாலும் அதைப்பற்றி விமர்சிக்காதீர்கள்.
* ஒரு விருந்தினர் வந்திருக்கும் போதே மற்றொரு விருந்தினரும் உங்கள் வீட்டிற்கு வந்துவிட்டால் ஒருவரை மற்றொருவருக்கு அறிமுகம் செய்து வைக்க மறக்காதீர்கள்.
* ஒரு விருந்தினரை வைத்துக்கொண்டு மற்ற விருந்தினரிடம் பேசிக்கொண்டிருக்காதீர்கள். இருவருக்கும் பொதுவான விஷயங்களைப் பேசுங்கள்.
* சிலர் நாம் கூப்பிட்டு வந்திருப்பர். சிலர் அழையாத விருந்தினராக வந்திருப்பர். எப்படி வந்தாலும் அவர்களை நல்லபடியாக உபசரிக்க வேண்டும்.
* விருந்தினர்களிடம் நீங்கள் ஏதாவது தவறுதலாக நடந்திருந்தால் அதற்காக மன்னிப்புக் கேட்டுவிடுங்கள். விருந்தினர்கள் அவர்களது வீட்டிற்குப் போகும்போது நன்றி கூறுங்கள். வாசல்வரை சென்று வழியனுப்புங்கள். மேலும் அடிக்கடி வீட்டுக்கு வந்து செல்லும்படி கேட்டுக் கொள்ளுங்கள்.

## தங்கமாலை பெற்ற அதிஷ்டசாலி இவர்தான்

அருள் ஜுவலர்ஸ், முரசு இணைந்து வழங்கிய தங்கமாலை பரிசுப்போட்டியில் தங்கமாலை வென்ற அதிஷ்டசாலி இவர்தான். பரிசை வழங்குகிறார் அருள் ஜுவலர்ஸ் உரிமையாளர் திரு.எம்.கணேசன். அதிஷ்டசாலியின் பெயர்: **எஸ். சசிகலா, கரீம் கார்டன். நுவரெலியா.**



# கண்ணீரில் கரைந்த இரவுகள்

50 புவனா

**கா**லை ஏழு மணிக்கு டயானாவின் அன்றாடப் பணிகள் ஆரம்பமாகிவிடும். அரச குடும்ப ஆண்களும், பெண்களும் நேரகாலத்துடன் எழமாட்டார்கள்.

டயானா அதற்கும் விதிவிலக்காகவே இருந்தார். காலையில் எழுந்ததும் செல்சியாத் துறைமுக கிளப்புக்குச் செல்வார்.

'உடற்பயிற்சி செய்வது உள்ளத்துக்கும் அமைதியைத் தருகிறது. உடலையும் அழகாக வைத்திருக்க முடிகிறது. உடற்பயிற்சி செய்யும்போது என் கவலைகள் எல்லாம் வியர்வைபோல வெளியேறிவிடுகிறது' என்று கூறுவார் டயானா.

காலை 9 மணியளவில் தனது சிகையலங்கார நிபுணர் சாம் மக்னைட்டைச் சந்திப்பார்.

சாம் மக்னைட் சிகையலங்கார நிபுணராக மட்டுமல்லாமல், டயானாவின் நல்ல நண்பராகவும் விளங்கினார்.

அவரது கலகலப்பான சுபாவம்



டயானாவுக்கு உற்சாக மூட்டும். டயானாவின் மனப்பாரம் இலேசானதாகப் போலிருக்கும்.

சில சமயங்களில் உற்சாகத்தில் சாம் மக்னைட்டைக் கட்டிக் கொண்டு மென்மையாக முத்தமிடுவார் டயானா.

டயானா கவலையாக இருக்கும் சந்தர்ப்பங்களில் சாம் மிக இதமாக அவரது தலையை பிடித்துவிடுவார். தலைக்கு மசாஜ் செய்துவிடுவார்.

டயானாவுக்கும் அவரது சிகையலங்கார நிபுணருக்கும் இடையே முடிச்சுப் போடும் விதமான கதைகள் அரண்மனை வட்டாரத்தில் பரவியிருந்தன.

அது டயானாவுக்கும் தெரிந்தே இருந்தது. அதன்பின்னர் முன்னரைவிட அதிகமாக தன் சிகையலங்கார நிபுணருடன் பலரும் காணக் கூடியதாகச் சிரித்துப்பேசுவார்.

தன்மீது அரச குடும்ப பெண்கள் சிலருக்கு விரோதம் ஏற்பட பொறாமையே காரணம் என்பது டயானாவுக்கு தெரியும்.

அவர்கள் பொறாமைப்பட்டு ஒவ்வொரு கதை கட்டும் போதெல்லாம் அந்தப் பொறாமையை மேலும் கிளறிவிட்டு வேடிக்கை பார்க்க விரும்புவார் டயானா.

### நோட்டம் பார்த்தனர்

கென்சிங்டன் மாளிகையில் டயானா தனியாக வாழத்தொடங்கிய பின்னர் அரச குடும்ப பெண்களுக்கும் அவருக்கும் இடையேயான தொடர்புகள் குறைந்துவிட்டன.

ஆனாலும் டயானாவையும் சிகையலங்கார நிபுணரையும் நோட்டம் பார்க்க சிலரை நியமித்திருந்தது அரச குடும்பம். டயானாவின் பாதுகாப்பு அதிகாரிகள் மத்தியிலேயே அவர்கள் இருந்தனர்.

பாதுகாப்பு அதிகாரிகள் என்ற போர்வையில் உளவாளிகள் இருக்கலாம் என்பதை டயானாவும் அறியாமலில்லை.

பாதுகாப்பு அதிகாரிகள் சிலர் அரச குடும்ப விசுவாசிகள் என்றால், ஏனையோர் டயானாவின் அபிமானிகள்.

அந்த அபிமானிகள் மூலம் முழுத்தகவலையும் டயானா கறந்துகொள்வார்.

யார் யார் உளவாளிகள் என்று தெரிந்து போனதால், அவர்களை ஏமாற்றும் விதமாகவும், தவறான தகவல்களை அரச குடும்பத்தின் காதுக்கு அனுப்பும் விதமாகவும் நடந்துகொள்வதும் டயானாவின் பொழுது போக்குகளில் ஒன்றானது.

அவர்கள் காதுபடத்தக்கதாக தன் சிநேகிதிகளிடம் போனில் பேசுவார். அப் பேச்சில் தவறான தகவல்களை அள்ளிக் கொட்டுவார்.

"நேற்று கில்பியைச் சந்தித்தேன். எப்படி ஒரு ஆனந்தமாக இருந்தது தெரியுமா? எனக்கென்றும் கிடைத்தாரே ஒருவர் இளவரசர் என்று பெயர்தான் ம்ஹும்.."! என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பார்.

உடனடியாகவே தகவல் அரச குடும்பத்திற்கு எட்டிவிடும். அவர்கள் முகங்கள் எப்படி மாறும் தன்னை எப்படியெல்லாம் திட்டித் தீர்ப்பார்கள் என்பதை கற்பனை செய்து பார்த்துக்கொள்வார்.



## பந்தாடிய உணர்ச்சிகள்

தினமும்காலை வேளையில் தனது சிநேகிதிகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

தனது பணிகளை நேர ஒழுங்கு தவறாமல் செய்யப் பழகியிருந்தார். காலையில் குறிப்பிட்ட நேரத்தில் தங்கள் வீட்டுப் ;போன் ஒலித்தால் அது டயானாதான் என்று சிநேகிதிகளுக்கு தெரிந்துவிடும்.

மதிய உணவை மாளிகையில் அருந்துவதை விட, தன் சிநேகிதிகளுடன் வெளியே சென்று கதைத்துச் சிரித்தபடி விடுதிகளில் அமர்ந்து அருந்துவதே டயானாவுக்கு பிடிக்கும்.

### பிரிவுச் சோகம்

பிள்ளைகள் இருவரதும் விடுமுறை நாட்களில் மாதத்தில் இரண்டுவார இறுதி நாட்களில்தான் டயானாவுடன் தங்கலாம் என்பது முன்னரே செய்த முடிவு.

அந்த முடிவுக்கு உடன்பட மறுத்தால் சாள்ஸைவிட்டு பிரிந்து வாழ அனுமதி கிடைக்குமா என்பது சந்தேகமாக இருந்தது. அதனால்தான் வேறுவழியின்றி அந்த நிபந்தனைக்கு உடன்பட்டிருந்தார் டயானா.



1993 கிறிஸ்மஸ் தினத்தன்று பிள்ளைகள் தன்னுடன் இருக்க வேண்டும் என்பது டயானாவின் ஆசை.

கமீலாவுடன் உல்லாசமாக எங்கோ போயிருந்த சாள்ஸ், கிறிஸ்மஸ் தினத்தன்று இலண்டன் திரும்பிவிட்டார்.

கிறிஸ்மஸ்தினம் வில்லியமும், ஹரியும் தந்தையுடன் இருக்க வேண்டிய வார இறுதிநாளில் வந்துவிட்டது. அதனால் அவர்களால தாயாருடன் அன்றைய தினத்தை கழிக்க முடியவில்லை.

நிபந்தனையைமீறி நடந்துகொள்ள விரும்பாத டயானா பிள்ளைகளை தந்தையிடம் அனுப்பிவிட்டார்.

பிள்ளைகள் இல்லாத கிறிஸ்மஸ் வெறுமையாக இருந்தது. கென்சிங்டன் மாளிகையில் இருக்கவே பிடிக்கவில்லை.

தன் அறையில் கிடந்து பொங்கிய சோகம்தீர அழுதுமுடித்தார். உடனடியாக அமெரிக்க வோஷிங்டனுக்கு விமானம் ஏறினார்.

விமானப் பயணத்திலகூட டயானா அழுத வண்ணமே இருந்தார். தன் அழுகையை கட்டுப்படுத்த அவர் பலத்த முயற்சி செய்தபோதும் கட்டுப்படுத்த முடியாதவராக இருந்தார்.

தங்கள் குழந்தைகளுடன் மகிழ்ச்சி பொங்க பயணம் செய்யும் பெற்றோர்களை பார்க்கையில், வில்லியமும், ஹரியும் அவரது மனக்கண் முன்பாக தோன்றினர்.

அரண்மனைக்குள் குதூகலம் இல்லாத சூழ்நிலையில் அப்பிள்ளைகள் இன்றைய தினத்தைக் கழிக்கிறார்களே என்பதை நினைக்க அவருக்கு அழுகை பொங்கியது.

வோஷிங்டனில் லூசியா ;பிலேச்சா என்னும் நெருங்கிய சிநேகிதி இருந்தார். முன்பு பிரேசில் நாட்டு தூதராக கடமையாற்றியவரின் மனைவி அவர்.

லூசியா வீட்டில் மகிழ்ச்சியாக இருப்பதுபோல காட்டிக்கொள்ள முயன்றார் டயனா. ஆனாலும் லூசியா கண்டுபிடித்துவிட்டார்.

"மன அழுத்தங்களை எங்காவது கொட்டித்தீர்த்துவிடு. உள்ளே வைத்துக் கொண்டு இருக்காதே. பைத்தியமாக்கிவிடும்" என்று எச்சரித்தார் லூசியா.

தன் கவலைகளை லூசியாவிடம் இறக்கி வைத்துவிட்டு இலண்டன் திரும்பினார்.

தங்கக் கோப்பையில் சிக்கிக்கொண்ட மீன்போலாகிவிட்டார்! என்று டயானாவின் ஆலோசகர் ஒருவர் குறிப்பிட்டார்.

### உளவியல் ஆலோசனை

வாரத்தில் இரண்டு நாட்கள் உளவியல் நிபுணரை பார்த்து ஆலோசனை பெறத் தவறுவதில்லை.

அவரது மனநிலையில் அடிக்கடி உளவியல் நிபுணரின் உதவி தேவைப்பட்டது.

தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்காக அவர் கடுமையாக போராடவேண்டி இருந்தது.

இளமையின் தாபம் ஒருபுறம், தாய்மையின் தவிப்பு மறுபுறம், தன்னை புரிந்துகொள்ளக் கூடிய எவருமே இல்லையே என்ற ஆதங்கம் இன்னோர் புறம் என்று பலவிதமான உணர்ச்சிகளால் பந்தாடப்பட்டார்.

அதனால்தான் சாள்ஸின் பின்னரும் வேறு சில ஆண்களால் ஏமாற்றப்பட்டார்.

1993ல் ஒரு நாள் டயானாவுக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

மறுமுனையில் பரிச்சயமில்லாத ஓர் ஆண் குரல் பேசத் தொடங்கியது. (அடுத்த வாரமும் வரும்)


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** EH

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05-09-1998**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? ஓட்டமாவடி வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | றைஹானா சனூஸ், K.P. ஹாஜி ரோட், ஓட்டமாவடி-1. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு– அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 16

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.

❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.

❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்





நாளைக் கண்டதோர் மலர்போல்–ஒளி
நண்ணித் திகழுமுகம் தந்து–மத
வேளை வெல்லுமுறை கூறித்–தவ
மேன்மை கொடுத்தருளல் வேண்டும்!
–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

**ஒரு** வீட்டில் பூனை ஒன்று வசித்து வந்தது. அது மிகவும் சோம்பேறி. அது ஓடித்திரிந்து தனது இரையைத் தேடிச் செல்லாமல், இரை தன்னிடம் வர வேண்டும் என்று நினைத்தது.

அதற்காக ஒரு தந்திரமும் செய்தது. பூனை இருந்த வீட்டில் ஒரு பெரிய பெட்டி நிறைய கோதுமை மாவு இருந்தது. பூனை அந்தக் கோதுமை மாவில் விழுந்து நன்றாகப் புரண்டு எழுந்தது. அதன் உடம்பெல்லாம் மாவு ஒட்டிக் கொண்டது.

பூனையின் நிறமும் வெள்ளையாகி விட்டது. வெள்ளை நிறத்துடன் இருந்த பூனையைப் பார்க்க, ஒரு விசித்திரமான பிராணி போல தோற்றமளித்தது. பூனை நேராக அவ்வீட்டின் கோழிக் கூட்டின் அருகே சென்றது.

அங்கே நின்ற கோழிகளிடம்,

"கோழிகளே! நான் இந்த வீட்டிற்குப் புதிதாக வந்திருப்பவன். நான் மிகவும் பொல்லாத பிராணி. நான் இனிமேல் இங்கேதான் இருப்பேன். எனது இருப்பிடத்திற்கு தினமும் ஒரு கோழிக் குஞ்சை எனக்கு விருந்தாக அனுப்ப வேண்டும்.

அப்படி அனுப்பாவிட்டால், நானே இங்கே வந்து ஒரே நேரத்தில் உங்களை எல்லாம் அழித்து விடுவேன்!" என்று மிரட்டியது. பூனையின் மிரட்டலுக்குப் பயந்த கோழிகள் அதற்குச் சம்மதித்தன.

மறுநாளில் இருந்து பூனையின் இருப்பிடத்திற்கு ஒவ்வொரு கோழிக்குஞ்சு தினமும் பூனைக்கு விருந்தாகியது. பூனைக்கும் இருந்த இடத்திலேயே உணவும் கிடைத்தது. இப்படியே ஒரு வாரம் சென்றுவிட்டது.

ஒருநாள் சரியான மழை பெய்து கொண்டிருந்தது. பூனைக்கு அனுப்பும் கோழிக் குஞ்சை, 'மழை விட்ட பின்னர் அனுப்பலாம்' என்று கோழிகள் நினைத்தன. ஆனால் மழை விட்டபாடில்லை.

பூனைக்குப் பசி தாங்க முடியவில்லை. பசியோடிருந்த பூனைக்குச் சரியான கோபம் வந்தது. 'அந்தக் கோழிகளை என்ன செய்கிறேன் பார்' என்ற தோரணையில் கோபத்துடன் கோழிகளின் இருப்பிடத்திற்குச் சென்றது பூனை.

தான் மழையில் நனைந்தால் கோதுமை மாவு கழுவப்பட்டு விடும் என்பதை பூனை சற்றும் யோசிக்கவில்லை. கோழிகளின் இருப்பிடத்திற்குச் செல்வதற்குள் பூனை நன்றாக நனைந்துவிட, கோதுமை மாவு முழுக்கக் கழுவப்பட்டுவிட்டது.

"கோழிகளைப் பார்த்து எங்கே எனது உணவு? ஏன் இவ்வளவு தாமதம்? இதற்காக இன்று எனக்கு இரண்டு கோழிக்குஞ்சுகள் தர வேண்டும்!" என்று மிரட்டியது.

இவ்வளவு நாளும் போலி வேடத்தில் தம்மை ஏமாற்றி வந்தது பூனை என்பது அப்போதுதான் கோழிகள் எல்லாவற்றுக்கும் புரிந்தது.

கோழிகளுக்கு பூனைமேல் பயங்கரமாகக் கோபம் வந்தது. எல்லாக் கோழிகளும் ஓடி வந்து, பூனையைச் சுற்றி வளைத்து கண்மூடித்தனமாக அதைக் கொத்திக் காயப்படுத்தின. கோழிகள் கோபத்தோடு பூனையைக் கொத்திக் குதறியதால் அதன் உடம்பு புண்ணாகி, கண்கள் இரண்டையும் இழந்தது.

### போலி வேஷம்



வாழ்க்கையில் ஒளிவு மறைவு இருக்கக் கூடாது. இயல்புக்கு மாறான போலி வேஷமும் போலி நடவடிக்கையும் நீண்ட காலம் நிலைக்காது. வேஷம் கலைந்து, சுயரூபம் வெளிப்பட்டு அதை மற்றவர்கள் புரிந்து கொண்டால் பூனையின் நிலைதான் நமக்கும் ஏற்படும்.

## அதிசயம் – ஆனால் உண்மை!

### நிழல் பறவைகள்:

இப்பறவைகள் 3 அறைகள் கொண்ட கூட்டைக் கட்டும். முதலாவது அறையில் எதிரிகள் வராமல் ஆண்பறவை காவல் நிற்கும். இரண்டாவது அறையில் உணவுகள் இருக்கும். மூன்றாவது அறையில் குஞ்சுகளை வளர்க்கும்.





### பழமையான புத்தகம்:

ஸ்பெயின் நாட்டின் கிரானடாவில் உள்ள அரண்மனைத் தேவாலயத்தில் ஒரு பிரார்த்தனைப் புத்தகம் உள்ளது. இது 462 ஆண்டுகளுக்கு முன் இறந்த இஸபெல்லா அரசிக்குச் சொந்தமானது.



### தங்கக் கத்திகள்:

பண்டைய எகிப்தில் செல்வச் சீமான்கள் பயன்படுத்திய மேசைக் கத்திகள் தங்கத்தினாலானவை. இவை நாற்புறமும் கூரானவை.



### ஆப்ஸிடியன் மகுடம்:

பண்டைய ரோமாபுரியில் எதிரிப் படையை வெற்றிகொண்டு, அந்நாட்டின் கோட்டையைக் கைப்பற்றும் தளபதிக்கு இந்த மகுடம் அணிவிப்பார்கள். இந்த மகுடம் வெற்றிகொண்ட கோட்டையில் உள்ள புல்லைக் கொண்டு செய்யப்படும்.

## வாரம் ஒரு நாடு

### சஹ்ராவி அரபுக் குடியரசு

தலைநகர் – எல்-அலயூன்
பரப்பு – 2,56,769 சதுர கிலோமீட்டர்
மக்கள் தொகை – 21.4 இலட்சம்
மொழி – அரபி
சமயம் – இஸ்லாம்.

**அமைவிடம்:**

அத்லாந்திக் பெருங்கடலை மேற்கிலும் மொராக்கோவை வடக்கிலும் மௌருத்தானியாவை கிழக்கிலும் தெற்கிலும் எல்லைகளாகக் கொண்ட இந்நாடு, சஹாரா பாலைவனத்தின் மேற்கு முனையில் உள்ளது.

**வரலாறு:**

ஆரம்பத்தில் ஸ்பெயினின் ஆதிக்கத்திற்கும் பின்பு மொராக்கோவின் ஆதிக்கத்திற்கும் உட்பட்டிருந்தது. மேற்கு சஹ்ராவில் உள்ள கெரில்லா அமைப்பு சஹ்ராவி அரபுக் குடியரசை அமைத்தது.



1990ல் மொராக்கோவிற்கும் கெரில்லா அமைப்புக்குமிடையே ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப் பட்டது. ஆபிரிக்க ஒற்றுமை அமைப்பு சஹ்ராவியை தனிநாடாக அமைக்க அங்கீகரித்தது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.09.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 260
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 258

**பரிசுக்குரியவர்:**
செல்வி சாந்தப்பிரியா கோபாலசிங்கம்,
விபுலாநந்தா மத்திய கல்லூரி, காரைதீவு–10.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| சுஜீகரன் விஜயகுமார், சென் ஜோன் பொஸ்கோ, ஹட்டன். | செல்வி நிருத்திகா சிவலோகநாதன், விகாரமகாதேவி மகளிர் வித்தியாலயம், கண்டி. |
| எம்.டி. ஸவ்பீக், பு/எருக்கலம்பிட்டி மு.ம.வி., பாலாவி. | நிஷாந்தினி ரட்ணம், இ/தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. |
| செல்வி மிருனா மைக்கல், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். | செல்வி வாரிதா மீரா முகைதீன், மட்/மீரா பாலிகா மகா வித்., காத்தான்குடி. |
| எம்.என். பாத்திமா சப்னா, அல்-ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | றஸ்ஸாக் பர்ஸான், பது/அல்-இர்ஷாத் மகா வித்., ஹாலி-எல. |
| சிவஞானம் ஆதித்தன், எருவில் வடக்கு, களுவாஞ்சிக்குடி. | கருப்பையா ஸ்ரீதரன், டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரி, கொழும்பு-07. |


## எவரெஸ்ட் சாதனை




**எ**வரெஸ்ட் சிகரத்தில் முதன் முதலில் ஏறிச் சாதனை படைத்தவர்கள் எட்மண்ட் ஹிலரியும், டென்சிங் நோர்கேயும் என்பதை அறிந்திருப்பீர்கள். இதைப் பற்றிய மேலும் சில தகவல்கள் இதோ:

* எவரெஸ்ட் சிகரத்தின் உயரம்-29,028 அடி.
* ஹிலரியும், டென்சிங்கும் எவரெஸ்ட் சிகரத்தை 1953மே 29ம் திகதி முற்பகல் 11.30க்கு தொட்டார்கள்.
* எவரெஸ்ட் சிகரத்திற்கு ஏறும் முயற்சிக்கு ஏற்பாடு செய்த நாடு-பிரிட்டன்.
* ஹிலரி-நியூஸிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். டென்சிங் நேபாளம் நாட்டைச் சேர்ந்தவர்.
* டென்சிங் முதலாவதாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியபோது அவரது வயது-39. அதன் பின் 6 தடவைகள் இவர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியுள்ளார்.
* டென்சிங் 'TIGERS OF THE SNOWS' (பனிப்புலி) என்ற பெயரில் தனது சுயசரிதையை எழுதியுள்ளார்.

## கடிகாரப் பூக்கள்



பல பூக்கள் சரியான நேரத்தைக் காட்டுவது போல் பூக்கின்றன.

இவற்றில் 'மோர்னிங் குளோரி' என்ற பூ தினமும் மிகத் துல்லியமான நேரத்தில் பூக்கின்றது. இது தினமும் காலையில் சரியாக 6 மணிக்குப் பூக்கும்.



'டெய்ஸி பூக்கள்' தினமும் காலை 9 மணிக்கு பூக்கின்றன.




'துலிப் பூக்கள்' நண்பகல் 11 மணிக்குச் சற்று முன்னதாகப் பூக்கின்றன.

## பறக்கும் நரிகள்

**உ**லகிலுள்ள வௌவால் இனங்களில் மிகவும் பெரியவை 'கலாங்க்' எனப்படும் பழந்தின்னி வௌவால்கள். இவை இந்தோனேசியாத்தீவுகளில் வசிக்கின்றன.

குட்டி போட்டு பாலூட்டும்-பறக்கும் உயிரினங்களில் உருவில் மிகப் பெரியவை 'கலாங்க்'தான். இதன் சிறகுகளை விரித்தால் ஒரு பக்கத்தில் இருந்து இன்னொரு பக்கம் வரையான நீளம் 5 அடி. இதன் உயரம் 1 1/4 அடி. நிறை கிட்டத்தட்ட ஒரு கிலோ.



13 அடிக்கு அப்பால் ஒரு குண்டு மணி அளவு பழத்துண்டு கிடந்தாலும் அதன் வாசனையை அறிந்து கொள்ளும் ஆற்றல் கொண்டது இந்த 'கலாங்க்'.

இதன் முகம் நரியைப் போன்று இருப்பதால், இவை 'பறக்கும் நரிகள்' என்று செல்லமாக அழைக்கப்படுகின்றன.

## ஏன் தெரியுமா?

**கோ**டை காலத்தில் வியர்வை அதிகமாக வருகிறது. ஆனால் குளிர் காலத்தில் வியர்வை அதிகம் வருவதில்லையே! இது ஏன் என்று தெரியுமா?



காரணம் இதுதான்:

கோடை காலத்தில் தோலில் உள்ள இரத்தக் குழாய்கள் விரிவடைந்து நன்கு செயற்படுவதால் அதிக இரத்தம் அதன் வழியே செல்கிறது. அதனால் எளிதில் வியர்வைச் சுரப்பிகள் வியர்வையை இரத்தத்தில் இருந்து பிரித்தெடுத்து மேல் தோலுக்கு அனுப்புகின்றன.

குளிர் காலத்தில் தோலுக்குச் செல்லும் இரத்தக் குழாய்கள் வெளிக்காற்றின் குளிர்ச்சியினால் சுருங்கி விடுகின்றன. அதனால் அங்கு செல்லும் இரத்தத்தின் அளவு குறைகிறது. அதனால் வியர்வையின் அளவும் குறைகிறது.

## நிறங்கள்

**சி**லநாடுகளின் அரசாங்க அலுவலக வெளியீடுகளின் நிறங்கள் இவை.

| | | |
|---|---|---|
| ஜேர்மனி | - வெள்ளைப் புத்தகம் | (White Book) |
| பிரான்ஸ் | - மஞ்சள் புத்தகம் | (Yellow Book) |
| போர்த்துக்கல் | - வெள்ளைப் புத்தகம் | (White Book) |
| ஜப்பான் | - சாம்பல் நிற புத்தகம் | (Grey Book) |
| சீனா | - வெள்ளைப் புத்தகம் | (White Book) |
| இத்தாலி | - பச்சைப் புத்தகம் | (Green Book) |
| இங்கிலாந்து | - நீலப் புத்தகம் | (Blue Book) |
| பெல்ஜியம் | - சாம்பல் நிறப் புத்தகம் | (Grey Book) |
| நெதர்லாந்து | - செம்மஞ்சள் புத்தகம் | (Orange Book) |



www.padippakam.com
படிப்பகம்

# பயன் இல்லாத மாநாடு
## புறக்கணித்தனரா ஆசிரியர்கள்?

(கண்டி நிருபர்)

**க**ண்டி இந்து கலாசார நிலைய மண்டபத்தில் கடந்த 9ஆம் திகதி 'மலையகக் கல்வியும் புதிய கல்விச் சீர்திருத்தங்களும்' என்ற பொருளில் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கல்வி மாநாடு மூலம் மலையக ஆசிரியர்கள் உரிய பலனைப் பெற்றுக்கொண்டார்களா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

தோட்ட உட்கட்ட அமைச்சு அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த அருமையான கருத்தரங்கில் பல திடுக்கிடும் அதிசயபூர்வமான தகவல்கள், கலந்துகொண்ட-விரல்விட்டு எண்ணக்கூடியவர்களுக்கே எட்டியிருக்கும் என்பது பரவலாகப் பேசப்பட்ட கருத்து.

அமைச்சர் தொண்டமான் உட்பட எம்பிக்கள் சிலரும் பல்கலைக்கழக பேராசியர்களும் விரல்விட்டு எண்ணக்கூடிய அதிபர்களும், ஆசிரியர்களும் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டின் மூலம் கல்வியில் பின்தங்கி இருக்கும் மலையக தமிழ் ஆசிரியர்கள் வேண்டுமென்றே இந்த மாநாட்டைப் புறக்கணிக்க முற்பட்டார்களா, அன்றி இதனை ஏற்பாடு செய்தவர்கள் குறுகிய நோக்குடன் தாம் நல்ல பெயர் எடுக்க முற்பட்டார்களா? என்பது குறித்து மாநாட்டின் இறுதியில் கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கப்பட்டது.

இத்தனைக்கும் மலையகத்தில் 400க்கும் மேற்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றில் சுமார் நாலாயிரம் ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர். அவ்வாறு இருந்தும் இத் தொகை ஆசிரியர்களில் பலர் இந்த நல்லதோர் கருத்தரங்கைப் புறக்கணித்தது ஏன்? என்பதே கண்டியில் கேட்கப்படும் கேள்வியாகும்.

மத்திய மாகாண கல்வி அமைச்சோடு இணைந்து இந்த மாநாடு ஏற்பாடாகி இருந்தால், அதன் மூலம் பலர் பயனைப் பெற்றிருப்பார்கள் என்பது பரவலான கருத்து. என்றாலும் தேசியகல்வி ஆணைக்குழுவின் துணைத் தலைவர் கலாநிதி கே.டி. அருள் பிரகாசத்தின் உரையானது பலரின் சந்தேகங்களுக்கு நல்லதோர் விளக்கமாக இருந்ததையும் பலர் மனம் திறந்து பேசினர்.

# தனிச் சிங்களத்தில் விசாரணை
## ஆணைக்குழுத் தலைவர் உத்தரவு

**உ**ள்ளூராட்சி மன்றங்களுக்கான சீர்திருத்தங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கான ஆணைக்கு தனது நடவடிக்கைகளை தனிச் சிங்களத்தில் மட்டும் நடத்துவதற்கு முடிவு செய்தது. இவ்வாணைக்குழுவின் தலைவரான டாக்டர் எச்.ஏ.பி. அபேவர்த்தன, சகல விசாரணைகளும் சிங்களத்தில் மட்டும் இடம்பெறவேண்டும் என்று முதலாவது கூட்டத்திலேயே ஆணைபிறப்பித்தாராம்.

இச்சபையிலுள்ள ஒரேயொரு தமிழரான என். செல்வக்குமாரன், முதலாவது கூட்டத்திலிருந்து-மொழிபெயர்ப்புக்கான ஏற்பாடுகள் செய்யாமையைக் கண்டிக்குமுகமாக வெளிநடப்புச் செய்துவிட்டதாக அறியப்படுகிறது.

ஆணைக்குழுவின் ஆரம்பக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.வை. புஸ்ஸதெனியா அழைக்கப்பட்டிருந்தார். ஆங்கிலத்தில் உரையாற்றுவதற்கு அவர் எத்தனித்தபோது இடைமறித்த ஆணைக்குழுவின் தலைவர் டாக்டர் அபேவர்த்தன, அவரைத் தடுத்து சிங்களத்திலேயே உரையாற்றுமாறு கூறினாராம்.

ஆங்கிலத்தில் உரையாற்றினால் அனைவருக்கும் விளங்கும் என்று தெரிவித்தபோதும், சிங்களத்தில் பேசும்படி திரு. புஸ்ஸதெனியா வற்புறுத்தப்பட்டாராம். இதனால் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களும் அதிருப்தியடைந்தனராம்.

இவ்வாணைக்குழுவின் தலைவராக தொடக்கத்தில், உள்ளூராட்சி அணையாளராகவும் சம்பளம் மற்றும் ஊழியர்களுக்கான கமிட்டியின் தலைவராகவும் கடமையாற்றிய திரு ஆர்.அபேரத்தன என்பவரின் பெயர் சிபார்சு செய்யப்பட்டதாம். மிக உயர்ந்த பதவியிலிலுள்ள ஓர் அதிகாரியின் தலையீட்டினால் முன்னாள் கலாசார அமைச்சின் செயலாளராகவிருந்த டாக்டர் அபேவர்த்தன நியமிக்கப்பட்டதாகவும் ஆங்கில வார ஏடான 'தி ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

# நியமனம் தொடருமா?

**ச**மூக பொருளாதார அபிவிருத்திக்காக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் கிராமங்கள் தோறும் சுபீட்சத் திட்ட (சமுர்த்தி) ஊக்குவிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு வந்தமை தெரிந்ததே.

நாட்டின் சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் குறித்தொதுக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாகவும் இந்த நியமனங்கள் சூட்டோடு சூடாக வழங்கப்பட்டுவிட்டன.

ஆனால் வடக்கு கிழக்கிலும் ஏனைய சில தமிழ் பிரதேசங்களிலும் இன்னமும் சுபீட்சத் திட்ட ஊக்குவிப்பாளர்கள் நியமிக் கப்படாத பல பிரதேசங்கள் உள்ளன.

நடப்பு விவகாரங்களைக் கவனித்தால்-கிடைக்கும் தகவல்களின்படி இதுவரை சுபீட்சத் திட்ட ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்படாத பிரதேசங்களில் அந்த நியமனம் இனி நடைபெறாது என்றே தோன்றுவதாக தகவல் தரவல்ல அதிகாரியொருவர் தினமுரசுக்குச் சொன்னார்.

# தொடரும் சங்கடங்கள்

**தி**ருகோணமலை சோதனைச் சாவடிகளில் பெண்கள் அதிகம் 'சோதிக்கப்'படுகின்றனர். பாடசாலை செல்லும் மாணவிகளும் இளம் யுவதிகளுமே இவ்வாறான சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சிவன் கோவிலடி, உவர்மலை சந்தியில் உள்ள சோதனைச் சாவடியில் இவ்விடயத்தில் படுதீவிரமாக செயற்படுகின்றனர். பெண்கள் என்றதுமே அடையாள அட்டை பார்க்கப்பட்டு பல சங்கடமான கேள்விகளும் கேட்கப்படுகின்றன. இதனால் பெண்கள் வேதனை அடைகின்றனர்.

சாவடிகளில் கேட்கப்படும் சங்கடமான கேள்விகளுக்கு விடையளிக்காதவர்கள் அதிக நேரம் காக்க வைத்து பழிவாங்கப்படுகின்றனர். இந்நிலை எப்போதுதான் மாறுமோ தெரியவில்லை எனப் பலரும் புலம்புகின்றனர்.

க. ரமேஸ், திருகோணமலை.

# மலசல கூடத்தின் சீர்கேடு

**மீ**ன்பாடும் தேனாடாகப் புகழப்படும் மட்டக்களப்பில் அமைந்துள்ள அரச பேருந்து நிலையத்திற்கு கிழக்கில் இருந்தும், நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் நாளாந்தம் பல நூறு பிரயாணிகள் வருகின்றார்கள்.

இந் நிலையத்தில் அமைந்துள்ள பொது மலசல கூடத்தைத் தேடிப் போவோர் தொகையும் கூடுதலாகவே இருக்கிறது. ஆனால் அங்குள்ள பொது மலசல கூடத்தின் நிலை மக்கள் அருவருக்கத்தக்க வகையில் உள்ளது.

மலசல கூடத்தினைத் துப்பரவு செய்வதற்கு மட்டக்களப்பு பேருந்து நிலைய முகாமையாளரோ, மட்டக்களப்பு மாநகர சபை உயரதிகாரிகளோ இற்றை வரை நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. பொதுச் சுகாதார பரிசோதகர் மாநகர சபையில் இல்லையா? அல்லது மட்டக்களப்பு மாநகர மேயரின் கவனத்திற்கு இதுபற்றி அறியத்தரவில்லையா? என்று பிரயாணிகள் கேள்வி எழுப்புகின்றனர். இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா?

எஸ். அகிலன்-மட்டுநகர்.

விளம்பரப் பகுதி

# வைத்தியர் தட்டுப்பாடு

**மூ**தூர் அரச வைத்தியசாலையில் டி.எம்.ஒ., எல்.எம்.ஒ. போன்ற பிரதான டாக்டர்கள் இல்லை. உதவி டாக்டர்களில் இருவர் விடுப்பில் சென்றுவிட்டனர். ஒருவர் மட்டுமே கடமையிலிருந்து வருகிறார்.

இதனால் வெளிநோயாளர்கள், குறிப்பாக தூர இடங்களிலிருந்து வருபவர்கள் மிக அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர். யுத்தப் பிரதேசம் என்பதால் இங்கு கடமைக்கு வருவதற்கு வெளியிடங்களிலுள்ளவர்கள் விரும்பவில்லையெனத் தெரிகிறது.

மூதூர் நோயாளர்களின் கதி என்ன? மருத்துவ அமைச்சு கவனிக்குமா?

மிக்கேல்-மூதூர்-07.


## மனோதத்துவ வைத்தியம்

**வவுனியாவிலும் சந்திக்கலாம்**

பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை சந்திக்கும் இடங்கள்

**கொழும்பில் ஆகஸ்ட் 23முதல் 30 வரை**

BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P. 338165, 338166 - 072-609388
(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உம்பச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)

**கல்முனையில் செப்டம்பர் 5,6ம் திகதிகளில்**

T.M.M. பார்மசி-கல்முனை.

**வவுனியாவில் செப்டம்பர் 12,13ம் திகதிகளில்**

(வன்னி இன்) வவுனியா. T.P. 024-22074 Resident: T.P. 065-24019
கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.
No. 33, Tissa Weerasingam sq. Boundary Road, Batticaloa.

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

## ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218

## இலவசக்கருத்தரங்கு 1998

A/L பரீட்சை முடித்த மாணவர்கள் தம் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் இலவசக்கருத்தரங்கில் நீங்களும் கலந்து கொள்ளுங்கள்.

CEI, CIMA, ACCA, ICM, IAB, CIM, LAW COLLEGE, IMIS, IPFM, BBA, MBA, UNIVERSITIES, FOREIGN STUDIES தொடர்பாக பிரதி நிதிகள் ஆலோசனை வழங்க வருகை தருகின்றார்கள்.

இடம் : எஸ்.டீ.எஸ். ஜெயசிங்க மண்டபம், தெகிவளை.
காலம் : 1998 ஆகஸ்ட் 31ம் திகதி (திங்கட்கிழமை)
நேரம் : மு.ப. 10.00 முதல் பி.ப 01.00

குறிப்பு : இலவசக்கருத்தரங்கில் பங்கு பற்றி அன்றே IIS கணனி நிறுவனத்தின் கற்கை நெறிகளில் பதிவு செய்து கொள்பவர்களுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

**பெறுபேறுகளை எதிர்பார்த்துக் காலம் தாழ்த்தாமல் IIS இல் இணைந்து கணனித்துறையில் வல்லுனராகுங்கள்.**

A/L மாணவர்களுக்கென அமைக்கப்பட்ட விசேட பாடத்திட்டம்

**DIPLOMA IN COMPUTER STUDIES**
Information Technology, MS Dos, Windows 3.1 / 97 / 98, MS Word, Excel, Pascal, Programming Techniquies, Internet, E-mail, Project Work
Duration : 3 Months, Course Fee : 5500/-

**MICROSOFT OFFICE**
Information Technology, MS Dos, Windows 3.1 / 97 / 98, MS Word, Excel, Power Point, Access, Internet, E-mail, Project work
Duration : 3 Months, Course Fee : 6000/-

**HIGHER DIPLOMA IN COMPUTER STUDIES**
All Diploma Subjects, Visual Basic, Visual J++, System Analysis & Design
Duration : 6 Months, Course Fee : 11000/-

**IIS INSTITUTE OF INFORMATION SYSTEMS (PRIVATE) LIMITED**
379, 2nd Floor, Galle Road, Colombo-06. Tel : 074-517390, 077-319426
Your Gateway to Information Technology Highway

## மலையாள மாந்திரிகம்

மலையாள மாந்திரிகத்தில் எண்ணங்களை எண்ணிய வாறு மின்சார வேகத்தில் வெளிநாட்டிலும உள்நாட்டிலும் வெற்றிபெற்றவர்கள் எத்தனை எத்தனையோ. இனி உங்கள் குறை என்ன. கணவன் மனைவி பிணக்கா. காதல் தோல்வியா. பிரயாணத் தடையா. இன்னும் அனேக குறைகளுக்கு உங்கள் பிறப்பு திகதியுடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே ஏற்றுக் கொள்ளப்படும். தேவை எனில் உலக மாந்திரிக ஜோதிட சக்கரவர்த்தி.

P. K. Samy (J. D. G. A. N) J.P
162, Kotahena Street, May Feild Road, Clombo 13.
Tel: 342463, 344831, 431137
Fax: 0094 1 342464

## இலவச, சலுகை அடிப்படையில் Computer கல்வி பயில

DCS
DATA CONNECTION SYSTEMS (PRIVATE) LIMITED

**College of Computer Technology**
(British ACP Recognised Training Centre)

5வது முறையாக வழங்கப்படும்

1000 விசேட புலமைப்பரிசில் திட்டம் 1998/99

* DIPLOMA IN OFFICE MANAGEMENT
* DIPLOMA IN APPLICATION PROGRAMMING

மேலதிக விபரங்களுக்கு

**Branches**

**DCS**
No. 399 1/1 Galle Road, Colombo-4. TP :-589899

**DCS**
No. 124/2 Palaly Road, Thirunelvely, Jaffna.

**DCS**
No. 171,Trinco Road, Batticaloa. TP :-065-23990

**EDMS**
No. 156,Green Road, Trincomalee. TP- 026- 21805

**DCS**
M.P.C.S Sinhala Division, Station Rd, Vavuniya.

விண்ணப்ப முடிவு திகதி 05.09.1998

## மிகப் பெரிய அளவிலான ஜேர்மன்-தமிழ் அகராதி

50 ஆயிரத்திற்கும் அதிகமான ஜேர்மன் மொழிச் சொற்களுக்கான தமிழ் மொழிச் சொற்களுடன் இலக்கண விளக்கம் மற்றும் புதிய அணுகு முறையிலான சரியான உச்சரிப்பு விளக்கம்.

உங்கள் தேவைக்கு இன்றே பதிவு செய்யுங்கள்.

தொடர்பு கொள்ளவும்.
K.Chandrasegaran (Swiss) 01/461 57 49
V.Sivanesarajah (Swiss) 01/492 02 61

## யாழ்ப்பாணத்தில் வீடுகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாலாம் குறுக்குத்தெரு அடைக்கல மாதா கோயிலுக்கு அணையில். றோட்டுடன், அமைதியான குடும்ப பாங்கான சுற்றாடலில், மிகவும் நல்ல நிலையில் சகல வசதிகளுடன் முறையே நான்கு, மூன்று அறைகளைக் கொண்ட ஒரு வளவில் அமைந்த இரு வீடுகள் தனித்தனியே விற்கப்பட மாட்டா. கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொண்டு சிபாரிசுக் கடிதத்துடன் செல்பவருக்கு மட்டுமே வீடுகளைப் பார்வையிட அனுமதி வழங்கப்படும்.
Dr. S.T.Somasundaram
25. Sylvester Road, Mt. Lavinia.
தொலைபேசி 074-201582 (கொழும்பு)
வெளிநாட்டிலிருந்து 0094-74201582

## அஸ்மா வைத்தியம்

தொய்வு. இழுப்பு. இளைப்பு. மாய்சசல். மூச்சுத்தடடல். இருமல. சளி. தும்மல். மூக்கடைபபு. தலைவலி. பீனிசம் போனற குணஙகளுக்கு முழு சுகமடைய அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்களை இல.25. சில்வெஸ்டர் வீதி. கல்கிசையில் (மவுண்ட லேவினியா) (கொழும்பு) தினமும் மாலையில் 4 மணி முதல் 7 மணி வரையும் சந்திக்கலாம். தூர இடத்தில் உள்ளவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படுவர். சனி. ஞாயிறு. விடுமுறை நாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பதிவு செய்து பார்வையிடப்படும் நாளையும், நேரத்தையும் பெற்று வரவும்.


1வது பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் தருக்ஷன் சுகாகாந்தன் 06.08.1998



ஏழாலையைச் சேர்ந்த சுகாகாந்தன்-தமயந்தி தம்பதியினரின் செல்வப் புதல்வன் தருக்ஷன் தனது முதலாவது பிறந்ததினத்தை 06.08.1998 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, பூட்டி, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் துர்க்கை அம்மன் அருளால் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.



www.padippakam.com

படிப்பகம்

# வன்னியில் பட்டினிச் சாவு அபாயம்?

## அரச அதிபர்கள் கைவிரிப்பு!

### அமைச்சர் மறுப்பு! எம்.பிகள் வாயடைப்பு!

(அலுவலக நிருபர்)

வன்னிக்கு நிவாரணப் பொருட்கள் குறைக்கப்பட்டதை அடுத்து அங்குள்ள மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

வன்னிக்கு மட்டுமன்றி யாழ் குடாநாட்டுக்கான நிவாரணத்திலும் வெட்டு விழுந்திருக்கிறது. இதனால் அங்கும் பெருவாரியான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிவாரண வெட்டுப் பற்றி அரசுடன் பேசப்போவதாகவும், கொழும்பில் ஜனாதிபதி மாநாடு நடத்தப்போவதாகவும் அரச அதிபர்கள் மக்களிடம் கூறிக்கொண்டிருந்தனர்.

**மறுப்பு**

நிவாரண வெட்டு நடக்கவில்லை என்று அரசாங்கம் தடாலடியாக அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது. நிவாரண வெட்டு நடந்து கொண்டிக்கும்போது இப்படியொரு அறிக்கை வெளியானதால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

அதன்பின்னர் நாடாளுமன்றத்தில் நிவாரண வெட்டு தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், "நிவாரண வெட்டு எங்கும் நடக்கவில்லை!" என்று கூறியிருந்தார்.

அச்சமயம் சபையில் அமர்ந்திருந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மௌனமாக அமர்ந்திருந்தனர். மறுத்துரைக்க முற்படவில்லை.

தாம் சபையில் ஆற்றிய உரை மறுநாள் பத்திரிகைகளில் உணர்ச்சிகரமாக இடம் பெறும் என்ற திருப்தியோடு அவர்கள் அமர்ந்திருந்தது போலத் தோன்றியதாக செய்தியாளர் பகுதியில் இருந்து கவனித்த பத்திரிகையாளர் ஒருவர் கூறினார்.

**கைவிரிப்பு**

நிவாரணவெட்டு நடக்கவில்லை என்று அமைச்சர் கூறியதையடுத்து அரச அதிபர்களும் தம்மால் எதுவும் முடியாது என்று கைவிரித்துள்ளனர்.

இத்தற்கிடையே வடபகுதிக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு சபைத் தலைவர் கே.ஒபடகே நிவாரண வெட்டு இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

நிவாரண வெட்டுக்கள் தொடர்பாக ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளதாக தமிழ்க் கட்சிகள் கூறிவருகின்றன. பரிகாரம் கிடைக்கும் என்பதுபோல அக்கட்சிகளும் கூறுகின்றன. ஆனால் இவையெல்லாம் வெறும் சாக்குப்போக்குகளே என்றும், நிவாரண வெட்டில் அரசு உறுதியாக இருப்பதாகவும் தெரியவருகிறது

இந்நிலை தொடருமானால் வன்னியில் மட்டுமன்றி யாழ் குடாநாட்டிலும் பாரிய நெருக்கடி நிலைகளும், பட்டினிச் சாவுகளும் தோன்றலாம் என்று அஞ்சப்படுகிறது.

## ஆணுறுப்பு வெட்டப்பட்ட உடல்கள்

### சம்பூர் காட்டில் மூவர் கொலை

(சஞ்சீவன்)

திருமலை சம்பூர் பகுதியில் 19.08.98 அன்று படை நடவடிக்கை ஒன்று இடம் பெற்றது.

கரைப்பாதையால் நகர்ந்து காட்டுவழியாக முன்னெறிய படையினர் அதிகாலையில் சம்பூர் கிராமத்தை சுற்றிவளைத்தனர். அதனால் கிராமமக்களும் வெளியேற முடியவில்லை. எனினும் சிலர் பயத்தில் காட்டுப் பக்கம் ஓடி ஒளிந்துகொண்டனர்.

படையினருக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் இரண்டு படையினர் பலியானதாகவும், ஒருவர் படுகாயம் அடைந்ததாகவும் படையினர் கூறினர்.

புலிகள் தரப்பில் சேகர், தீப்பொறி ஆகிய திருமலை மாவட்ட புலிகளும், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மதிவாணன் என்னும் புலியும் பலியானதாக பெயர்கள் அறிவிக்கப்பட்டன.

புலிப்படையில் இருந்து தப்பியோடி படையினரிடம் சரணடைந்த இருவரது உதவியுடன்தான் படையினர் முன்னெறி வந்ததாக சம்பூர் மக்கள் பேசிக்கொள்கின்றனர். பாலு, குலேந்திரன் ஆகிய இரு புலிகள்தான் சமீபத்தில் படையினரிடம் சரணடைந்திருந்தனர்.

பகல் ஒருமணிவரை சம்பூரில் நின்ற படையினர் பின்னர் திரும்பிவிட்டனர். அதனையடுத்து சம்பூர் கிராமத்தில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. மாரிமுத்து மயில்வாகனம் என்பவரது வீடு தரைமட்டமானது. வைரமுத்து நல்லம்மா (60) என்பவர் காயமடைந்தார்.

இதேவேளை காட்டுக்குள் ஒளிந்திருந்த மக்களில் மூன்றுபேர் சுட்டுக்கொல்லப்பட்டுக் கிடந்தனர். அவர்களது உடல்களில் ஆணுப் புறுக்கள் வெட்டி எடுக்கப்பட்டிருந்தன. இக் கோரத்தால் சம்பூர் கிராமமே அதிர்ச்சியில் உறைந்துபோயிருக்கிறது.

தாமோதரம் சிவகுமார் (35) இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை. சித்திரவேல் கோணேஸ்வரன் (41). இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை. அவரது சகோதரரான சித்திரவேல் மாணிக்கராசா (32). இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை. இவர்கள் மூவருமே கோரமாக கொல்லப்பட்டுள்ளனர்.

## மன்னாரில் தடைப் பொருட்கள் கடத்தல்!

### கொல்லப்பட்டோர் வியாபாரிகள்!

(நமது நிருபர்)

மன்னாரில் எட்டுத் தமிழர்கள் சுட்டும், குத்தியும் கொல்லப்பட்டது தொடர்பாக சில தகவல்கள் கிடைத்துள்ளன.

வவுனியா உலிலங்குளம் பத்தாம் கட்டைப் பகுதியில் வசிப்போரில் சிலர் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கடத்திச் சென்று வியாபாரம் செய்வதில் ஈடுபட்டு வந்தனர்.

பிளாஸ்ரிக் கலன்களின் மூலம் வாகன உதிரிப்பாகங்கள், எரிபொருட்கள் போன்றவற்றை கடத்திச் சென்று விற்பனை செய்வர்.

மடுவை அடுத்துள்ள தட்சணாமடுவில் இருந்து தடைசெய்யப்பட்ட பொருட்களை கடத்திச் செல்வர். இவர்களது வியாபாரத்தை புலிகள் விரும்பவில்லை. இவர்கள் ஊடாக படையினருக்கு தகவல்களும் போய்ச்சேரலாம் என்பதாலேயே விரும்பவில்லை. சீருடையினர் சிலர் இவர்களை ஊக்குவித்து பலனும் கண்டனர். மேலே உள்ளோருக்கு தெரியாமல் நடந்த சம்பாத்தியம் இதுவாகும்.

ஒருகட்டத்தில் மறுதரப்பாரின் துணையின்றி, இரவோடு இரவாக கால் நடையாக சென்று பொருட்களைக் கடத்திவரத் தொடங்கினராம். இதனை அறிந்த மறுதரப்பார் தம்மையே ஏமாற்றும் இவர்கள்மீது கடும் கோபம் கொண்டிருந்தனராம்.

இந்நிலையில்தான் இம்மாதம் மூன்றாம், ஆறாம் திகதிகளில் கடத்தல் வியாபாரிகளான எட்டுப்பேர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பிணமாகக் கிடந்து மீட்கப்பட்டனர். இவர்களில் எட்டுப்பேர் சுடப்பட்டும், ஒருவர் கத்திக் குத்தினாலும் கொல்லப்பட்டிருந்தனர். மேலும் ஒருவர் வெட்டுக் காயத்துடன் மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன் எதிரொலியாக கடத்தல் விவகாரமும், அதில் சீருடையினர் தொடர்பும் மேலிடத்திற்கு தெரியவந்ததாம். அதன் பின்னரே வவுனியாவில் எரிபொருள் மட்டுப்படுத்தப்படும் தீர்மானம் எடுக்கப்பட்டதாம்.

'தப்பு எங்கோ இருக்க பொது மக்களையோ பாதிக்கச் செய்வது?' என்று கேட்கின்றனர் விஷயமறிந்த மக்கள்.

## மீனவர் படகு நிர்மூலம்

### பயங்கரவாதிகள் படகு என விவரிப்பு

(சஞ்சீவன்)

திருமலை மாவட்டம் சல்லி மீனவர்களுக்குச் சொந்தமான மீன்பிடிப்படகு ஒன்று கடலில் வைத்து தகர்க்கப்பட்டது. அதில் இருந்த இரண்டு தமிழ் மீனவர்களையும் தாக்கிவிட்டு வேறு ஒரு படகில் ஏற்றி அனுப்பிவைத்தனராம்.

22.08.98 சனிக்கிழமை காலையில் திருமலைக் கடலில் இச்சம்பவம் நடைபெற்றது. இச் சம்பவம் தொடர்பாக செய்தி தெரிவித்த அரச தொலைக்காட்சி, பயங்கரவாதிகளின் படகு ஒன்று கடற்படையினரால் தகர்க்கப்பட்டதாகத் தெரிவித்தது.

அதேநாள் இச் சம்பவம் நடந்த கடற்பரப்பில் இருந்து பத்து மைல் தூரத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மூன்று தமிழ் மீனவர்கள் சுடப்பட்டுள்ளனர். முதல் சம்பவம் நடந்த அரைமணி நேரத்திலேயே இச்சம்பவமும் நடைபெற்றுள்ளது.

திருமலை அலஸ் தோட்ட அகதி முகாமில் தங்கியிருந்து, தமது அன்றாட ஜீவனத்திற்காக மீன்பிடிக்கச் சென்ற ஏழை மீனவர்கள் மூவரே சுடப்பட்டனர். பரமானந்தர் 35, பரந்தாமன் 32, கணேஷ் 29 ஆகியோரே சுடப்பட்டனர். கடற்படையினராலேயே தாம் தாக்கப்பட்டதாக மீனவர்கள் மூவரும் புகார் தெரிவித்துள்ளனர்.

## மீண்டும் அரங்குக்கு வரும் பொதி!

### காலத்தை இழுத்தடிக்கும் உத்தி?

நீண்ட நாட்களாகத் தேடுவாரற்றுக் கிடந்த அரசியல் யாப்பு ஆலோ சனைகளை அமைச்சர் பீரிஸ் மீண்டும் அரங்கிற்கு கொண்டுவர ஆயத்தம் செய்கிறார்.

ஆலோசனைப் பொதிக்கான தனது கருத்துக்களை ஐ.தே.கட்சி சமர்ப்பித்தாலோ அல்லது சமர்ப்பிக்காவிட்டாலோ மக்களிடம் கருத்துக்கணிப்பை-கடந்த பெப்ரவரியில் நடத்தப்போவதாக அரசாங்கம் கூறியது. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

வடபகுதியில் யுத்தம் தொடரும்போது தேர்தல்கள் நடைபெறலாகாது என்று மகாசங்கத்தின் சங்கநாயக்கர்கள் தெரிவித்த எதிர்ப்புக்காகவே மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுகின்றன என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

இவ்வாறான நிலையில் மகாசங்கத்தினரும் சிங்கள ஆணைக்குழுவும் கடுமையாக எதிர்க்கும் ஆலோசனைப் பொதிக்கான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பினை அரசு எவ்வாறு நடத்தப்போகிறது என்று அரசியல் நோக்காளர்கள் வினவுகின்றனர்.

எனவே கருத்துக் கணிப்பு நடத்தப் போவதாகக் கூறுவதும், பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்போவதாகக் கூறுவதும் எதிர்க்கட்சியை மிரட்டுவதற்கும், கால இழுத்தடிப்பை அவ்வப்போது நியாயப்படுத்தவும் கூறப்படும் கூற்றுக்களேயாகும் என்றும் அரசியல் நோக்காளர்கள் கூறியுள்ளனர்.

## கிழக்கில் நடவடிக்கை!

கிழக்கில் புலி இயக்கத்தினரின் வசமுள்ள மட்டக்களப்பு-கொக்கட்டிச்சோலைப் பகுதியில் 'தசபல' எனும் தேடியழிப்பு நடவடிக்கையை கடந்தவாரம் மேற்கொண்டிருந்த படையினர் அங்கிருந்து திரும்பிவிட்டனர்.

இந்த நடவடிக்கைக்காக ஏராளமான பஸ்களில் பொலன்னறுவைப் பகுதியில் இருந்து படையினர் மட்டக்களப்பில் குவிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். இராணுவ ஹெலிக் கொப்டர்களும் இரவு பகலாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

கொக்கட்டிச்சோலையில் நடவடிக்கை மேற்கொண்டிருந்த படையினர் உடனடியாக அங்கிருந்து திரும்பிவிட்டனர்.

சமீப இரண்டு மாத காலப் பகுதியில் கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்தில் படையினர் நடவடிக்கை மேற்கொண்டு திரும்பிய 4வது சந்தர்ப்பம் இதுவாகும்.

## மன்னராக விரும்பும் மாநகர முதல்வர்!

### குடி உயர கோன் உயருமாம்

யாழ் மாநகர முதல்வர் சிவபாலன் தன்னை மன்னராகச் சித்தரிப்பதில் குறியாக உள்ளாராம்.

'குடி உயர கோன் உயரும்' என்ற வாசகத்தை மாநகரசபையின் இலட்சிய வாசகமாக பொறிக்க வேண்டும்' என்று மாநகர சபைக் கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வந்தாராம்.

இதனைக் கண்டித்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் த.சுபத்திரன், "கோன் என்றால் மன்னர் என்று பொருள். மன்னராட்சிக்கு முடிவு கட்டியதாக பெருமைப்படும் நாம், மன்னராட்சி கால வாசகங்களுக்கு இடமளிக்க முடியாது. கோன் உயருவதற்காக குடி உயரத் தேவையில்லை, குடி உயர்வதற்காக பணியாற்றும் மக்கள் சேவகர்தான் மாநகர முதல்வர்!" என்று கூறினாராம். ஏனையோரும் அதனை ஆதரித்தனராம்.

ஆனால் மேற்குறித்த வாசகத்தை பொறிக்க அங்கீகாரம் கிடைத்துவிட்டதாக கூட்டக் குறிப்பில் எழுதிவைத்துவிட்டாராம் மாநகர முதல்வர். இதனை அறிந்த உறுப்பினர்கள் அடுத்த கூட்டத்தில் எதிர்ப்புத் தெரிவித்தனராம். தவறுதான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டதாம்.

அப்படியிருந்தும் எப்படியாவது அந்த வாசகத்தை இடம்பெறச் செய்துவிட வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறாராம்.

## பாஸ் தேவையில்லை

வவுனியாவில் எரிபொருள் தடையை நீக்க போராட்டம் நடக்கிறது. நீக்க முடியாது என்ற பிடிவாதமும் தொடர்கிறது.

அதேசமயம் வவுனியா மூன்று முறிப்புக்கு சமீபமாக பெரும்பான்மை இன முதலாளி ஒருவர் பெற்றோல் நிலையம் நடத்துகிறார். இங்கு கூப்பன் இன்றியே தேவையான பெற்றோல் பெற்றுக் கொள்ள முடிகிறதாம்.

## ஆலய ஸ்தாபகர் மரணம்

இலண்டனில் உள்ள விம்பிள்டன் பிள்ளையார் ஆலய ஸ்தாபகர் எஸ்.இரத்தினசிங்கம் தென் இந்தியாவில் அகாலமரணமானார்.

விம்பிள்டன் நகரில் முதன் முதலாக இந்து ஆலயம் ஒன்றை ஸ்தாபித்தவர் இவர். யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் பொறியியலாளராவார்.

26.08.98 அன்று புதன்கிழமை இலண்டன் மாநகரில் இவரது இறுதிக்கிரியை நடைபெற்றது. பெருந்திரளான தமிழ் மக்கள் கலந்துகொண்டனர்.

## தொடர்ந்து பதவியில் இருப்பாராம்!

### ஆறுமாதத் திட்டம் நிராகரிப்பு!

வன்னிமாவட்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினராக அடைக்கலநாதன் (செல்வம்) பதவி ஏற்றுள்ளார்.

ரெலோ இயக்கத்தில் அதன் முன்னாள் தலைவர் அமரர் சிறீசபாரத்தினத்திற்கு நெருக்கமானவராக இருந்தவர் செல்வம். சிறீயின் மறைவின் பின்னர் ரெலோ இயக்கத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

பின்னர் ரெலோவுக்குள் ஏற்பட்ட பிரச்சனைகளால் இயக்கத்தைவிட்டு விலகி தமிழ்நாட்டில் குடும்பத்துடன் தங்கியிருந்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மிகச் சொற்ப வாக்கு வித்தியாசத்திலேயே இவர் எம்.பியாகும் வாய்ப்பை தவறவிட்டிருந்தார். புளொட், ஈரோஸ் ஆகிய இயக்கங்களுடன் இணைந்து ரெலோ போட்டியிட்டிருந்தது.

ரெலோ செல்வத்திற்காக புளொட்டில் ஒருவர் இராஜினாமா செய்து விட்டுத்தருமாறு ரெலோ சார்பாக கேட்கப்பட்டபோதும் அப்போது புளொட் மறுத்துவிட்டது. இப்போது சண்முகநாதன் மறைவால் செல்வத்திற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

வன்னி மாவட்ட பட்டியலில் செல்வத்திற்கு அடுத்ததாக இருக்கும் இருவரும் ரெலோவைச் சேர்ந்தவர்களே. அதனால் செல்வம் உட்பட மூவரும் பதவியை பங்கிட்டுக் கொள்ளும்வகையில் தலா ஆறுமாதம் எம்.பி. பதவியில் இருப்பது என்று ரெலோ தீர்மானித்தது. செல்வம்மீதான அதிருப்தி காரணமாகவே இத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டதாம்.

ஆனால் செல்வம் அதற்கு உடன்பட மறுத்துவிட்டார். "ஆறுமாதத்தின் பின்னர் இராஜினாமா செய்யப் போவதில்லை. பதவிக் காலம் முடியும்வரை பதவி வகிப்பேன்!" என்று கூறியுள்ளார்.

## விரும்பியபடி சுடுமாறு கட்டாயம்!

### பொலிஸ்காரர்கள் விளக்கமறியலில்!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு ஏறாவூரில் பொலிஸார் இருவர் நிறை மது போதையில் துப்பாக்கிச் சூடு நடத்தி சில நிமிடங்கள் அட்டகாசம் புரிந்த சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

சென்ற 17.08.98 அன்று மாலை ஏறாவூர்-ஆறுமுகத்தான்குடியிருப்பு எனுமிடத்தில் இரு பொலிஸாரும் ஒரு சிவிலியனுமாகச் சேர்ந்து தாராளமாக மது அருந்திவிட்டு மது வெறி தலைக்கேறிய நிலையில் சிவிலியனிடம் துப்பாக்கியைக் கொடுத்து, "உனக்கு விருப்பமானபடி சுடு," என்று கூறினராம்.

அவர் பயந்து நடுங்கிய நிலையில் தன்னிடம் சுடுமாறு கேட்க வேண்டாமென்று கும்பிட்டு மன்றாடியுள்ளார். இருந்தாலும் மது வெறியிலிருந்த பொலிஸ்காரர் விடுவதாயில்லை. இதனால் அந்தக் குடிமகன் பொலிஸ்காரரின் துவக்கை எடுத்து இரண்டு மூன்று தடவை தென்னை மரத்தை நோக்கிச் சுட்டுள்ளார்.

மது வெறி அட்டகாசத்தினால் விபரீதம் நடப்பதை உணர்ந்த பொதுமக்கள் அருகில் காவலரணில் இருந்த பொலிஸாருக்கு இரகசியமாகத் தகவல் கொடுத்தனர்.

அந்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் மதுபோதையில் அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த அந்த இரு பொலிஸாரையும் அழைத்தனர். தாம் மாட்டுப் படப்போவதை யுணர்ந்த அவர்களிருவரும் துப்பாக்கியைப் போட்டுவிட்டு, கைக்குண்டைக் கழற்றி, தங்களைப் பிடிக்க வந்த பொலிஸார்மீது எறியப் போவதாக மிரட்டினர்.

வீதியில் பொதுமக்கள் வந்து கொண்டிருந்த ஓட்டோவையும் தாக்கப்போவதாகக் கூறி எச்சரித்தனர். பின்னர் இவர்களைப் பிடிக்கச் சென்ற இரு பொலிஸாரும் அவர்களால் தாக்கப்பட்டார்கள். எனினும் இறுதியில் ஒருவாறு அவர்கள் மடக்கிப்பிடிக்கப்பட்டார்கள்.

இதே மாதிரியான சம்பவங்கள் முன்னரும் ஏறாவூரில் நடந்துள்ளன. கடந்த ஜூலை முதலாம் திகதியும் ஏறாவூர்-வம்மியடியில் துப்பாக்கிச் சூடும் குண்டுத் தாக்குதலும் நீண்ட நேரமாக நடத்தப்பட்டன. இதுவும் மதுபோதையால் வந்த விளைவே என்று பின்னர் பேசிக் கொள்ளப்பட்டது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் புத்தளம் பா.உ.மான அஸ்வர் மற்றும் மட்டக்களப்பு பா.உ.அலிஸாஹிர் மௌலானா ஆகியோர் வந்து கொண்டிருந்தபோதே மேற்படி துப்பாக்கி ரவை மழை பொழிந்தது நினைவிருக்கலாம்.

## கடத்தப்பட்டவர் விடுவிப்பு!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு-வாழைச்சேனை மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளர் ஏ.சம்சுதீன் கடந்த 20.08.98 அன்று மாலை 5.30 க்கு வாழைச்சேனை-கறுவாக்கேணியில் வைத்துப் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் கடத்தப்பட்டார்.

வங்கியிலிருந்து கடமை முடிந்து ஏறாவூர் நோக்கி வரும்போதே இச்சம்பவம் இடம் பெற்றது. இவர் கடத்தப்படும்போது வங்கியின் உதவி முகாமையாளர் மு.கனகரெட்ணம் உட்பட வங்கியின் ஊழியர்கள் அந்த வாகனத்தில் இருந்தனர். விசாரணைக்காக சம்சுதீன் மாத்திரமே அழைத்துச் செல்லப்பட்டார்.

விசாரணைக்காக புலிகளின் வசமுள்ள பொண்டுகள்சேனைப் பகுதிக்கே அவர் வரவழைக்கப்பட்டு வாவியைக் கடந்து தோணியில் அழைத்துச் செல்லப்பட்டதாக அறியப்படுகிறது. வங்கி அலுவலகளில் தங்களுடன் பூரண ஒத்துழைப்பு வேண்டியிருப்பதாலேயே விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாக அவர் தரப்பில் கூறப்படுகிறது.

விசாரணை முடித்து மறுநாள் பகல் 12.30 க்கு அவர் பிடித்துச் செல்லப்பட்ட இடத்திலேயே விடுவிக்கப்பட்டார். விசாரணையின்போது புலிகள் நன்கு உபசரித்ததாகவும் அவர் தரப்பில் கூறப்படுகிறது.

## போரை நிறுத்தினால் வேலையிழப்பு

### 7½ இலட்சம்பேர் பாதிப்பு!

"விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்துக்குமிடையில் நடைபெற்றுவரும் யுத்தம் முடிவுக்கு வருமானால் ஏறத்தாழ 4 இலட்சம் பேர் வேலை இழக்க நேரிடும்!" இவ்வாறு ஹொங் கொங்கிலிருந்து வெளிவரும் 'எக்கொனொமிஸ்ட் என்ற ஆங்கில வார சஞ்சிகை கூறுகிறது.

இச்சஞ்சிகை மேலும் தெரிவித்திருப்பதாவது,

"தமிழர்களுடைய அபிலாசைகளில் ஒரு சிலவற்றையாவது நிறைவேற்றுவதற்கான எண்ணத்தில் சந்திரிக்கா அதிகாரப் பரவலுக்கான ஆலோசனைகளை அமுல் நடத்த எத்தனிக்கிறார். ஆனால் இதனை விடுதலைப் புலிகளும் வரவேற்கவில்லை. தவிர இந்நாட்டின் பெரும்பான்மையான பௌத்த சிங்களவர்கள் முழு மூச்சாக எதிர்க்கின்றனர்.

ஆளும் கட்சிக்குள்ளும் ஆலோசனைப் பொதிக்கு மிகக்கடுமையான எதிர்ப்பும் இருக்கிறது.

சிங்கள மக்களிடம் அதிக செல்வாக்கைப் பெற்றிருக்கும் பௌத்த பிக்குகள் இப்பொதியினை எதிர்க்க வேண்டும் என்று வீடுவீடாகச் சென்று மக்களிடம் பிரசாரம் செய்யப் போவதாக அச்சுறுத்தி வருகின்றனர்.

தொடரும் யுத்தத்தினால், 1993ம் ஆண்டில் இருந்ததைப் பார்க்கிலும் சிறீலங்கா ஆயுதப்படையின் அளவு 10 மடங்கு அதிகரித்துள்ளது. ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேரைக் கொண்டதாக இருக்கிறது.

தென் இலங்கையைச் சார்ந்த ஏழைக் குடும்பங்களிலிருந்துதான் இளைஞர்கள் படையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டத்தினால் தவித்த இவ்விளைஞர்களின் வருவாயில்-வறுமையில் வாடிய சுமார் 7 1/2 இலட்சம் பேர் வாழ்ந்து வருகின்றனர்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்படுமானால் இத்தனை பேரும் மீண்டும் வறுமையில் வாடவேண்டிய நிலைதான் உருவாகும்."

இவ்வாறு ஆகஸ்ட் 8ம் திகதி வெளியான 'எக்கொனோமிஸ்ட்' கருத்து வெளியிட்டுள்ளது.



www.padippakam.com

www.padippakam.com



இரண்டாம் பாகம்

01

# மேற்கே ஒரு குற்றம்

புதன் கிழமை இரவு அகாலத்தில் மீனம்பாக்கத்தில் கணேஷும், வசந்தும் ஜம்போ ஜெட் ஏறினார்கள். பம்பாய் சென்று அங்கிருந்து நடு இராத்திரி புறப்பட்டது மேற்கே செல்லும் விமானம்.

வசந்த் விமானத்தில் நுழைந்ததும் விசிலடித்தான். "முழுசா ஒரு கல்யாணம் பண்ணலாம் போல இருக்கே. அவ்வளவு இடம் இருக்கே..." முதல் வகுப்புக்குச் செல்லும் மாடிப்படிகளைப் பார்த்து, "சாந்தி கல்யாணத்துக்குக் கூட இடம் இருக்கு" என்றான்.

சினிமா தியேட்டர்போல வரிசைகள் இருந்த ஸீட்களில் பிளேனின் மத்திய பாகத்தில் அவர்கள் இருவருக்கும் இடம் போட்டிருந்தார்கள். வசந்த் நின்று கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தான்.

"என்ன! ப்ளேன்ல இப்படியெல்லாம் பராக்கு பார்க்கக்கூடாது."

"இல்லை பாஸ். அந்த கலாராதனா குட்டிகள் வந்தாச்சான்னு பார்க்கிறேன்!"

"நிச்சயம் வருவா. கவலைப்படாதே!"

"அவங்க வர்ரதினாலே தான் நாம போறோம். அவுங்களைப் போய் சந்திச்சு சின்னதா ஒரு 'ஹலோ' சொல்லிட்டு வந்துரட்டுமா?"

"அதுக்கெல்லாம் நிறைய அவகாசம் இருக்கு."

ஹோஸ்டஸ் வந்து வசந்தைப் புன்ன கையுடன் அதட்டி உட்காரச் சொன்னாள்.

"இப்பல்லாம் ஹோஸ்டஸ்கள் கல்யாணம் பண்ணிக்கலாம்னு ரூல் வந்துடுத்து இல்லே?"

"ஏன் ஃப்ராங்ஃபேர்ட் வர்றதுக்குள்ளேயே ஒருத்தியை செஞ்சுக்கலாம்னு பார்க்கிறியா?"

அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் தலைகள் தெரிந்தன. பம்பாயில் நிரம்பும் என்று தோன்றியது. கணேஷ் தன் புத்தகங்கள் ஒன்றில் ஆழ்ந்தான். ஜென் பவுத்தத்தைப் பற்றிய புத்தகம். வசந்த் தன் புத்தகத்தில் ஆழ்ந்தான்- 'பெண்களின் செக்ஸ் வாழ்க்கை.'

பாதியில் வசந்த் நிமிர்ந்தான். "அதோ வந்துட்டாங்க பாருங்க பாஸ்!"

கலாராதனாவின் எட்டுப் பெண்கள், நபும்சகராகத் தோற்றமளித்த நட்டுவனார்; மற்றும் சில சில்லறை ஆசாமிகள் புதிதாக பாண்ட் அணிகிறவர்கள்; ஒரே கோலாகலமும் உற்சாகமுமாக வரிசையாக உட்கார்ந்தார்கள். அந்த ரேணுகா தான் குழுவின் கேப்டன் என்று தெரிந்தது. சுபாவமாகவே அதட்டும் குணம் கொண்டிருந்த அந்த துடி 'இந்தப் பிரத்தியேகப் பிரயாணத்தில் நிஜமாகவே எல்லாப் பொறுப்பும் என்னுடையது' என்று அரசாண்டு கொண்டிருந்தாள். அந்தப் பெண்கள் ஒன்றுக்குப் போவதற்குக்கூட அவளைக் கேட்டுக்கொண்டுதான் போக வேண்டும் என்று தோன்றியது.

"சரியான அல்லி ராணி!" என்றான் வசந்த்.

"யாரு?"

"ரேணுகாதான்."

"ரேணுகா யாரு?"



"அதுதான் கலாராதனா! பாஸ். நாம போய் அறிமுகம் செஞ்சுக்கலாமா?"

"இரு! டேக் ஆஃப் ஆகட்டும். அப்புறம்."

அந்த ராட்சச விமானம் எக்கச்சக்கமாக இரை விழுங்கின மலைப்பாம்புபோல் மெல்ல ஊர்ந்து திரும்பி 'அதுவா பறக்கப் போகிறது' என்ற ரீதியில் டேக் ஆஃப் ஓட்டத்தைத் துவங்கியது.

பிரயாணிகள் பளு அதிகமில்லாததால் ரன்வேயின் பேர் பாதிக்கு முன்னமேயே அந்த ராட்சச பறவை விண்ணுயர்ந்தது. சென்னை பூரா இலவசமாக வைரங்கள் நிறைந்திருந்தன.

விமானத்தில் ஸீட்பெல்ட் விளக்குகள் அணைய, பணிப் பெண்கள் மறுபடி புன்னகை செய்யத் துவங்க, கணேஷ் எழுந்தான்.

"எங்கே பாஸ்?"

"ரேணுகா....."

"நானும் வரட்டுமா?"

"வேண்டாம். அப்புறம்!" கணேஷ் ரேணுகா உட்கார்ந்திருந்த வரிசைக்குச் சென்று "ஹலோ" என்றான்.

ஒரு கணம் ரேணுகா திடுக்கிட்டு, அவன் அடையாளத்தை ஞாபகத்தில் தேட,

"நான் கணேஷ், லாயர். அன்னிக்கு தீபாவைப்பத்தி விசாரிச்சுட்டு வரலை?"

"ஓ எஸ்! ஞாபகம் இருக்கு. நீங்க?"

"நானும் ஃப்ராங்ஃபேர்ட் வரேன்!"

"அப்படியா?"

"நாங்க உடனே அங்கிருந்து ம்யூனிக் போறோம்."

"நாங்களும் ம்யூனிக் வரோம்!"

"ஹௌ நைஸ்! அங்கே என்ன?"

"ஒரு காரியமாப் போறோம்!"

"நாங்க டான்ஸ் நிகழ்ச்சிக்கு!"

"தெரியும்!"

"ம்யூனிக், பாரிஸ், லண்டன்!"

"தெரியும்!"

ரேணுகா நடன உடை இல்லாமல் சட்டை அணிந்திருந்தாள். சிக்கனமாக மேக்-அப் அணிந்திருந்தாள். நெற்றிப் பொட்டு ஒரு சின்ன சிவப்புக் கடுகு, இரண்டு ஏக்கரா கண்கள். வருஷக் கணக்கில் நடனமாடிய உடம்பு. வாகாக வில்லாக இருந்தது. இளமை அந்த வரிசை முழுவதும் ததும்பியது.

ஓரத்தில் ஜில்பா நன்றாக சப்பணம் கட்டி உட்கார்ந்து வெளியே ஏதாவது புள்ளி தெரிகிறதா என்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

"ம்யூனிக்கில உங்க நிகழ்ச்சிக்கு வந்தாலும் வருவேன்!" என்றான் கணேஷ்.

"அப்படியா? சந்தோஷம்!"

வசந்த் வந்து சேர்ந்து கொண்டு "ஹாய்" என்றான். "நீங்களும் வந்திருக்கிங்களா?" என்றாள் ரேணுகா.

"யா! உங்க டான்ஸை வெளிநாட்டிலகூட விடாம பார்க்கப்போறோம்! அவ்வளவு. பிரியம் எங்களுக்கு உங்க மேல."

"பூ சுத்தாதீங்க! நீங்க வேற எதுக்கோ போறீங்க. மிஸ்டர் கணேஷ் சொல்லிவிட்டார்!"

"உங்களை நான் க்யூ.எம்.சி.யில் பார்த்திருக்கிறேன். உங்க பேர் லாவண்யாவா?" என்று உட்கார்ந்திருந்த ஒரு பெண்ணிடம் கேட்டான் வசந்த்.

"ஆமாம்!" என்றாள் அவள் திகைத்து.

"ஹலோ லாவண்யா! ஐம் வசந்த்!" லாவண்யா தன் சிநேகிதிகளைப் பார்த்துக் கொண்டு சிரித்தாள்.

"ஹலோ!"

ரேணுகா குறுக்கே வெட்டி, "வெல், உங்களை சந்திச்சதுல சந்தோஷம். அப்புறம் பார்க்கலாமா?"

"வா வசந்த்!"

"குட்பை லாவண்யா!"

"பை வசந்த்!"

அவர்கள் திரும்ப வந்து உட்கார்ந்ததும், "எங்கேடா புடிச்ச பேரை? லாவண்யா! எப்படிடா பேரு கண்டுபிடிச்சே?"

"அவுங்க வெளிநாடு போறதுபத்தி அமர்க்களமா ஒரு தீபாவளி மலரே போட்டிருக்காங்க! அதில எல்லா குட்டிகளுடைய பேரு, ஜாதகம், ஃபோட்டோ எல்லாம் இருக்கு!"

"'குட்டி'ங்கிற வார்த்தையை உபயோகிக்காதே அசிங்கமா இருக்கு."

"கன்னிகைமார்கள்னு சொல்லலாம். ஆனால் நிச்சயமா சொல்ல முடியாதே!"

"உனக்கு விமோசனமே கிடையாதுடா!"

கணேஷ் தன் புத்தகத்தில் ஆழ்ந்தான். ஒரு கையால் கை தட்டுவது எப்படி இருக்கும் என்று குரு கேள்வி கேட்டாராம். சிஷ்யன் வருஷக்கணக்காக ஆராய்ந்து. 'குருவே, எவ்வளவோ தேடிப்பார்த்தேன். கடைசியில் மௌனத்தைத்தான் கேட்டேன்.' என்றானாம். குரு 'அதுதானடா பதில்' என்று அவன் மண்டையில் அடித்தாராம்.

ஒரு கை கரகோஷம்! எங்கே இருக்கிறது பதில்? ஒரு கையால் வரைந்த வட்டங்கள்.

வசந்த் தன்னிடமிருந்த சொற்பமான அன்னியச் செலாவணியை விரயம் செய்து ஸ்காட்ச் வாங்கிக்கொண்டு அதை சப்பினான். ஹெட்ஃபோன் வாங்கிக்கொண்டு அதை அணிந்து கொண்டு 'இதுதான் சொர்க்கம்' என்றான்.

"ஒரு மணி நேரத்தில் சொர்க்கம் அலுத்துப்போய் விடும்" என்றான் கணேஷ். சாய்ந்து கொண்டு கண்ணை மூடிக்கொண்டான். நிகழ்ந்தது எல்லாம் கனவா? தீபாவின் முகம் தெரிந்தது. ராஜேந்திரன், அந்தப் பத்திரிகை ஆபீஸ் அய்யங்கார், அந்த டிராவல் ஏஜெண்ட், ரேணுகா எல்லோரும் ஒவ்வொரு வட்டங்களுக்குள் அகப்பட்டு அந்த வட்டங்கள் தத்தம் பிம்பங்களுடன் நடனமாடின.

'எதற்காகப் போகிறேன்?'

தெரியாது.

'என்ன நடக்கப்போகிறது?'

தெரியாது.

'திரும்ப முழுசாக வருவேனா?'

தெரியாது.

பதினைந்து நாட்கள் கோர்ட் கேஸை யெல்லாம் அட்ஜர்ன்மெண்ட் வாங்கிக் கொண்டு கட்சிக்காரர்களையெல்லாம் தவிக்கவிட்டு எவனோ வீசி எறிந்த காசைப் பொறுக்கிக்கொண்டு டிக்கெட் வாங்கி தூர தேசத்து அதிசயங்களை நோக்கி-அடுத்தது என்ன நிகழப்போகிறது என்று தெரியாமல் போகும் வினோதமான பிரயாணம்.

காலையா-மாலையா? என்று தெரியாத ஒரு அவஸ்தை நேரத்தில் விமானம் ஃப்ராங்ஃபேர்ட்டில் வந்து இறங்கியது. டெர்மினலுக்கும் விமான வாசலுக்கும் மூடுபாலம் அமைத்து அதன் வழியாக விமான நிலையத்தின் பெரிய ஹாலுக்குள் வந்தார்கள்.

ஒலி பெருக்கி ஜெர்மன் பாஷையில் புரியாமல் பேசி! அப்புறம் தயக்கமாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தது.

இருவரும் நின்றுகொண்டே இருக்க எஸ்கலெட்டர் அவர்களுக்காக நடந்தது. கண்ணாடிக்குப் பின்னே ஆயிரம் டெலிவிஷன்கள், எலக்ட்ரானிக் சாதனங்கள். பொம்மைகள், புத்தகங்கள், மது வகைகள்.

அவர்கள் பேஸ்மெண்டில் வந்து நிற்க அவர்கள் பெட்டிகளும் மெஷின் இயக்கத்தில் உடனே வந்து சேர சிநேகிதமான பணியாளர்கள் இந்த அகாலத்திலும் சிரித்துக்கொண்டு அவர்கள் காகிதங்களில் முத்திரையிட மூன்று நிமிஷங்களில் கஸ்டம்ஸ் பரிசோதனைக்குச் சென்றார்கள்.

அந்தப் பெண்களை கலாராதனா குழுவின் அத்தனை இந்தியப் பெண்களையும் பார்த்துத் திகைத்தான் அந்த கஸ்டம்ஸ் இளைஞன்.

"எவ்வளவு நாள் இருப்பீர்கள்?" என்றான் உடைந்த ஆங்கிலத்தில்.

"நாலு நாள்!" என்றாள் ரேணுகா.

"ஹலோ!" என்றான் கணேஷ்.

ரேணுகா ஒரு தடவை சிரித்தாள்.

"உங்கள் பெட்டியைத் திறக்கிறீர்களா?"

திறந்தாள். "நடன உடைகள்!" என்றாள்.

"ஸாரிஸ்! மோர் ஸாரிஸ்! நடனமாடப் போகிறீர்களா?"

"ஆம். உங்கள் அரசாங்கத்தின் அழைப்பில்!"

"வெல்கம்."

மற்றவனுடன் ஜெர்மன் பாஷையில் பேசினான். எல்லாப் பெட்டிகளையும் வரிசையாக சாக் பீஸில் குறியிட்டான். "நீங்கள் போகலாம்!" அவ்வளவுதான்!

"யு மீன் அந்தப் பெட்டிகளை எல்லாம் திறந்து காட்ட வேண்டாமா?"

"நீங்கள் எங்கள் கலாசார விருந்தாளிகள். ஹாவ் எ நைஸ் டைம்!" என்றான்.

கணேஷின், பெட்டி பாஸ்போர்ட்டைப் பார்த்தான்.

"டூரிஸ்ட்! ஸ்டேயிங் ஹியர் லாங்?"

"நோ!"

"எனி திங் டு டிக்ளேர்!"

"வெல் நோ!"

"ஹாஃப் எ பாட்டில் ஆஃப் ஸ்காட்ச்!" என்றான் வசந்த்.

எழுத்துலக வேந்தன்

சுஜாதா

"தட்ஸ் எ நாட் மச்!"

"ஹெவ் எ நைஸ் டைம். குட்பை!"

"என்ன பாஸ் ஒண்ணுமே செக் பண்ணலையே?"

"ஆளைப் பார்த்தாலே தெரிஞ்சுடும் அவனுக்கு!"

"அந்தக் குட்... பெண்களையும் விட்டுட்டான்!"

"யாரை செக் பண்ணணும்னு அவுங்களுக்கு நல்லாத் தெரியும்!"

பெட்டிகளை சாதகமான நடைவண்டிகளில் தள்ளிக்கொண்டு உள்நாட்டுப் பிரயாணப் பகுதிக்கு வந்தார்கள். அந்த லூஃப்தான்ஸா பெண் அவர்களைப் பார்த்துச் சிரித்தாள்.

(தொடர்ந்து வரும்)

---

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன்

04

கிராமத்திலிருந்த நாள்வரை சதாமுக்கு ஆடு தெரியும். ஆட்டை மடக்கும் கோல் தெரியும். கோழி தெரியும். கோழியைக் களவாடக் கொண்டு போகும் கோணிப்பை தெரியும். ஆனால் துப்பாக்கி தெரியாது. துப்பாக்கி அரசியலும் தெரியாது.

அவன் பள்ளியில் சேர்ந்து படிப்பதற்காக 1947-ல் பாக்தாத் நகரத்துக்கு மாமா வீட்டுக்கு வந்த பிறகுதான் முதன்முதலாக துப்பாக்கியைப் பார்த்தான். துப்பாக்கியை ஃபோட்டோவாகப் பார்த்தான். ஃபோட்டோவில் அதை மாமா இராணுவ சீருடையில் வைத்திருக்கப் பார்த்தான்.

"அப்பா வச்சிருக்கிறது துப்பாக்கி, சுட்டா... டுமீல்... ஆள் குளோஸ்...!"

ஃபோட்டோவைக் காட்டி மாமா மகன் அட்னன் துப்பாக்கியின் மந்திர சக்தியைச் சொல்லி வியப்பிலாழ்த்தினான்.

இது துப்பாக்கியா? ஆளைக் கொல்லுமா? அதை ஏன் மாமா வச்சிருக்கார்? யாரை குளோஸ் பண்ண? என்று புரியாமல் சதாம் குழம்பிக் கொண்டிருக்கையில், "நானும் துப்பாக்கி வச்சிருக்கேனே..!" என்று சொல்லி திடுக்கிட வைத்தான் அட்னன்.

"நெஜமாவா?"

"ஆமா! பாக்குறியா?"

அட்னன் உள் வீட்டுக்குள் ஓடினான்.

முழ நீள இரும்புத்தடியுடன் திரும்பி வந்தான். அதை சதாமிடம் காட்டி, "எப்படி இருக்கு. என் துப்பாக்கி?" என்று குதூகலத்துடன் கேட்டான்.

சதாமுக்கு ஏமாற்றமாக இருந்தது. ஃபோட்டோவில் மாமா வைத்திருப்பது இது இல்லை என்று தெரிந்தது.

"இது துப்பாக்கியாக்கும்? ஏமாத்துற!" என்று நக்கலடித்தான் சதாம்.

அட்னனின் மூக்கு கோபத்தில் சிவந்தது.

"சொன்னா நம்பமாட்டே? இதை அப்பா தான் எனக்குக் குடுத்தார். இதை வச்சு இப்ப விளையாடினா, பின்னால் நெசத் துப்பாக்கி தர்றேன்னு சொல்லியிருக்கார். தெரியுமா?"

"அதை வச்சு யாரைச் சுடுவே?"

அட்னன் பட்டென்று சொன்னான்: "வெள்ளைக்காரங்களை...!"

"ஏன்..?"

"தெரியாது. அப்பாவுக்கு அவங்களப் பிடிக்காது. அதனால எனக்கும் அவங்களப் பிடிக்காது. சரி... நாம ரெண்டு பேரும் சுட்டு விளையாடுவோம். வர்ரியா?" என்று கேட்டான் அட்னன்.

அந்தப் புது விளையாட்டு எப்படி இருக்கும் என்று தெரியாத சதாம் ஆர்வத்துடன் தலையாட்டினான்.

அட்னனுக்கு ஏக குஷி.

அவன் சொன்னான்: "டேய், சதாம்! நான் அரேபியன். நீ இப்ப வெள்ளக்காரன். நான் உன்னைச் சுடுவேன். நீ செத்துரணும், சரியா?"

சதாம் மீண்டும் தலையாட்டினான்.

இரும்புத் தடியைத் துப்பாக்கிப்போல் தூக்கிப் பிடித்துக் கொண்டு சதாமை குறி பார்த்த அட்னன், சுட்டு விட்டதற்கு அடையாளமாய் 'டுமீல்' என்று வாயால் சத்தம் கொடுத்தான்.

'டுமீல்' சத்தம் கேட்டபிறகும் அந்த இடத்திலேயே அசையாமல் நின்று கொண்டிருந்தான் சதாம்.

"டேய்... உன்னைச் சுட்டுட்டேன்டா! செத்துப் போன மாதிரி கீழே விழு!" என்று கத்தினான் அட்னன். அதற்குப் பிறகுதான் அந்த 'வெள்ளைக்காரன்' கீழே விழுந்தான். செத்துப்போன மாதிரி கண்ணை மூடிக்கொண்டு; நாக்கைத் துருத்திக்கொண்டு!

"அய்...யா..! கொன்னுட்டேன் கொன்னுட்டேன்!" என்று குதியாட்டம் போட்டான் அட்னன். பிறகு சதாமிடம் வந்தான். "இப்ப உன் ரவுண்டு. நீ சுடு!"

இரும்புத் தடியை அவனிடம் கொடுத்தான்.

சதாம் கம்பீரமாக முதல்முறையாக 'துப்பாக்கி'யை கையில் பிடித்தான். அட்னனை அலட்சியமாய் குறி பார்த்தான். முழங்கினான். "நான் அரேபியன்! நீ வெள்ளைக்காரன்! டுமீல்...!"

அட்னன் கீழே விழுந்தான். குண்டடி பட்டவனைப்போல் கையைக் காலை உதறித் துடித்தான்.

இந்தத் 'துப்பாக்கி விளையாட்டு' சதாமுக்கு மிகவும் பிடித்துப்போய் விட்டது. அப்போது அவனுக்கு வயது பத்துதான்.

ஒருநாள் மாலை.

மாமா தன் நண்பர் ஒருவருடன் வராந்தாவில் உட்கார்ந்து



ராஜையா

பேசிக்கொண்டிருந்தார்.

அட்னனைத் தேடினான் சதாம். அவனுக்கு சுட்டு விளையாட வேண்டும் போலிருந்தது அப்போது. ஆனால், அட்னன் வீட்டில் இல்லை. ஆகவே யாரை வெள்ளைக்காரனாக்கலாம் என்று சதாம் சிந்தித்தான்.

சட்டென்று ஒரு யோசனை.

இரும்புத் தடியைக் கையிலெடுத்தான். வராந்தாவுக்கு வந்தான். மாமாவைக் குறி பார்த்தான். கம்பீரமாக முழங்கினான்,

"மாமா... நான் அரேபியன்! நீங்க வெள்ளைக்காரன். நான் உங்களச் சுடப் போறேன்... சுட்டுட்டேன்... டுமீல்...!"

இதை எதிர்பார்க்காத மாமாவும், அவரது நண்பரும் முதலில் திகைத்தார்கள். பிறகு சிரித்தார்கள்.

"பையன் பரவாயில்லையே..." என்ற நண்பர், சதாமை அருகே அழைத்தார். அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார். கேட்டார். "இப்ப ஏன் வெள்ளைக்காரனைச் சுட்ட?"

சதாம் ஒரு கணம் விழித்தான். 'நான் ஏன் வெள்ளைக்காரனைச் சுட்டேன்?' என்று சிந்தித்தான்.

அவன் சொல்லப்போகும் பதிலுக்காக மாமாவும், நண்பரும் ஆவலுடன் அவன் முகம் பார்த்து காத்திருந்தார்கள்.

சிறிது நேரம் சிந்தித்த பிறகு சதாம் சொன்னான்: "எங்க மாமாவுக்கு வெள்ளைக்காரனைப் பிடிக்காது. அதனால, எனக்கும், அட்னனுக்கும் வெள்ளைக்காரனைப் பிடிக்காது."

"அதுசரி.... மாமாவுக்கு ஏன் பிடிக்காது, தெரியுமா?" நண்பர் கேட்டார்.

சதாம் மாமாவைப் பார்த்துவிட்டு, தெரியாது என்று தலையைக் குலுக்கினான்.

"ஏன் தெரியாது?"

"மாமாதான் எனக்குச் சொல்லலியே?"

நெற்றிச் சுருங்க சதாமை உன்னிப்பாகப் பார்த்தார் மாமா.

அன்றிலிருந்து சதாமுக்கு நிறைய செய்திகள் சொன்னார் மாமா. குழந்தைகளுடன் சாப்பிடும்போது, தூங்கச் செல்லும்போது, காலாற நடந்து போகும் போது... என்று நேரம் கிடைக்கும்போதெல்லாம் பல சரித்திரத் தகவல்களை விளையாட்டுப்போல் சொல்லிக் கொண்டே வந்தார் மாமா. (தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# முள் நிலவு

## நிலவு 10

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்
எழுதியுள்ள
விறு விறு காதல்கதை....
உங்கள் இதயத்தில்
இந்தக் கதையின் நாயகி
'நிலா'வுக்கும்
இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!

“வாங்க! ஆர்.கே.ஸார்... நானும் டாக்டர் புன்னம் சந்தரும் நிலாவைப் பார்க்கத்தான் கிளம்பிட்டிருக்கோம்... நீங்களும் வந்து ஜாய்ன் பண்ணிக்குங்க...!”

வராந்தாவில் நடக்கும்போதே அறிமுகங்கள் முடிந்து, டாக்டர் புன்னம் சந்தர் பாதி ஹிந்தியிலும், பாதி ஆங்கிலத்திலும் என்னிடம் சரளமாய் பேச ஆரம்பித்திருந்தார்.

“உங்களுக்கு எதிர்வீடு நிலாவோடது இல்லையா?”

“ஆமாம்...”

“நிலா உங்களோட பேசுவது உண்டா?”

“உண்டு. சில சமயங்களில் என்னுடைய கதைகளைப் படித்துவிட்டு ஆர்க்யூ செய்வதும் உண்டு... வெரி இண்டலிஜெண்ட் கேர்ள்...”

“உங்கள் மனைவியிடம் எப்படி பழக்கம்?”

“அரட்டையடிக்கிற அளவுக்கு...”

“நிலா மெண்டலி டிஸ்டர்ப் ஆன பிறகு ஹாஸ்பிடலுக்கு வந்து பார்த்தீங்களா...?”

“பார்த்தோம்...”

“உங்களை அடையாளம் கண்டு கொண்டதுக்கு அறிகுறியாய் ஏதாவது மாறுதல் அவளிடம் தெரிந்ததா...?”

“நாங்கள் நிலாவை பக்கத்தில் போய்ப் பார்க்காமல் சாத்தியிருந்த கதவில் விக்கெட் டோர் வழியாகப் பார்த்துவிட்டுத் திரும்பி விட்டோம்.”

“இப்போது நீங்கள் நிலாவிடம் பேசப் போகிறீர்கள்.”

நான் ஆச்சரியப்பட்டேன்.

“டாக்டர்...! நிலா இப்போது எதையும் புரிந்துகொள்ளக்கூடிய நிலைமையில் இல்லையென்று டாக்டர் மிருதுபாஷிணி அவர்கள் சொன்னார்களே...?”

“உண்மைதான்...! ஆனால் நிலாவை அதே நிலைமையில் நீடிக்க விடுவது தவறு. அவளைப் பாதித்த அந்த அதிர்ச்சியான சம்பவத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் அவளை மீட்க வேண்டும். இந்தக் காரியத்துக்கு அவளுடைய பெற்றோர்களையோ மற்ற உறவினர்களையோ உபயோகப்படுத்த முடியாது. காரணம் அவள் இந்த நிலைமைக்கு ஆளானதே அவர்களால்தான்... நினைவுகள் சிறைப்படும்போது அவர்கள் பக்கத்தில் இருக்கக் கூடாது...”

பேசிக்கொண்டே வந்ததில் வராந்தா முடிந்துபோயிருக்க மனநோயாளிகளின் செல்கள் வர ஆரம்பித்திருந்தன.

இரண்டு நிமிஷ நடை-

நிலா அடைக்கப்பட்டிருந்த செல் வந்தது.

கதவின் மூலையில் இருந்த விக்கெட் டோரை மட்டும் முதலில் திறந்து டாக்டர் புன்னம் சந்தர் எட்டிப் பார்த்துவிட்டு விலகி நின்று என்னைப் பார்க்கச் சொன்னார்.

விக்கெட் டோரில் கண்களைப் பதித்து அறைக்குள்ளே பார்வையைத் துரத்தினேன். அறைக்குள் ஒரு மெலிதான இருட்டு புகை போல பரவியிருக்க- அறையின் இடது பக்க மூலைக்குள் ஒண்டி உட்கார்ந்தபடி நிலா தன் இரு காதுகளையும் கைகளால் பொத்தியிருந்தாள்.

மருண்ட தினுசில் பார்வை.

மனசு வலிக்கவே- பார்க்கப் பிடிக்காமல் விக்கெட் டோரை விட்டு விலகி நின்றேன்.

“டாக்டர் பார்க்கவே கொடுமையா இருக்கு...”

“இப்போ உள்ளே போகப் போகிறோம்!” சொன்ன டாக்டர் புன்னம் சந்தர் மிருதுபாஷிணியிடம் திரும்பினார்.

“டாக்டர்...! ஓப்பன்... த..டோர்....”

மிருதுபாஷிணி சாவியோடு பூட்டை நோக்கிப் போக என் மனசுக்குள் சாயங்காலத்து பறவைகளின் இரைச்சல்.

கதவின் பூட்டு விடுபட, டாக்டர் புன்னம் சந்தர் முதல் ஆளாய் நிலா இருந்த அறைக்குள் நுழைந்தார்.

நாங்கள் பின் தொடர்ந்தோம்.

கதவு விலகி வெளிச்சம் அறைக்குள் பாய்ந்ததுமே ஒரு மூலையில் குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்த நிலா வீறிட்டு கத்திக்கொண்டு அறையின் இன்னொரு மூலைக்கு ஓடிப்போய் உடம்பைக் குறுக்கிக்கொண்டு உட்கார்ந்தாள். காதுகளை இறுகப் பொத்திக் கண்களில் உச்சபட்ச பயம் காட்டினாள். உடம்பு நடுங்க, முகம் வியர்த்துக் கொட்டியது.

டாக்டர் புன்னம் சந்தர் என்னிடம் திரும்பினார்.

“நீங்கள் நிலாவிடம் பேச்சுக் கொடுத்துப் பாருங்கள்.”

நான் தயக்க நடைபோட்டு உதட்டில் ஒரு சின்ன சிரிப்பை செயற்கையாய் ஒட்ட வைத்துக்கொண்டு, நிலாவை நெருங்கிக் குனிந்தேன். குரலைத் தொண்டைக்குள் குழைத்தபடி “நிலா...!” என்றேன்.

உறைந்துபோன கண் பார்வைகளோடு என்னையே பார்த்தாள். என்னைப் புரிந்து கொண்டதற்கான அடையாளம் கண்களில் தெரியவில்லை. புதிதாய் என்னைப் பார்ப்பது போல அந்நியப் பார்வை.

நான் இன்னமும் குனிந்து அவளுடைய காதுகளைப் பொத்தியிருந்த கைகளை மெல்லத் தொட்டு விலக்க முயன்றேன்.

முடியவில்லை.

“கையை எடம்மா....!” கொஞ்சம் ஃபோர்ஸை உபயோகப்படுத்திக் கையை இழுக்க முயன்றபோது, சுவரின் மூலைக்குப் போய் ஒரு அட்டைப் பூச்சி மாதிரி ஒட்டிக் கொண்டாள்.

நான் புன்னகையைப் பெரிதாக்கினேன்.

“ஏம்மா பயப்படறே...? நான் ஆர்.கே. அங்கிள். என்னைத் தெரியலையா...?”

“....”

“காதுல இருக்கிற கையை எடுத்துடு பார்க்கலாம்.”

நான் சொல்லிக்கொண்டே நிலாவின் கைகளை மறுபடியும் தொட முயல அவள் வீறிட்டுக் கொண்டே கண்கள் சொருகிக் கொள்ள ஒரு பக்கமாய்ச் சரிந்தாள்.

டாக்டர் புன்னம் சந்தர் சட்டென்று மண்டியிட்டு உட்கார்ந்து நிலாவைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு மிருதுபாஷிணியை ஏறிட்டார்.

“பல்ஸ் வேகமா விழுந்துட்டிருக்கு... ஐ.ஸி. யூனிட்டுக்கு கொண்டு போயிடலாம். ஸ்ட்ரெச்சரை கொண்டு வரச் சொல்லுங்கள்...”

தகவல் போய் இரண்டு நர்ஸ்கள் வேக வேகமாய் ஸ்ட்ரெச்சரை உருட்டிக்கொண்டு வர நிலா அதில் நிர்ச்சலனமாய் கிடத்தப்பட்டாள்.

பார்த்துக் கொண்டிருந்த எனக்கு விழியோரம் லேசாய் நீர் கசிந்தது.



'எவ்வளவு துணிச்சலான பெண்!'

'என் முகத்துக்கு நேரே கையை நீட்டிக் கொண்டு ஏதோ பொதுக் கூட்டத்தில் பேசுகிற மாதிரி என் கதைகளைப் பற்றி விவாதம் செய்யும் அந்த நிலாவை மறுபடியும் என்னால் பார்க்க முடியுமா...?'

டாக்டர்கள் ஸ்ட்ரெச்சருக்குப் பின்னால் போய்க்கொண்டிருக்க என் மனைவி என் தோளைத் தொட்டாள்.

“இனிமே என்னை ஹாஸ்பிடலுக்கு கூப்பிட்டா நான் வரமாட்டேன். நிலாவை இந்தக் கோலத்துல பார்க்கும்போது எனக்கு வயித்தையெல்லாம் பிசைஞ்சு விடுது....”

“வாஸ்தவந்தான்... என்னாலேயே தாங்கிக்க முடியலை. எவ்வளவு புத்திசாலித்தனமா பேசிட்டிருந்த பெண். இப்படி ஒரு இருட்டறைக்குள்ளே வந்துட்டாளே...!”

“நாம வீட்டுக்குப் போகலாங்க... என்னால இந்த ஹாஸ்பிடல்ல இனி ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது.”

ஸ்ட்ரெச்சர் தூரத்தில் போய்க்கொண்டிருக்க, நானும் என் மனைவியும் வராந்தாவுக்கு இறங்கி நடந்து டூவீலர்ஸ் பார்க்கிங்கை நோக்கிப் போனோம்.

“நிலாவோட கண்டிஷனைப் பார்க்கும்போது எனக்கென்னவோ நம்பிக்கையில்லைங்க...”

“அவளுக்கு ஏற்பட்டது சாதாரண அதிர்ச்சியில்லையே? அந்த அதிர்ச்சிதான் மூளையில தப்பு பண்ணியிருக்கு. டாக்டர் புன்னம் சந்தரைப் பார்த்தா கெட்டிக்காரர் மாதிரித்தான் தெரியுது.... பார்க்கலாம்.”

நாங்கள் ஸ்கூட்டரை நெருங்கின விநாடி-

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்

அந்த மாருதி 1000 எங்களுக்குப் பக்கத்தில் வந்து நின்றது.

திரும்பினோம்.

காரிலிருந்து வெங்கடேஷ்வரனும் சௌந்தரமும் கவலை கவ்விய முகங் களோடு இறங்கினார்கள். பரஸ்பரம் மௌனமாய் வணக்கங்களை பரிமாறிக் கொண்டபின் அவர் கேட்டார்.

“நிலாவைப் பார்க்க வந்தீங்களா...?”

“ஆமா...”

“இப்போ எப்படியிருக்கு நிலைமை..?”

“அதே நிலைமை தான்...! நிலாகிட்ட என்னை டாக்டர் பேசச்சொன்னார். பேசிப் பார்த்தேன். அவ என்னை ஒரு அந்நியன் மாதிரி பார்த்து சத்தம் போட்டுட்டு மயக்கமாயிட்டா... ஐ.ஸி. யூனிட்டுக்கு கொண்டு போயிருக்காங்க...”

வெங்கடேஷ்வரனும் சௌந்தரமும் எங்களிடம் விடைபெற்றுக்கொண்டு வேகவேகமாய் ஐ.ஸி. யூனிட்டை நோக்கிப் போனார்கள்.

நான் ஸ்கூட்டரின் லாக்கை விடுவித்தேன். மனசுக்குள் காட்சிகள் சுருண்டன.

'நிலா எப்படி இந்த நிலைமைக்கு ஆளானாள்?'

அவள் சம்பந்தப்பட்ட அந்த கறுப்பு நாட்களின் நிகழ்ச்சிகள் என் மனத்திரையில் ஸ்டில்களாய் நின்று நின்று நகர்ந்தன.

★–★–★

**நி**லா ஒரு புன்சிரிப்போடு கையைக் கட்டிக்கொண்டு நின்றிருக்க, வெங்கடேஷ்வரன் டெலிஃபோனில் ஸ்டேட்ஸிலிருந்த தன் மகன் கிருஷ்ணகாந்தோடு பேசிக்கொண்டிருந்தார்.

“ஆமா...! நிலா இப்ப நம்ம வீட்டுக்கு வந்தாச்சு. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் நிலாவோட அம்மா வந்து சத்தம் போட்டுட்டு போனாங்க... நிலா அசரலை... 'இதுதான் என் வீடு... இவரோட பையனைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்'னு ஸ்ட்ராங்கா சொல்லிட்டா...”

“ஈஸிட்...?”

“இப்போ எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை...! நிலாவை நம்ம வீட்டிலேயே வெச்சுக்கறதா...? இல்லை புத்திமதி சொல்லி அவங்க வீட்டிலேயே கொண்டுபோய் விட்டுடறதா..? இதுக்கு நீதான் ஒருமுடிவு சொல்லணும்... உன்னோட அபிப்பிராயம் என்ன..?”

“அப்பா! நீங்க இப்படி ஃபோன் பண்ணி என்கிட்ட அபிப்பிராயம் கேட்கறதே தப்பு...”

“கிருஷ்ணகாந்த்! நீ என்னடா சொல்றே...?”

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை 12

கவியரசு கண்ணதாசன்
எழுதிய–அவரது
சுயசரிதத்தின்
முக்கிய பக்கங்கள்
உங்கள் முன் விரிகின்றன.
'எப்படி வாழ வேண்டும்
என்பதற்காக அல்ல;
எப்படி வாழக்கூடாது
என்பதற்கான
வழிகாட்டிகள்' இவை....

காரைக் குடியிலிருந்து கொண்டு வந்திருந்த வாடகைக் கார் அங்கே காத்துக் கொண்டிருந்தது.

சிவப்பிரகாசமும், அவனும் அதில் ஏறிக்கொண்டார்கள்.

அவனது இடக்கை மூட்டு இறங்கியிருந்தது.

லால்குடி ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அங்கே வந்து சேர்ந்த முதல் ஆள் அவன்தான்.

லால்குடி ஆஸ்பத்திரி டாக்டர் மிக உயர்ந்த மனிதர்.

டாக்டர்களுக்கு இருக்கவேண்டிய கருணை முழுவதும் பெற்றவர்.

அதுவும் ஏழை நோயாளிகளை அவர் கவனிக்கின்ற முறைபற்றி லால்குடி வட்டாரம் முழுவதுமே புகழ்ந்து பேசும்.

அவருக்கு அமைந்த கம்பவுண்டரும் அப்படியே.

அவர்கள் இருவரும் அவனிடம் வந்தார்கள்.

அவனால் இடக் கையைத் தூக்கவே முடியவில்லை.

பிறகு சட்டையையும், பனியனையும் வெட்டி எடுத்தார்கள்.

முட்டைத் தூக்கி நிறுத்தி கைக்கு ஒரு தொட்டில் போட்டார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு பொலிஸ் வேன் வந்தது.

காயம் பட்டவர்கள் சிலரை அதில் ஏற்றி வந்தார்கள்.

ஒரு தொண்டனுக்கு வயிற்றுச் சதையிலேயே குண்டு தேங்கியிருந்தது.

அதன் பாதிப் பகுதி வெளியே தெரிந்தது.

அடிதடியால் மண்டை உடைந்தவர்களும் இரத்தம் வழிய வந்தார்கள்.

ஒரு தொண்டனுக்கு மட்டும் காயம் மிகப் பலமாக இருந்தது.

அவனைத் திண்ணையில் படுக்க வைத்தார்கள்.

அணித்தலைவன் என்ற முறையில் காயமடைந்தவர்களை அவன் சந்தித்தான்.

அந்தத் தொண்டர்களின் தீவிர உணர்ச்சி மறக்க முடியாதது.

தங்கள் வலியையும் மறந்து, தலைவன் உடம்பு எப்படி இருக்கிறது என்றே அவர்கள் விசாரித்தார்கள்.

அவர்களிலேயே மிகக் குறைவான காயம் அவனுக்குத்தான்.

அது அவனுக்கே வெட்கமாக இருந்தது.

இன்னும் கொஞ்சம் காயம் பட்டிருக்கக் கூடாதா என்று ஏங்கினான்.

படுகாயமடைந்த சிலரைத் திருச்சி பெரிய ஆஸ்பத்திரிக்குத் தூக்கிப்போயிருப்பதாகச் சொன்னார்கள்.

சந்தானம் ஜோசப் என்ற பதினாறு வயது இளைஞனுக்கு இடக்கை துண்டிக்கப்பட்டு விழுந்துவிட்டது.

சுந்தரராஜன் என்ற பையனுக்கு வலக்கையில் ஒரு விரல் துண்டிக்கப்பட்டு விட்டது.

துப்பாக்கிப் பிரயோகம் நடந்து கொண்டிருந்தபோது அவன் இரண்டு கைகளையும் உயரத் தூக்கி, “தோழர்களே! அமைதி! அமைதி!” என்று சத்தம் போட்டானாம். ஒரு குண்டு அவன் விரலைக் கொண்டுபோய் விட்டதாம்.

இந்தச் செய்திகளை அவர்கள் சொன்னார்கள்.

லால்குடி ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தவர்களில் மண்டை உடைந்தவர்களிலொருவர் சேலம்-வேலூரைச் சேர்ந்த சதாசிவம் என்பவர்.



பதினெட்டு வயது இளைஞரான அவர் மிகவும் உற்சாகத்தோடு காணப்பட்டார்.

“தலைவரே! உங்களுக்கு ஆபத்தில்லை என்பதில்தான் எங்களுக்குப் பெருத்த சந்தோஷம்!” என்றார் அவர்.

அவன் கண்களில் கண்ணீர் பெருகிற்று.

சிறிது நேரத்தில் அன்பில் தர்மலிங்கம்–அவர்தான் திருச்சி மாவட்டச் செயலாளர்–அங்கே வந்தார்.

ரயிலுக்குள் குண்டு பாய்ந்து, கேசவன், நடராசன் என்ற இருவர் மாண்டுபோன செய்தியை அவர் தெரிவித்தார்.

அவர்கள் யாரோ பிரயாணிகள்.

கட்சிக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை.

தர்மலிங்கம் எல்லோரையும் விசாரித்தார்.

அந்த நேரத்தில் ஒருபொலிஸ் ஜீப் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தது.

தீச்சட்டி-கோவிந்தன் என பெயர் பெற்ற விசுவநாத நாயர் திருச்சி ஜில்லா பொலிஸ் சூப்பிரண்டெண்டாக இருந்தார்.

அவர்தான் அந்த 'ஜீப்'பில் வந்திருந்தார்.

அவர் நேரே டாக்டரிடம் போய், டால்மியாபுரத்தில் காயம்பட்டு வந்தவர்கள் யார் யார் என்று கேட்டார். அவர் அங்கே கேட்டுக்கொண்டிருக்கும்போதே கம்பவுண்டர் அவனிடம் வந்து, “நீங்கள் கைதாக விரும்புகிறீர்களா?” என்று கேட்டார்.

“விரும்பினால் இங்கேயே இருங்கள். இல்லையென்றால் எழுந்து போய்விடுங்கள்!” என்று அவர் சொன்னார்.

அவன் போகத் தயாராக இல்லை.

கைதாவது தியாகம் என்பதற்காக அல்ல. வெளியே போனல் அவமானம் என்பதற்காக!

டி.எஸ்.பி. உடனே தர்மலிங்கத்திடம் போனார்.

“நீ யார்!” என்று கேட்டார்.

“திருச்சி மாவட்ட தி.மு.க. செயலாளர்!” என்றார் தர்மலிங்கம்.

“அப்படியென்றால்...?” டி.எஸ்.பி. கேட்டார்.

“ஜில்லா கலெக்டர் மாதிரி!” என்று பளிச்சென்று பதில் சொன்னார் தர்மலிங்கம்.

அவரை விட்டுவிட்டு அவனிடம் வந்தார் டி.எஸ்.பி.

நெருங்கி வந்த டி.எஸ்.பி. அவனைக் கேட்டார்.

“நீ யார்?”

“கண்ணதாசன்.”

(சரிதம் தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 24

**ஆ**ண்டவர் இஸ்ரயேல் மக்களுக்காக வாக்களித்திருந்த கானான் தேசத்தை அவர்கள் நெருங்கி வந்தனர். அந்நாட்டில் ஏற்கனவே குடியிருந்த கானானியர், எமோரியர், இத்தியர், பெரிசியர், இவ்வியர் மற்றும் எபூசியர் ஆகிய இனத்தவர்கள் இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டுக்குள் வருவதை விரும்பவில்லை. கானானுக்குச் செல்லும் வழியிலிருந்த மக்களும், பெருங் கூட்டமாகத் திரண்டு வந்த இஸ்ரயேல் மக்களை தங்கள் பிரதேசங்களுக்குள் அனுமதிக்க மறுத்தனர்.

ஆண்டவரின் பேரருளால் அம்மக்களின் எதிர்ப்புகளை முறியடித்து கானான் நாட்டுக்குள் இஸ்ரயேல் மக்கள் ஊடுருவலாயினர். இடைக்கிடையே மக்கள் பலதரப்பட்ட குழப்பங்களிலும் ஈடுபட்டு கர்த்தரின் கோபத்துக்கு ஆளாயினர்.

சில பிரதேசங்களைத் தாண்டிச் செல்ல அப்பிரதேசத்தை ஆண்ட மன்னனோ அல்லது தலைவனோ அனுமதி மறுத்தால் போர் மூளும். கர்த்தரின் கிருபையால் இஸ்ரயேல் வீரர்களே வெற்றியீட்டினர். வீண் போரைத் தவிர்ப்பதற்காக சில இடங்களைத் தவிர்த்து சுற்றுப் பாதையில் செல்லவேண்டியிருந்தது.

ஏதோம் என்ற நாட்டைச் சுற்றிப் போகும் போது செங்கடல் சாலை வழியாக மக்களை மோசே வழிநடத்திச் சென்றார். இதனால் மக்கள் முணுமுணுக்கத் தொடங்கினர். நல்ல உணவோ, தண்ணீரோ கிடைக்கவில்லையே என்று மோசேயிடம் முறையிட்டனர். வேண்டுமென்றே தங்களை மோசே தொல்லைகளுக்குள் மாட்டிவிட்டதாகக் கோபத்தில் கொதித்தனர்.

## குடிமக்கள் கணக்கெடுப்பு!



### கொள்ளிவாய்ப் பாம்புகள்

கர்த்தருக்கு இத்தகைய மக்கள் மீது கடுங்கோபம் உண்டாயிற்று. கொள்ளிவாய்ப் பாம்புகளை மக்கள் மீது ஏவினார். அப்பாம்புகள் அதிருப்தியாளர்களைத் தேடிச் சென்று கடித்தன. கடிபட்ட மக்கள் துடிதுடித்துச் செத்தனர். மக்களுக்காக மன்னிப்புக் கோரி ஆண்டவரை மோசே துதித்தார். ஆண்டவர் மனமிரங்கியவராக, மோசேயிடம்:

"மோசே! வெண்கலத்தால் ஒரு கொள்ளிவாய்ப் பாம்பின் உருவத்தைச் செய்து ஒரு கோலில் பொருத்தி உயரத்தில் வைப்பாயாக. பாம்பிடம் கடிபட்டவன் அப்பாம்பின் உருவத்தைப் பார்த்ததும் பாம்பின் விஷம் இறங்கி பிழைத்துக்கொள்வான்!" என்று கூறினார். மோசேயும் வெண்கலத்தால் பாம்பொன்றை உருவாக்கி கம்பத்தில் பொருத்திவைத்தார். இதனால் விஷம் நீங்கி மக்கள் பிழைத்துக் கொண்டனர்.

பெகோர் என்ற இடத்துக்கு இஸ்ரயேல் மக்கள் வந்தனர். அங்கு வாழ்ந்த மக்களுக்கு அடிபணிந்து அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கு ஏற்றாற்போல் நடக்கத் தொடங்கினர். அங்குள்ள பெண்களுடனும் முறைகேடாக நடக்கலாயினர். ஆண்டவர் இதனால் சினங்கொண்டு கொள்ளை நோயை ஏற்படுத்தினார். கர்த்தரின் கட்டளையை மீறிய மக்கள் ஆயிரக்கணக்கில் மாண்டனர்.

குரு ஆரோனின் மகன் எலயாசரின் புதல்வனான பினகாசு, முறைகேடாக நடந்த இஸ்ரயேலிய இளைஞன் ஒருவனையும் வேற்றினப் பெண்ணையும் தன் ஈட்டியினால் குத்திக் கொன்றான். இது போன்ற செயல்கள் சில நடைபெற்று இஸ்ரயேல் மக்களில் நீதிவான்களால் பலர் தண்டிக்கப்பட்டமையினால் கர்த்தரின் சினம் அடங்கிற்று.

கர்த்தரின் கட்டளைகளைமீறி நடந்தவர்கள் பல்லாயிரக்கணக்கில் மாண்டொழிந்தனர். இதனைத் தொடர்ந்து எஞ்சியிருக்கும் இஸ்ரயேல் மக்களில் குலவாரியாக-இருபது வயதுக்கு மேற்பட்ட ஆண்களைக் கணக்கெடுக்கும்படி ஆண்டவர் மோசேயிடம் கேட்டுக்கொண்டார்.

**கி**றிஸ்துவுக்கு முன் 1700ம் ஆண்டுகளில் யாக்கோபுவின் மகனான யோசேப்பு எகிப்துக்கு வந்து சேர்ந்தார். ஆண்டவரின் கிருபையினால் எகிப்து நாட்டுப் பார்வோனின் நட்புக்கிடைத்தது. அந்நாட்டின் ஆளுநராகப் பதவி வகித்தார். எகிப்து நாட்டை வாட்டிய பெரும் பஞ்சத்திலிருந்து மக்களைப் பாதுகாத்தார். நன்றிக்கடனாக பார்வோன் யோசேப்பின் தந்தையாரான இஸ்ரயேலர் என்னும் யாக்கோபுவையும் அவர் வழி மரபினரையும் எகிப்துக்கு அழைத்து அவர்களுக்கு நிலபுலன்களைக் கொடுத்து ஆதரித்தான். ஆனால் யோசேப்பின் மறைவைத் தொடர்ந்து, பின்வந்த காலங்களில் எகிப்தை ஆட்சி புரிந்த பார்வோன் மன்னர்கள், படிப்படியாக இஸ்ரயேல் மரபினரை அடிமைகளாக்கிக் கொடுமைப்படுத்தினர்.

மோசே, இஸ்ரயேலரை எகிப்திலிருந்து விடுதலையாக்கி, கர்த்தரால் அவர்களுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட கானான் தேசத்துக்கு அழைத்துச் சென்றார். எண்ணற்ற இடையூறுகளைத் தாண்டி கானான் தேசத்தை வந்தடைந்த இஸ்ரயேல் மக்கள் சமுதாயம் பன்னிரண்டு குலங்களைக் கொண்டதாக இருந்தது.

### கணக்கெடுப்பு

மோசேயும் ஆரோன் மகன் குரு எலயாசரும் கர்த்தரின் கட்டளைப்படி மக்களைக் கணக்கெடுக்கத் தலைப்பட்டனர். எரிக்கோவுக்கு எதிர்ப்புறமாகவுள்ள யோர்தான் நாட்டுக்கு அடுத்திருந்த மோவாபு என்ற சமவெளியில் வைத்தே இக்கணக்கெடுப்பு இடம்பெற்றதாக பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டபடி இஸ்ரயேலின் தலைமகனாக ரூபன் கணிக்கப்பட்டு அவர் வழிவந்தோர் மூத்த குடிகளாக ஆக்கப்பட்டனர். ஒவ்வொரு குலத்திலும் இருபது வயதுக்கு மேற்பட்ட ஆண்களின் எண்ணிக்கை மட்டுமே திருவிவிலியத்தில் இடம்பெற்றுள்ளது. அந்த எண்ணிக்கை வருமாறு:

<u>ரூபன்</u> வழி மரபினர்- 43,730 பேர்
<u>சிமியோன்</u> வழி மரபினர்- 22,200 பேர்.
<u>காத்து</u> வழி மரபினர்- 40,500 பேர்.
<u>யூதா</u> வழி மரபினர்- 76,500 பேர்.
<u>இசக்கார்</u> வழி மரபினர்- 64,300 பேர்.
<u>செபுலோன்</u> வழி மரபினர்- 60,500 பேர்.
<u>மனாசே</u> வழி மரபினர்- 52,700 பேர்.
<u>எப்ராயீம்</u> வழி மரபினர்- 32,500 பேர்.
<u>பென்யமின்</u> வழி மரபினர்- 45,600 பேர்.
<u>சூகாம்</u> வழி மரபினர்-64,400 பேர்.
<u>ஆசேர்</u> வழி மரபினர்- 53,400 பேர்.
<u>நப்தலி</u> வழி மரபினர்- 45,400 பேர்.

### காணிப் பங்கீட்டு முறை

கானான் தேசத்துக்குள் போய்க் காலடியெடுத்து வைப்பதற்காகத் தயாராக இருந்த இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்தில் மொத்தம் ஆறு இலட்சத்து ஓராயிரத்து எழுநூற்று முப்பது பேர் இருந்தனர்.

கணக்கெடுப்பு முடிவடைந்ததும் ஒவ்வொரு குலத்தவரின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி நாட்டைப் பங்கிட்டு அளிக்குமாறு கர்த்தர் கேட்டுக் கொண்டார். திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்தே காணிகள் உரிமைச் சொத்தாக்கப்படவேண்டும் என்றும் ஆண்டவரின் கட்டளை அமைந்தது.

பாலைநிலத்தில் பயணம் செய்யும்போது இறந்துபோன சில குலத்தலைவர்களின் குடும்பங்களுக்கும் உரிமை முறையினை ஆண்டவர் வகுத்துக் கொடுத்தார். அவர்களுக்கும் காணிகள் பின்னர் உரிமையாக்கப்பட்டன.

இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்துக்காக மோசே அளப்பரிய சேவைகளைப் புரிந்தார். ஆனால் அம்மக்களோ மோசேக்கு விசுவாசமாக நடக்கவில்லை. கர்த்தரின் கட்டளைகளையும்கூட அம்மக்களில் பலர் மீறவே செய்தனர். எகிப்திலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்காக ஆண்டவர் மோசே மூலம் அருஞ்செயல்கள் பலவற்றைச் செய்தருளினார். கானான் நோக்கிப் பயணம் மேற்கொண்ட நாற்பதாண்டுக் காலத்திலும் பல புதுமைகளை ஆண்டவர் செய்தார். இருப்பினும் இஸ்ரயேல் மக்களின் ஏகோபித்த நம்பிக்கையைப் பெறமுடியவில்லை. இதற்கான தண்டனைகளையும் மக்கள் பெற்றனர்.

மக்கள், கர்த்தர் மீது குறைகூறும் காலங்களில் அவர்களுக்காக ஆண்டவரிடம் மோசே மன்னிப்புக் கோரினார். சில சந்தர்ப்பங்களில், மக்கள் கொடுத்த தொல்லைகளினால், கர்த்தரின் மேன்மையை நிலைநிறுத்த மோசேயால் முடியாமற் போய்விட்டது.

சீன் பாலை நிலத்தில் மெரிபத்து- காதேசு நீர்நிலைக்கருகில் இஸ்ரயேல் மக்கள் வந்து சேர்ந்தபோது மக்கள் ஆண்டவரையும் மோசேயையும் தூஷிக்க ஆரம்பித்தனர். இதனால் மனமொடிந்துபோன மோசே, இஸ்ரயேல் மக்களுடன் சேர்ந்து கர்த்தரை நொந்து கொண்டார். இந்தச் சிறு குற்றத்துக்காக கர்த்தர் மோசேக்கு ஒரு மாபெரும் தண்டனை தந்தார். தன்மீது அளவற்ற அன்பும் விசுவாசமும் கொண்டவரான மோசேயின் ஒரு சிறு தவறைக்கூட ஆண்டவரால் பொறுக்க முடியவில்லை.

*தன்னுடைய நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமான- சாந்த சொரூபியான- மோசேயைத் தண்டிக்க ஆண்டவரே தீர்மானித்தாரென்றால் எம்மைப்போன்றார் செய்யும் பாபச் செயல்களுக்கு எத்தகைய தண்டனைகள் கிடைக்குமோ?*

**ஆ**ண்டவர் மோசேயிடம்,

"மோசே! எரிக்கோவுக்குச் சென்று அபாரிம் மலையிலுள்ள நெபோமலை உச்சிக்குப் போய்ச் சேர்ந்து, இஸ்ரயேலருக்கு நாம் வாக்களித்த நாட்டைப் பார். அந்த நாட்டை தொலைவிலிருந்த வண்ணம் பார்ப்பதற்கு மட்டுமே உமக்கு உரிமையுண்டு, ஆனால் அந்த நாட்டிற்குள் காலடி எடுத்து வைக்கும் பாக்கியம் உமக்குக் கிடையாது. சீன் பாலை நிலத்தில் மக்களுடன் சேர்ந்து எமக்குத் துரோகம் செய்துவிட்டீர். எம்மைப் புனிதப்படுத்தத் தவறிவிட்டீர். இக்குற்றத்துக்கான தண்டனையாகத்தான் கானான் நாட்டுக்குள் உம்மால் செல்ல முடியாத நிலையினை ஏற்படுத்தியுள்ளேன். உமக்குப் பதிலாக மக்களை வழி நடத்துவதற்கு உமது உதவியாளராகவிருக்கும் யோசுவாவை நியமிப்பாயாக!" என்றார்.

(தொடர்ந்து வரும்)

## இராஜகுமாரன்

**திருமறை (22) விடை:** உயிர் பிரிந்துவிடும்.

**பரிசு பெறுவோர்:**

1. **மு.நேசம்மா,** நடராஜானந்தா வீதி, காரைதீவு-02.
2. **எஸ். யசோதினி,** கோயில் வீதி, மூதூர்-03.
3. **எஸ். சுதா,** 12, நுவரெலிய வீதி, கம்பளை.
4. **மா. கவிதா,** 113/46, மீதொட்டுமுல்ல, வெல்லம்பிட்டிய.
5. **ஏ.ஆர். டானியல்,** 255/50, சி.டி.எல். பெர்னாண்டோ மாவத்தை, கண்டி.

**திருமறை 24 வினா:-** இஸ்ரயேல் சமுதாயத்தில் எத்தனை குலங்கள் இருந்தன?

செப்டெம்பர்.05க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 24—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# வீடுவரை கிலாரி

காதிலை பூ கந்தசாமி



**கிளின்ரன்:** மோனிகா மோனிகா
சொக்கவைக்கும் மோனிகா
காதலிலே நீ எந்த வகைகூறு
சைவமா, அசைவமா?
கிழங்கா, இறைச்சியா கூறு...

**கிலாரி:** ம்ஹூம், சொக்கவைத்த மோனிகா சிக்கவைத்துவிட்டாளே! இப்போதுமா அவள் நினைப்பு? இந்த வயதிலும் இது தேவைதானா?

**கிளின்ரன்:** கண்ணே டியர் கிலாரி! வயாக்ராவையே உலகுக்கு வாரிவழங்கும் நாட்டில் இருந்துகொண்டா இந்தக் கேள்வியை தொடுக்கிறாய்? வந்துவிட்டது கண்ணே வயாக்ரா! இனி வயாக்ரா வரும் முன்னே, வாலிபம் வரும் பின்னே!

**கிலாரி:** ஐயைய்யோ... உங்கள் பதவிக் காலம் முடிந்தபின்னராவது அந்த கன்றாவியை கண்டுபிடித்திருக்கக் கூடாதா?

**கிளின்:** என் பதவிக்காலம் அத்தனை விரைவாக முடியும் என்றா நினைக்கிறாய்?

**கிலாரி:** அதுதான் கவிழ்த்துவிட்டாளே? நீங்கள் அவளைக் கவிழ்த்தீர்கள், அவள் உங்களை கவிழ்த்துவிட்டாள். ஆதாரத்தை விட்டு வைக்காவிட்டாலாவது சேதாரம் இல்லாமல் தப்பியிருக்கலாம்!

**கிளின்:** (சோகமாக நினைத்துப் பார்க்கிறார்)
ஆடிய ஆட்டம் என்ன
கூடிய கூட்டம் என்ன
கூடியே முடிந்த பின்னர்
கோட்டில் கூறிய வார்த்தையென்ன?
('ஓ மை கோட்' என்று தேம்புகிறார்)
வீடுவரை கிலாரி
வீதிவரை பவுலா
ஒஃபீஸில் மோனிகா
கடைசிவரை யாரோ?

**கிலாரி:** புலம்பியது போதும். உமக்குப் பின்னால் நான் ஜனாதிபதியாகலாம் என்றிருந்தேன். அந்தச் சண்டாளி என் ஆசையிலும் மண் அள்ளிப்போட்டுவிட்டாளே! அவள் சண்டாளியாக மாறாமல் சக்களத்தியாக இருந்துவிட்டுப் போயிருக்கலாம். நான் வேண்டாம் என்றா சொல்லப்போகிறேன்.

**கிளின்:** கண்ணே மைடியர், அவளை திட்டாதே! வசையைக் கொட்டாதே! என் காட் தாங்காது!

**கிலாரி:** ஓ கோட், இப்போதுகூட அவள்மீது உள்ள ஆசை போகவில்லையா? அப்படி என்னதான் சொக்குப் பொடி வைத்திருக்கிறாள் அந்தக்கள்ளி?

**கிளின்:** அவள் பார்வை ஒரு வரம்
இனிவரும் முனிவரும்
தடுமாறும் கனிமரம்!

**கிலாரி:** ஸ்டொப் இட்! ஒரு ஜனாதிபதி பேசுகிற பேச்சா இது?

**கிளின்:** சாண்பிள்ளையானாலும் ஆண் பிள்ளை என்பார்கள். ஜனாதிபதியே ஆனாலும் நானும் ஆண் பிள்ளைதானே!

**கிலாரி:** இந்த வீறாப்புக்கு ஒன்றும் குறைச்சலில்லை. குப்புறவிழுந்து விட்டீர்கள், மீசையில் மண்படவில்லை என்றால் யார் நம்பப்போகிறார்கள்!

**கிளின்:** நம்பத்தானே வேண்டும். எனக்குத்தான் மீசையே இல்லையே ஹி.ஹி.ஹி.

**கிலாரி:** வழிகிறது துடைத்துக் கொள்ளுங்கள்.

**கிளின்:** வழிந்ததால்தானே மாட்டிக்கொண்டேன்.

**கிலாரி:** ஆதரவை திரட்ட என்ன செய்யப் போகிறீர்கள்?

**கிளின்:** சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு ரி.வியில் பேசிமுடித்துவிட்டேன். அடுத்ததாக ஈராக்கை மிரட்டலாமா? இந்தியாவை மிரட்டலாமா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

**கிலாரி:** எங்காவது குண்டைக் கிண்டைப் போட்டாவது, எம் தலையில் துண்டு போட்டுக்கொண்டு திரிவதிலிருந்து தப்பினால் போதும்!

**கிளின்:** யெஸ் கண்ணே! இப்போதெல்லாம் தங்கள் தங்கள் தேவைகளுக்காக எங்காவது எதன் மீதாவது குண்டுபோடுவது தான் பாஷன் ஆகிவிட்டது.

**கிலாரி:** கற்றுக்கொடுப்பது நாம்தானே.

**கிளின்:** யெஸ்! யெஸ்! அதில்பார் டியர், கென்யாவிலும், தான்சானியாவிலும் வித்தையை எங்களிடமே திருப்பிக் காட்டிவிட்டார்கள்!

**கிலாரி:** தன்வினை தன்னைச் சுடும். ஓட்டப்பம் வீட்டைச் சுடும்.

**கிளின்:** சூப்பர்! இது யார் சொன்னது?

**கிலாரி:** (கோபமாக) ஏன் நான் சொல்லக் கூடாதா?

**கிளின்:** ஹி.ஹி.ஹி... ஏன்...ஏன் சொல்லக் கூடாது, எத்தனையோ பெண்கள் என்னைப் பற்றி என்னென்னவோ சொல்லும் போது நீ ஏன் சொல்லக்கூடாது? சொல்லு கண்ணே சொல்லு! ஆனால் எதையும் போய் கோர்ட்டில் சொல்லிவிடாதே ஹி.ஹி.ஹி...!






படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (QD/21/NEWS/98)


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

## தலைநகரில் தங்கத்தேர்




↑ கொழும்பு கொம்பனித்தெரு திருவருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் தங்கத் தேரோட்டம் கடந்த ஆகஸ்ட் 20ம் திகதியன்று இடம்பெற்றது.

யாழ் நல்லூர் கந்தசாமி கோவில் தேர்த்திருவிழா நடைபெறும் அன்றைய தினம் கொழும்பிலும் தேர்த்திருவிழா இவ்வாலயத்தில் சில ஆண்டுகளாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலேயே உருவாக்கப்பட்ட முதலாவது தங்கத் தேர் இதுவாகும். யாழ். மயிலிட்டி சரவணன் கவின் கலையகத்தின் பொறுப்பாளர் திரு.சரவணமுத்து ஜெயகாந்தன் இத்தேரினை வடிவமைத்திருக்கிறார். வெளிநாடுகளிலும் இவரால் பல தேர்கள் உருவாக்கித்தரப்பட்டுள்ளன.

தலைநகரில் தமக்கு ஏற்படும் பங்கம் தீர, தங்கத்தேரில் பவனி வந்த முருகனிடம் பக்தர்கள் வேண்டியிருப்பர். பாவம் முருகன், அவருக்கே நாட்டில் பாதுகாப்பில்லை. ஆலயங்களும் தானே குறி தவறிய தாக்குதல்களால் அவதிப்படுகின்றன.

## மாற்றம்



↑ வண்ணத்துப் பூச்சி குடும்பத்தைச் சேர்ந்த அழகான அந்துப் பூச்சி இதுவாகும். ஒரு செடியின் சிறு கொம்பின் மீதமர்ந்து முட்டைகளை இடுகிறது.

அந்துப் பூச்சியின் புழுக்கள், வண்ணத்துப் பூச்சிகளின் மயிர்க்குட்டிகளைப் போல் அடர்த்தியான ரோமங்களைக் கொண்டதாக இருக்கும். இலைகளையே உண்ணும். பூச்சியின் அளவையும் எடையையும் பார்க்கிலும் பல மடங்கு உணவை உண்டு கொழுக்கும்.

எந்த நேரமும் உணவினை உட்கொள்வதால் உடல் அளவுக்கு மீறிப் பருமனாகிவிடும். அந்நிலையில் அதனால் மேலும் உணவினை உண்ண முடியாமற் போய்விடும்.

ஆண் பூச்சி இணை தேடும் காலத்தில் ஒரு வகையான வாசனையைப் பரப்பிக் கொண்டு பறந்து திரியும் இதனை மோப்பம் பிடித்து பெண் பூச்சி பின் தொடர்ந்து செல்லுமாம். பார்த்தீர்களா சிக்னல் கொடுக்க மனிதக் காதலர்களுக்கு மட்டும்தான் தெரியுமா என்ன?

## ஜாக்கிரதை

↓ பார்வையே பயமுட்டுகிறது அல்லவா?

இது ஒருவகை காட்டுப் பூனை. இதனை 'லிங்ஸ்' என்று மேலத்தேயங்களில் கூறுவார்கள். ஆபிரிக்கா, வட அமெரிக்கா, வட ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மலைகளில் அடர்ந்த காடுகளில் வாழ்கின்றன.

தோற்றத்தில் சிறுத்தைப் புலிபோல் காணப்பட்டாலும் உருவம் சிறிதுதான். இவற்றில் நன்றாக வளர்ந்த பூனை 20 கிலோ எடைவரை இருக்கும். அடர்த்தியான மிருதுவான நீளமான ரோமங்கள் உடலெங்கும் செறிந்து காணப்படும். இவற்றின் காதுகள் மேல் நோக்கி கூர்மையாகக் காணப்படும்.

இது காடுகளில் வாழ்ந்தாலும் அக்காடுகளை ஒட்டியுள்ள பண்ணைகள் கோதுமை வயல்கள் ஆகியவற்றில் இரவு வேளைகளில புகுந்து உலா வரும். இந்த வகையில் இவை பண்ணையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் உதவுகின்றன. பயிரினங்களின் வேர்களைப்பிடுங்கி அழிக்கும் முயல்கள், எலிகள் போன்றவற்றை வேட்டையாடி உண்டு விடுகின்றன.

சில சமயங்களில் குள்ள நரிகளையும் பிடித்துத் தின்றுவிடும். குள்ள நரிகளுக்கு எப்போதுமே ஆபத்துத்தான். பனிபடர்ந்த மலைகளில் வேகமாக ஓடுவதற்கேற்றவாறு இவற்றின் கால்கள் சிறப்பாக அமைந்துள்ளன. மலைகளிலுள்ள இடுக்குகளிலும் மரப்போறைகளிலும் வாழும். மரங்களில் ஏறி கிளைகளில் கை கால்களை அகலமாகப் பரப்பி ஓய்வெடுக்கும். ஒரு தடவையில் ஒன்று முதல் ஐந்து குட்டிகளை ஈனும். இக்குட்டிகள் சாதாரணமாக வீட்டு வளர்ப்புப் பூனைக் குட்டிகளைப் போலவே காணப்படும்.



## சொகுசு



அமெரிக்காவின் நியுயோர்க் நகரின் மூலை முடுக்குகளிலெல்லாம் சிரமமெதுவுமின்றி ஓடித்திரிகிறது 32 அடி நீளமான இந்த சொகுசுக் கார். 16 இருக்கைகளைக் கொண்ட இரு வரிசைகள் பொருத்தப்பட்டுள்ள இவ்வண்டியில் சகல நவீன வசதிகளும் உள்ளன.

புருக்லினைச் சேர்ந்த ஃபிராங்டி லூசா என்பவர் இவ்வண்டியை வடிவமைத்துள்ளார். இந்த வண்டிக்குள் ஒரு குட்டி மதுபான சாலையுமுண்டு. தரை பளிங்கினாலானது. தொலைக்காட்சிப் பெட்டிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

32 பேர் சொகுசாகப் பயணம் செய்யக் கூடிய இவ்வண்டியை புதிய மணமக்கள் தமது தேனிலவைக் கழிக்க வாடகைக்கு எடுக்கின்றனராம். குட்டி மாநாடுகள் நடத்தவும் குடும்ப உறவினர்கள் ஒன்று சேர்ந்து விருந்து வைபவங்களை நடத்தவும் இவ்வண்டிகள் பயன்படுகின்றனவாம். ஒரு மணி நேர வாடகை ஆக 250 டொலர்தான்.

நமது நாட்டு நாணயப்படி, ஆக 16 ஆயிரத்து 750 ரூபாய்கள். காருக்குள் உள்ள பார்தான் (மதுபான விடுதி) படத்தில் காணப்படுகிறது.

## முதலிடம்



← இந்திய கிரிக்கெட் அணியில் பாய்ந்துள்ள புது இரத்தம் இள இரத்தம் அஜித் அகர்கார். வந்த வேகத்திலேயே பின்னி எடுக்கிறார்.

இந்த ஆண்டு அதிக விக்கெட்டுக்களைச் சாய்த்த வீரர் என்ற பெருமையுடன் பந்து வீச்சாளர்களில் முதலிடத்தில் இருக்கிறார்.

ஸ்ரீநாத்துக்கு அடிக்கடி ஏற்படும் தோள்மூட்டு வலியால் இந்திய அணியும் நொந்துபோயிருந்தபோது வந்தார் அகர்கார். குறுகிய காலத்திற்குள் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் என்று உலக சாதனையும் படைத்திருக்கிறார்.

புதியவர்கள் சிலர் வந்த வேகத்தில் தூள் கிளப்பிவிட்டு, பின்னர் மந்தகதியில் விளையாடி முகவரி இல்லாமல் போனதுண்டு. அகர்கார் அந்தப் பட்டியலில் சேரவில்லை. தொடர்ந்து சோபிக்கிறார்.

மும்பாயைச் சேர்ந்த 20 வயதான அஜித் அகர்கார் இந்திய 'ஏ' அணியில் விளையாடி பின்னர் தேசிய அணியில் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பிடித்தவர்.

இவர் விளையாடத் தொடங்கிய முதல் 15 ஒருநாள் போட்டிகளில் மொத்தம் 36 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இதற்குமுன் 15 ஒரு நாள் போட்டிகளில் 34 விக்கெட்டுக்களை வீழ்த்தப்பட்டதுதான் உலக சாதனையாக இருந்தது. மேற்கிந்தியத் தீவின் வேகப்பந்து வீச்சாளர்களான கோர்ட்லி அம்புரோசும் ஒட்டிஸ் கிப்ஸனும் இந்தச் சாதனையைப் புரிந்தவர்கள்.

அகர்கார் இலங்கை சுதந்திரக் கிண்ணப் போட்டித் தொடரில் 5 போட்டிகளில் மொத்தம் 12 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

அது மட்டுமன்றி இறுதிப் போட்டியில் இலங்கை அணியின் முக்கிய வீரர்களான சனத் ஜயசூரிய, ரொமேஷ் களுவித்தாரண, அரவிந்தடி சில்வா, அர்ஜுன ரணதுங்க ஆகியோரது விக்கெட்டுக்களை வீழ்த்தி, இந்திய அணியின் வெற்றியைச் சலபமாக்கி, சுதந்திரக் கிண்ணத்தை வெற்றி கொள்ளக் காரணமாகவிருந்தார்.

அகர்கார் கடக்கவேண்டிய வெற்றிப் படிகள் இனி நீளும்.

## மூன்றாவது பிறந்ததின வாழ்த்து



### இனியமகள் லட்சணி 23.07.1998

மானிப்பாய நவாலியைச் சேர்ந்த திருநாவுக்கரசு-அகிலேஸ்வரி தம்பதியரின் முதல்புத்திரி இனியமகள் லட்சணி தனது மூன்றாவது பிறந்ததின நதை 23.07.1998 இல் கலிஸ சூரிச்சிலுள்ள தனது இல்லத்தில் மிக எளிமையாகக் கொண்டாடினார்.

இவளை அப்பா, அம்மா, தங்கை தாரிணி, பிரவீன்-பிரேன் அண்ணாமாரோடு சித்தப்பா குடும்பத்தினர், மஞ்சு அக்காவோடு ஜோன்சன் மாமா, காந்தன் மாமா குடும்பத்தினர், விந்தன் மாமா குடும்பத்தினர், ராஜா-ஆனந்தன்-நேசன்-சலீம்-தவ்லா-ஜெயா-குகன் மாமாமார், இலண்டன் விந்தன் அண்ணா, ஜெர்மன் கிருபா அண்ணா, இததாலி ஞானமமாமா, தாயகத்திலுள்ள புவனேஸ்வரி அத்தை குடும்பத்தினர், குஞ்சு அத்தை-மாமா, குடும்பத்தினர் அப்பப்பா, அப்பம்மா, அகிலேஸ்-விக்கினேஸ் பெரியம்மாமார் குடும்பத்தினர் அனைவரும் "பூமியில் நிமிர்ந்து புது நடை போட்டு பூ மகளே வாழ்க!" என்று வாழ்த்தி மகிழ்கிறார்கள்.



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காவிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 23, வெல்பார, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஆகஸ்ட் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.